www.padippakam.com
தமிழ் - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ஜூன்.26 ஜூலை.02,1994
ரூபா 9/00


# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 56

## புலிகளை கண்டுவருவோர் கொண்டு வரும் செய்திகள்!

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## தங்களை-தாங்களே ஏமாற்றிக்கொள்ளும் தொண்டாவும்-அஷ்ரப்பும்



ராஜதந்திரி-அரசியல் அலசல்



புதிய படங்களோடு சினிவிசிட்

1994

உலக கிண்ண உதைபந்தாட்டம்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## தெளிவான ஆறுதல்

"ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல நான் உங்களைத் தேற்றுவேன்."
(ஏசாயா-66:13)

ஒரு தாய் தன் பிள்ளையை எவ்வளவு கனிவாகத் தேற்றுவாள் என்று நினைத்துப் பாருங்கள். தன் குழந்தையின் துக்கத்தில் அவள் எவ்விதம் பங்கு பெறுகிறாள் என்று கவனியுங்கள். குழந்தையைத் தன் மார்போடு அணைத்து, அதன் துக்கத்தையெல்லாம் தன் இதயத்துக்கு மாற்ற முயற்சி செய்கிறாள். நம் தாயிடம் எல்லாவற்றையும் சொல்லலாம். வேறு எவரும் தேற்றக்கூடாத விதமாய் அவள் தேற்றுவாள். ஆறுதல் அளிப்பவர்கள் எல்லாரிலும் குழந்தை தன் தாயையே அதிகம் நேசிக்கிறது. இது உண்மையென்று பெரியவர்களும் கண்டு அறிந்திருக்கிறார்கள்.

தாயைப்போல யேகோவாவும் அருள் பாலிக்கிறவராயிருக்கிறார். இதுவே அவரின் மேம்பாடு ஆகும். அவர் தகப்பனாயிருக்கிறார் என்பதை மனமார உணர்கிறோம். அவர் தாயைப் போல கூட இருப்பாரா? இருப்பார் என்பது நம்மை அவரோடு தோழமை கொள்ளவும், அவரில் தங்கு தடையின்றி உறுதியான நம்பிக்கை வைக்கவும், அவரில் மன அமைதி பெறவும் அழைக்கிறது அல்லவா? கடவுளே 'தேற்றவாளன்' ஆகும்போது எந்தக் கடுந்துயரமும் அதிக காலம் நிலைத்திருக்காது. அழுகையும் பெருமூச்சுமே முதலில் வெளிப்பட்டாலும் நம் துயரின் காரணத்தை அவரிடம் எடுத்துச் சொல்வோமாக. நம் கண்ணீரைக் கண்டு அவர் நம்மை இகழ மாட்டார். நம் தாய் அவ்விதம் செய்வதில்லையே! அவளைப்போல அவரும் நம் வலுக்குறைவை எண்ணிப் பார்ப்பார். நம் தாயை விட நிச்சயமானதும் இடையூறற்றதுமான விதத்தில் நம் குற்றங்குறைகளை ஒதுக்கி வைத்துவிடுவார். நாம் தனியாக நம் துக்கத்தைச் சுமக்க வேண்டியதில்லை. அவ்விதம் செய்வது இவ்வளவு தயவும் இரக்கமும் உள்ளவருக்குக் காட்டும் இரக்கமற்ற செயலாகும். ஆகையால் அன்பே உருவான நம் கடவுளோடு ஒவ்வொரு நாளையும் தொடங்கலாம். தாய்மார் தங்கள் பிள்ளைகளைக் குறித்து ஒருபோதும் சலிப்படையாததுபோல் அவரும் இருப்பார். ஆகையால் நம் நாள் முடியும்வரை அவரோடு தைரியமாக இருக்கலாம்.

குணத்திபிரபா-கனடா.

## ஆன்மீகம்



## இஸ்லாத்தின் ஐந்து தூண்கள்

"இஸ்லாம் என்ற கட்டிடம் ஐந்து தூண்களின்மீது அமைக்கப்பட்டுள்ளது" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

1. லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (அதாவது-வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை; முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும் திருத்தூதருமாக இருக்கிறார்கள்) என்று சாட்சி கூறுவது.
2. தொழுகையை நிலை நிறுத்துவது.
3. ஸக்காத் கொடுப்பது.
4. ரமழான் மாதம் நோன்பு நோற்பது.
5. ஹஜ்ஜு செய்வது.

இந்த ஐந்து விஷயங்களும் இஸ்லாத்தின் அடிப்படையான கடமைகளாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு ஹதீஸில் இஸ்லாத்தை ஐந்து கம்பங்களின் மீது அமைக்கப்பட்ட ஒரு கூடாரத்திற்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள். கலிமா அக்கூடாரத்தின் நடுக்கம்பம் போன்றதாகும். மற்ற நான்கு செயல்களும் கூடாரத்தின் நான்கு மூலைகளில் உள்ள கம்பங்களை போன்றவையாகும். நடுக்கம்பம் இல்லாவிட்டால் கூடாரமே உருவாகாது. நடுக்கம்பம் இருந்து நான்கு மூலைகளிலுள்ள கம்பங்களில் ஏதேனும் ஒன்று இல்லாவிட்டால் கூடாரம் இருக்கும். ஆனால் கம்பமில்லாத அந்தப் பகுதி சரிந்து குறை உடையதாகக் காணப்படும்.

இந்த ஹதீஸின் அடிப்படையில் நம்முடைய நிலையைப் பற்றி சற்று நாம் சிந்திக்க வேண்டும். ஐந்து காரியங்களைக் கொண்ட இஸ்லாம் என்னும் இக்கூடாரத்தை நாம் எந்த அளவு நிலைநிறுத்தியுள்ளோம்? இஸ்லாத்தின் எந்தக் கடமையையாவது நாம் முழுமையாக நிறைவேற்றி வருகிறோமா? இந்த ஐந்து கடமைகளும் எவ்வளவு முக்கியமானவை என்றால் இவைகள் தாம் இஸ்லாத்தின் அஸ்திவாரமாக இருக்கின்றன. ஒரு முஸ்லிம், தான் முஸ்லிம் என்ற வகையில் இந்த ஐந்தையுமே கடைபிடிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

கவிப்பிரியா நிஷா-வெல்லம்பிட்டிய.

## முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
வருத்தத்தோடும்-அதே சமயம்
முரசின் சுமைகளில்
வாசக நெஞ்சங்களும் பங்கெடுப்பீர்கள்
என்கிற திடமான நம்பிக்கையோடும்
இன்று முதல்-
மிகச்சிறிய விலை மாற்றத்தை
முரசு அறிவித்திருக்கிறது.

உற்பத்தி-விநியோக துறைகளில்
அதிகரித்துள்ள செலவீனங்கள்
வேறு வழி இல்லையென்ற நிலையில்
விலையில் சிறு மாற்றத்தை
செய்ய வைத்துள்ளன.

விளம்பரங்களை-
செலவீனங்களுக்கு ஏற்ப அதிகரித்தால்
ஆக்கங்களை அதிகம் தரும்
முரசின் நோக்கத்துக்கு மாறாகிவிடும்.

ஒரு பக்கத்தில் முழுதாக
இடம் பிடித்துக் கொள்ளத்தக்கதான
சிறுகதையைக்கூட
எழுத்தை சிறிதாக்கி
அரைப்பக்க அளவில் தந்து
அதன் மூலம்
பல சிறுகதைகளை தருவது முரசு.

எவ்வளவு முடிகிறதோ
அவ்வளவுக்கு அவ்வளவு
அதிக விடயங்களை தருவதற்கே
முரசு முக்கிய கவனம் கொள்கிறது.

பக்கங்கள் இருபதாக இருந்தாலும்
நாற்பது பக்கங்களுக்கு ஈடான
ஆக்கங்களின் கனத்தை
முரசு தாங்கி வருகிறது.

எனவேதான்-
விலைமாற்றம் அவசியமாகியிருக்கிறது.
முரசின் வளர்ச்சியிலும்-எழுச்சியிலும்
முகமலர்வோடு பங்குகொண்டுவரும்
வாசக நெஞ்சங்கள்
காரணம் புரிந்து
கரம் கொடுப்பீர்கள்
என்னும் நம்பிக்கை இருக்கிறது.

இன்னும் ஒரு செய்தி,
விலை அதிகரிப்பை அங்கீகரித்து
முரசின் வளர்ச்சியில் பங்கெடுக்கும்
வாசக நெஞ்சங்களுக்கு
முரசு நன்றி சொல்ல வேண்டாமா?
நன்றி வார்த்தைகளில் அல்ல
இடைக்கிடையே-இனிமேல்
இனிய இணைப்புத் தந்து
முரசு தன் நன்றி சொல்லும்.
பல்சுவை அம்சங்களை
அந்த இணைப்பு அள்ளித்தரும்.

■

வரப்போகும் தேர்தல்களுக்காக
கட்சிகள் தயாராகி வருகின்றன.
வடக்கு-கிழக்கில்
போட்டியிடும் கட்சிகள்
குறைந்த பட்சம்
அரசியல் நாகரிகத்தையாவது
மறந்துவிடாதிருக்க வேண்டும்.

கடந்த காலங்களில்-
மக்களின் தோளில் ஏறி இருந்து
காதைக் கடித்தவர்கள்.
இயக்கங்களின் பெயரால்
மக்களை வதைத்தவர்கள்
மீண்டும் முகம் காட்ட
தேர்தல் திருவிழா களமாகிவிடக்கூடாது.

இயக்கங்கள்-
ஒன்றுபடாமல் இருக்கலாம்.
ஆனால்-
இயக்க முரண்பாடுகளால்
மக்கள் விரோதிகள்
இங்கே வளர்ந்துவிடக்கூடாது.

எதிர் இயக்கத்தை எதிர்க்கிறாயா
"இங்கே வா. எம்மோடு கலந்துகொள்."
என்னும் அணுகுமுறையால்
களைகளை கொண்டுவந்து
அரசியல் களத்தில் விதைக்கக்கூடாது.

எதிரிக்கு எதிரி நண்பன் என்பது
போர் தந்திரமாக இருக்கலாம்.
அதுவே- மக்கள் விரோதிகளை
மறைத்துக்காக்கும் போர்வையாகிவிடக் கூடாது.
தமிழ் அமைப்புக்கள்
இதனை மறந்துவிடாதிருக்க வேண்டும்.

■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## கவிதைப்போட்டி இல-52

களம்தேடி வந்தவற்றில்
வெற்றிமுகம் கண்டதுவும்,
வியக்கப்பட்டவையும்.

### பரிசுக்குரிய கவிதை

**உறைவிடங்கள்**

ஆலயமும்,
அகதி முகாமும்,
காடும்
கம்பிக்கூடும்,
தேசம் நமக்குத்தந்த
தேசிய உறைவிடங்கள்.

பூ. இதயரெத்தினம்
ஆரையம்பதி-03.

### வியக்கப்பட்டவை

**கண்ணில் எண்ணம்**

இன்னல் நேரம்
ஜன்னல் ஓரம்
கன்னம் சேரும்!
வண்ணம் காணும்
கண்களோ
மன எண்ணம் கூறும்!

சி. உதயகலா-யாழ்வளாகம்.

**எதற்கு ஒத்திகை?**

தேசமே!
சிறையான போது,
ஒத்திகை எதற்கு
இங்கே வா
இன்னும் நாம்
கம்பி கூண்டின்
உள்ளேதான்.

எம். வேல்முருகன்-பலாங்கொடை..

## கவிதைப் போட்டி இல-56



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

**அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 02.07.1994.**

—முகவரி—

கவிதைப் போட்டி இல: 56

தினமுரசு வாரமலர்
த. பெ. இல-1772, கொழும்பு.



**ஒத்திகை**

கம்பிகளின் பின்னே
கனமான சிந்தனை!
நாளைய சிறைக்கு
இன்றிருந்தே ஒத்திகை!

திருமதி யோ. யோகேந்திரன்
திருக்கோவில்.

**தேடல்**

இரும்புக்குப் பின்னால்
அரும்புநீ தேடுவது
மனிதத்தையா?
மரணத்தையா?

எஸ். வி. வாஹினி-மட்டக்களப்பு.

**வல்லூறு வருகிறதா?**

வல்லூறு வருகிறதா?
புறாவே நீ மருண்டொழிக்க
வலை வேடன் வந்தானோ?
மானே நீ பதைபதைக்க
நிலாச் சோறு தந்தவர்கள்
நீள் தூரம் போனதனால்
நிம்மதியை நீ தவிர்த்தா
நிர்க்கதிக்கு ஆளானாய்?

பத்மினி சிவசுப்பிரமணியம்
மட்டக்களப்பு.

**வெற்றிச் சிறகுகள்**

கண்ணே! கலங்குவதேன்?
மறந்து விட்டாயா?
நேருவினதும்-மண்டேலாவினதும்
வெற்றிச் சிறகுகள் முளைத்தது
அந்த
நாற் சுவர்களுக்குள் தானே!

மக்கொனையூரான்.

**தேடல்!**

வெடிச்சத்தம் கேட்குது
வேலைக்குப் போன
அப்பாவைக் காணோமே!

ஆ. வின்சன்-கல்முனை-02.

**விடுதலை**

வட புலத்து சிறையோ
வயதெல்லை
பன்னிரண்டோ
வருங்கால பயிர் இங்கு
வாடுவது விடுதலைக்கோ.

தெ. லோஜனா-கொழும்பு-15.

**வேடிக்கை**

இது வாடிக்கை
வெளியிலென்ன வேடிக்கை
துப்பாக்கிச் சூடுகள் துரத்தும் முன்
தூரப் போய் நிலைத்துக்கொள்!
வேடிக்கை இது வாடிக்கை தானே!

செல்வி. எஸ். கோகிலா-நானு-ஓயா.

**பாதுகாப்பு**

ஜனநாயகமும்
நானும்
ஜாக்கிரதையாக
இருக்கிறோம்.

ஏ. எல். ஸாஜஹான்
புதியகாத்தான்குடி-06.

**யார் அது?**

அன்னைக் கருவில்
சிறையிருந்த செல்வமே-உன்னை
யன்னல் சிறையில்
சிறையிட்டவன் எவனோ?

கோகிலா குமாரவேல்-இரத்தினபுரி.

**சிறை**

விடிவு இன்னும்
தொலைவில்தான்.

ஜெரி ஜேசுதான்
திருகோணமலை.

ஜன்னல் கம்பி
உரைத்திடுமா
சின்னத் தம்பியின்
துயரை!

த. ஜெயாஞ்சலி
தம்பிலுவில்-02.

**யார் குற்றவாளி?**

குற்றவாளி வெளியே
கூண்டுக்குள் நானா?
வருகிறேன் நாளை
வந்தபின் பாரேன்.

ஏ. சாதாத் ஹுசைன்
கற்பிட்டி.

**வேறுவழி?**

இயந்திரத் துப்பாக்கிகளும்
எயிட்சும்
இடையே
போதை வஸ்துக்களுமாய்
புளுத்துப்போன
பூமியிலே
பூவே!
உன்னை
பூட்டி வைக்காமல்
வேறு என்னதான்
செய்வது?

த. தயாபரன்-ஆரையம்பதி-03.

**'அவ்வை போல் வாழ்க'**

ஆணித்தரமாக அரசியல் பேசி
அன்பை உன்பால் ஈர்க்கின்றாய்.
பாணிச் சுவையான பாக்கள் பலதந்து
மனதைப் பரவச மூட்டுகிறாய்.
செவ்வி, சிறுகதை, சித்திரப்போட்டி
சினிமா புதினமும், பாரதக் கதையும்
கவ்வி வந்து தந்து களிநடமிடுகிறாய்
பேணி வளர்த்திடும் தீஞ்சுவை கண்டு
பித்துப் பிடித்து நான் பேதலிக்கிறேன்.
தினமுரசே நீ என்றும்
அவ்வைபோல ஆண்டுகள் பலவாழ
ஆசிகள் கூறி வாழ்த்துகிறேன்.

இ. இராசதுரை-மட்டக்களப்பு.

□□

**உடையட்டும் தடைகள்**

எதிர்வரும் தடைகளெல்லாம்
இலகுவாய் உடைத்தெறிந்து
அதிரடி முரசொலிக்க்
ஆயிரமாயிரம் வாழ்த்துக்கள்.

நூரளையூரான்-கே. கனகராஜா.

□□

**வித்தியாச வாழ்த்து!**

ஓ ராண்டைக் கடந்து
ஓ ருதாளைக் கூட்டி
ஓ ப்புமையற்ற செய்திகளைத் தாங்கி
ஓ ருநாளும் கண்டிரா
ஓ ருவடுவும் சொல்லொணா
ஓ துமுண்மைகளை உலகெங்கும் பொறுக்கி
ஓ ருவீச்சில் அச்சிட்டு
ஓ ளிபரப்பி நிற்கும் தினமுரசே!
ஓ ளிக்கற்றைகளைக் கொண்டு
ஓ வ்வொருவ ருள்ளத்தையும்
ஓ ன்பக்க மீர்த்துக்கொண்டு
ஓ டோடிச் செல்கின்றாயே!
ஓ ங்குக! உன் புகழ் உலகெலாம்.

பிர்தௌஸியா முஸம்மில்-சாய்ந்தமருது-16.

## வாசகசாலை

அன்பின் தினமுரசே,
உன் அட்டைப்படமும் உன்னுள் அடங்கிய ஆக்கங்களும் எனது மனதை கவர்ந்துவிட்டது. நீ பல்லாண்டு காலம் வாழ்க.

த. ரவிக்குமார்-ஆரையம்பதி.

□□

**நிகரேது முரசே**

முத்தான முரசிற்கு 'கொலை விழும் நேரம்' எம்மை வியக்க வைக்கிறது. 'இலக்கிய நயம்' ஆசையை தூண்டுகிறது. 'நில் கவனி முன்னேறு' சிந்திக்க வைக்கிறது. முரசே உனக்கு நிகரேது. உன்னை இரசிக்காமல் புகழாமல் இருப்பதெப்படி? எனது வாழ்த்துக்கள் பலபல உனக்கே உரியது.

பய்ஸர்-இரத்தினபுரி.

□□

அன்பின் முரசே,
தித்திக்கும் தேன் சுவையை தேசமெங்கும் கொண்டு செல்லும் தினமுரசே, நான் இது உனக்கு வரையும் முதல் கடிதம். நீ கொண்டுவரும் அனைத்து ஆக்கங்கள் கதைகள் அனைத்தும் இனிமையே. ஏய் ரசிகனே, கொலை கொலை என்று எழுதிக் கொண்டு இருக்கிறீர் கடைசியாக உம்மையும் கொலை செய்தால்... ஜாக்கிரதை!

எம். பிலோமினா-காஹவத்த.

□□



தினமுரசே!
வாரம் தோறும் நீ சுமந்துவரும் அத்தனை அம்சங்களும் ஜோர். மேலும் பல புதிய அம்சங்களை என்போன்ற உன் இரசிகர்களுக்கு அள்ளித் தந்து, உன் சேவை ஆண்டாண்டு வாழ்க என மனமார்ந்து வாழ்த்துகிறேன்.

கே. நஸ்லியாபாஸில்-கொழும்பு-05.

□□

இராஜதந்திரியின் அலசல் அருமை. அமைதியான வாழ்விற்காக ஏங்கும் பிஞ்சு உள்ளங்களின் கவிதைகள் மனதைத் தொட்டது. எக்ஸ்ரே ரிப்போர்ட் பலத்த அதிரடி.

து. சர்மிளாதேவி-கலஹா.

□□

**தேன்முரசு**

உமக்கு தினமுரசு அல்ல தேன் முரசு என்று பெயர் வைப்பதே பொருந்தும். ஏனெனில் சுவை மிகுந்த செய்திகளை அள்ளி வழங்குகின்றீர். உலக அதிசயங்களை எல்லாம் புகைப் படத்துடன் தருகின்றாய். உலக அதிசயங்களை கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் முரசே, உம்மைக் கண்ட பின்பு படத்துடன் பார்த்து இரசிக்கின்றோம்.

செ. ம. ஜனார்த்தன்-வாழைச்சேனை.

□□

தேன் கிண்ணம், ரசிகன் எழுதும் இலக்கிய நயம் என்னை வெகுவாக உசுப்பும். ஆனால் ஒரு குறை. கொஞ்சம் பெரிய எழுத்தில் வெளியிட்டால் என்னவாம்? ஓங்கட்டும் உனது தரம். என் இதயபூர்வ வாழ்த்துப் பூக்கள்.

எம். எஸ். றிஸ்வானா பிஸ்மின்-கல்முனை.

□□

நாம் வாழ்வில் அறியாத புதினங்களை 'தகவல் பெட்டி' மூலம் எமக்கு தெரியப்படுத்துகிறாய். பக்க சார்பு இல்லாமல் சுடச்சுட செய்திகளை வெளிப்படுத்தும் உனக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

சி. ஸ்ரீரவி-இரத்தினபுரி.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# அடுத்துவரும் தேர்தலில் ஆறுமுனைப் போட்டி!

# ஆதரவாளர்களை திரட்ட தமிழ் கட்சிகள் தீவிரம்!!

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு-கிழக்கில் தேர்தல் நடத்தக் கூடிய பகுதிகளில் தமிழ் கட்சிகள் அனைத்தும் தனித்துப் போட்டியிடும் பட்சத்தில் ஆறுமுனைப் போட்டி உருவாகும்.

புளொட், ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஆகிய ஐந்து கட்சிகளோடு பகுதிக்கொரு குழுவாக இருக்கும் ஈரோசும் தேர்தலில் போட்டியிடும் என்று நம்பப்படுகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பினர் இம்முறை கிழக்கில் - குறிப்பாக மட்டக்களப்பில் போட்டியிடுவதில் இப்போதிருந்தே கவனம் செலுத்தி வருகின்றனர். அக்கட்சியின் தலைவர் ஒருவர் இம்முறை மட்டக்களப்பில் போட்டியிடுவார் என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புளொட் அமைப்பினர் வவுனியாவில் கூடுதலான கவனம் செலுத்தும்போதும் கிழக்கிலும் தமது வேட்பாளர்களை நிறுத்தக்கூடும் என்றே நம்பப்படுகிறது.

வவுனியாவில் புளொட், ரெலோ அமைப்பினர் மத்தியில் போட்டியும் பூசலும் தொடர்ந்து நிலவிவருகிறது.

ஆனால் மட்டக்களப்பில் இருக்கும் கோ.கருணாகரம் தலைமையில் உள்ள ரெலோவும் புளொட்டும் எதிர்வரும் தேர்தலில் கூட்டாக செயற்படும் வாய்ப்பு இருக்கிறது.

ஈ.பி.டி.பி வடக்கில் பாதுகாப்புப் படையினரோடு தாமும் இணைந்து செயற்படும் பகுதிகளிலும், கிழக்கிலும் போட்டியிடக்கூடும் என்று தெரிகிறது.

ரெலோ வவுனியாவிலும், கிழக்கிலும் போட்டியிட்டாலும்கூட வவுனியா-திருமலை போன்ற பகுதிகளில் ஒரு விதமாகவும் மட்டக்களப்பில் கருணாகரன் ரெலோ இன்னொரு விதமாகவும் முடிவெடுத்து செயற்படுவார்கள்.

(அலுவலக நிருபர்)

ஈரோஸ் என்று அழைக்கப்படும் அமைப்புக்கு பலர் உரிமை கோரி வருகிறார்கள்.

கொழும்பில் உள்ள ஈரோஸ் குழுவைச் சேர்ந்தவர்கள் மிகச் சிலரேயானாலும் அவர்கள் வெளிநாட்டு வாசிகளாகவும், வியாபாரிகளாகவும் இருக்கிறார்கள் என்று மட்டக்களப்பு ஈரோஸ் குற்றம் சாட்டுகிறது.

ஒருவர் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பும் ஏஜென்சி செய்கிறார் (சுதா மாஸ்டர்). சங்கர் ராஜீ என்பவர் (கொழும்பு ஈரோஸ் தலைவர்) இலண்டனில் வாழ்ந்துகொண்டு இடையில் எப்போதாவது கொழும்புக்கு வந்து செல்லுகிறார். ஈரோஸ் ஸ்தாபகர் என்று சொல்லப்படும் இரட்ணசபாபதி குடி அதிகமாகியதால் ஈரல் வியாதிக்குள்ளாகியவர். அதனால் ஓய்வு பெற இலண்டன் சென்றவர். இவர் தவிர இரட்ணராஜா போன்ற இலண்டன் வாசிகளும் மீண்டும் தேர்தலில் குதிக்க திரும்பி வந்திருக்கிறார்கள். இவர்களுக்கு ஈரோஸ் என்று தம்மைக் கூறிக்கொள்ள எந்த அருகதையும் கிடையாது என்று மட்டக்களப்பு ஈரோஸ் அமைப்பு கூறுகிறது. இதுதவிர திருகோணமலையில் ஒரு ஈரோஸ் இருக்கிறது. அதனை திருப்திப்படுத்தி தம்பக்கம் கவர்ந்துகொள்ள கொழும்பு ஈரோஸ் இரட்ணராஜாவை தூதுவிட்டுப் பார்த்திருக்கிறது.

இதே சமயம் ஏனைய தமிழ் கட்சிகளை சற்று யோசிக்க வைத்துள்ளது தமிழர் விடுதலைக் கூட்டணி.

மக்கள் விரோதிகள் என்று கடந்த காலங்களில் அடையாளம் காணப்பட்டவர்கள் பலர் ஏனைய தமிழ் கட்சிகளில் ஆட்பலத்துக்காக சேர்க்கப்பட்டுள்ள நிலையில் கூட்டணியினர் பரவாயில்லை என்று மக்கள் நினைக்கும் சூழல் உருவாகி வருகிறது.

பெயர்கள் மாறுபட்டாலும்கூட சகல இயக்கங்களும் ஒரே தன்மை கொண்டவையாகவே முகம் காட்டுவதால் ஒரு மாற்றாக தெரிவது கூட்டணியினர் மட்டுமே.

இதே சமயம் கூட்டணியினரைத் தாக்குவதில் சகல தமிழ் அமைப்புகளும் தீவிரம் காட்டிவருகின்றன.

அடுத்துவரும் தேர்தலில் வடக்கு-கிழக்கில் தேர்தல் நடைபெறக்கூடிய சகல பகுதிகளிலும் கூட்டணி தன் வேட்பாளர்களை நிறுத்தும். கூட்டணியின் முக்கிய தலைவரான திரு.நீலன் திருச்செல்வம் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட முன்வரக்கூடும் என்று பேசப்படுகிறது.

சகல கட்சிகளும் தமது ஆதரவாளர்களை திரட்ட களத்தில் குதித்துள்ளன.

## கனடாவில் நெஞ்சை உலுக்கும் சோகம்!

# 8 மாதக் குழந்தை கழுத்து நெரித்துக் கொலை!!

### இலங்கைத் தமிழ் பெண்ணின் கோரச்செயல்

தனது 8மாதக் குழந்தையின் கழுத்தை நெரித்து ஒரு தாய் அதனைக் கொன்றாள்: இலங்கையிலிருந்து வந்து குடியேறிய ஒரு தம்பதியின் மகனான வதனன் என்பவனே தனது தாயால் கழுத்து நெரிக்கப்பட்டுள்ளான் என்று கொலையை விசாரணை செய்த கனேடியப் பொலிசின் உளவுத் துறையைச் சேர்ந்த கிறிஸ் வில்சன் தெரிவித்தார்.

ரொறன்ரோவிலுள்ள ஸ்காபுறோவில் மியர் தெருவிலுள்ள அடுக்குத் தொடர் மாடியின் இரண்டாவது தளத்திலுள்ள ஒரு வீட்டிலேயே இக்கொலை நடந்துள்ளது.

குழந்தையின் பாட்டி இக்கொலையினைத் தடுக்க முயன்றும் முடியாமற்போகவே கட்டடத்தைக் கண்காணிக்கும் அலுவலரை அழைத்திருக்கிறார். அவரது உதவியோடு ஸ்காபுறோ மருத்துவமனைக்குக் குழந்தை எடுத்துச் செல்லப்பட்டபோது, குழந்தை இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

குழந்தையின் தந்தை நிலாநேசன் சம்பவம் நடைபெறும்போது வீட்டிலிருக்க வில்லை. வேலைக்குச் சென்றிருந்தார். தனது நண்பர்களுடன் வீட்டுக்கு வந்தபோதுதான் நிலமை அறிந்து அதிர்ச்சி அடைந்தார்.



கொல்லப்பட்ட தாயும்-சேய் குழந்தையும்

சம்பவம் பற்றி எதுவித கருத்தும்கூற மறுத்துவிட்டார்.

நிலாநேசன் 8 வருடங்களுக்கு முன்னர் கனடா வந்தார். இரண்டு வருடங்களுக்கு முன்னர்தான் இலங்கை திரும்பி திருமணம் முடித்து மனைவியையும் அழைத்து வந்துள்ளார். அவரும் இலங்கையில் படித்துப் பட்டம் பெற்ற பெண். "இருவருக்குமிடையில் எந்தவிதமான பிணக்கும் இருந்ததில்லை. தவிர அவர் ஒரு சிறந்த தாயாகவும் விளங்கினார். இருவரும் தங்கள் குழந்தையை அன்புடன் வளர்த்து வந்தனர். இது மிகவும் துர்ப்பாக்கியமான சம்பவமாகும் என்று இவர்களுடைய குடும்ப நண்பர் ஒருவர் தெரிவித்தார்.

29 வயதுடைய அமிகா நிலாநேசன் இன்று நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவுள்ளார்.

கனடாவில் இலங்கைத் தமிழர்கள் தொகை அதிகமாகிவருகிறது. அதே போல் தற்கொலை செய்வோர், மற்றும் தற்கொலை மனோபாவங்கள் கனடாவில் உள்ள இலங்கைத் தமிழர் மத்தியில் வளர்ந்து வருகிறது.

கடந்த வருடமும் இரண்டு குழந்தைகள் கொல்லப்பட்டனர். விக்டர் சங்கர் என்னும் இலங்கைத் தமிழர் தனது ஸ்போட்ஸ் காருக்குள் பெற்றோல் கலனை வைத்துக்கொண்டு சென்று 120 கிலோ மீட்டர் வேகத்தில் நெடுஞ்சாலையில் மோதி தற்கொலை செய்தார். இது தவிர பூங்காவில் கழுத்தில் சருக்கிட்டு ஒரு இலங்கை வாலிபர் தற்கொலை செய்துகொண்டார்.

கனடா ஸ்காபுறோவில் மற்றொரு இலங்கை இளைஞர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டார்.

மருமகள் தொல்லை தாங்காமல் 75 வயது இலங்கைத் தமிழ் வயோதிபர் ஒருவர் ஸ்காபுறோவில் 12வது மாடியில் இருந்து விழுந்து தற்கொலை செய்துகொண்டார். இதேபோல இன்னொரு குடும்பப் பெண்ணும் (இ.தமிழ்) தொடர் மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்திருந்தார்.

கனடாவில் பல்வேறு நாட்டவர்கள் சென்று குடியேறியுள்ளபோதும் இலங்கைத் தமிழர் மத்தியில்தான் தற்கொலைகள் நடக்கின்றன.

தற்போது குழந்தையின் கழுத்தை நெரித்து கொலை செய்ததுகூட விரக்தியின் விளைவுதான் என்றே நம்பப்படுகிறது. விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

கலாசார மாற்றம், இரண்டு நேர வேலை என்று வீட்டைக் கவனிக்காமல் கணவர்மார் இரவு பகலாக வேலைக்குப் போவது, உறவினர்களை பிரிந்திருத்தல் போன்றவை கனடாவில் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் தற்கொலை மற்றும் விரக்தி மனப் போக்குக்கான காரணங்கள் என்று நம்பப்படுகிறது.

## தமிழ் இன்று சர்வதேச மொழியாகிவிட்டது

### அரசகரும மொழிகள் திணைக்கள ஆணையாளர் பேச்சு!

(குருநாகல் நிருபர்)

"தமிழ்மொழி இனிமையானது. சிறப்பு மிக்கது. இன்று அது ஐரோப்பிய அமெரிக்க, அவுஸ்திரேலியக் கண்டங்களுக்கும் பரவி சர்வதேச மொழியாகிவிட்டது. ஆசியாக் கண்டத்தின் முழுச் சனத்தொகையில் பதினெட்டு வீதத்தினர் தமிழ் மொழியைப் பேசுகின்றனர். எனவே தமிழ் மொழியின் சக்தியை நாம் குறைவாக மதிப்பிட முடியாது. எனவே சிங்கள மக்கள் அனைவரும் தமிழ்மொழியைக் கற்க வேண்டும். இதன் மூலம் நாம் இரு இனங்களுக்கிடையேயுள்ள கசப்புணர்வை நீக்கி எதிர்கால இலங்கையை சமாதானம் நிறைந்ததாக உருவாக்க முடியும்." இப்படிக் குறிப்பிட்டார் அரசகரும மொழிகள் திணைக்கள ஆணையாளர் திரு.நிமல் சமரசுந்தர அவர்கள்.

அரசகரும மொழிகள் திணைக்களமும், குருணாகல் மாவட்டச் செயலாளர் பணிமனையும் இணைந்து நடத்திய "மொழி மூலம் சமாதானம்" என்ற கருத்தரங்கும், தமிழ் மொழியில் ஒன்பது மாதகால பயிற்சியை முடித்து சித்தியடைந்த சிங்கள அரச அலுவலர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் வடமேல் மாகாண ஆளுநர் கலாநிதி.கருணாசேன கொடிதுவக்கு அவர்களின் தலைமையில் குருணாகல் பௌத்த இளைஞர் சங்க மண்டபத்தில் கடந்த 14.6.94 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

இவ் வைபவத்தில் வரவேற்புரையை குருணாகல் மாவட்டச் செயலாளர் டி.பி. ரணதுங்க அவர்கள் நிகழ்த்தினார்கள். இராஜாங்க அமைச்சர் திருமதி.அமரா பியசீலி இரத்நாயக்க சிறப்புரை வழங்கினார். இவ் வைபவத்தில் பெருமளவு கல்விமான்களும், போதனாசிரியர்களும், பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் கலந்து சிறப்பித்தனர். இன ஒற்றுமைக்கு அழைப்பு விடுப்பதாக இவ்விழா அமைந்தது.

## மட்டக்களப்பு மாநகர பள்ளிவாசல்களின் கதி!

### மாநகர முதல்வர் விடுத்துள்ள வேண்டுகோள்!

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைப் பகுதியில் உள்ள முஸ்லிம் பள்ளிசாவல்களின் நிலை தொடர்பாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் விடுத்துள்ள வேண்டுகோளில் பின்வருமாறு கூறியுள்ளார்:

மட்டக்களப்பு மாநகர சபை எல்லைப் பரப்பில் 19ம் வட்டாரம் எனக் கருதப்படும் மஞ்சந்தொடுவாய் தெற்கு, பூநொச்சிமுனை, புதிய காத்தான்குடியின் ஒரு பிரிவு முதலானவற்றில் முஸ்லிம்கள் 'அரசியல் செல்வாக்கு'ப் பெற்று வாழ்கிறார்கள். இதனைக் காலம் காலமாக தமிழர்களும் அநுசரித்து ஆதரித்து வந்துள்ளார்கள்.

மேற்படி வட்டாரத்தில் வாழும் முஸ்லிம்களின் மார்க்கக் கடமைகளை நிறைவேற்றும் பள்ளிவாசல்கள் இப்பொழுது சமூகத்தின் பின்வரும் உதவிகளை நாடி நிற்கின்றன.

1. மஞ்சந்தொடுவாய் மஸ்ஜிதுல்ஹிபூர் பள்ளிவாசலுக்கு புதிய கட்டிடம் நிறுவுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு சுவர் முடிவுவரை வேலைகள் செய்யப்பட்டு விட்டன. கூரை அமைத்து ஓடு வேய்ந்து பூச்சு வேலைகள் நடத்தி முடிக்கும் பாக்கி வேலைகள் உள்ளன. அதனைச் செய்து முடிக்க இயலாமல் மக்கள் இருக்கின்றனர். ஆயினும் தங்கள் மார்க்கக் கடமைகளில் இம்மியும் தவறாத அம்மக்கள் ஏற்கனவே அரைகுறையாக நிறுவப்பட்டிருக்கும் பள்ளிவாசல் கட்டிடத்தில் ஒரு பிரிவில் கிடுகு ஓலைகளால் வேய்ந்து தொழுகை நடத்தி வருகின்றனர். (இந்த உண்மைகளை படங்களில் காணலாம்) ஆதலால் மேற்படி கட்டிட நிர்மாணத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

2. பூநொச்சிமுனை முகைதீன் ஜும்மா பள்ளிவாசல் பல்லாண்டுகளுக்கு முன்னர் முன்னோர்களால் நிறுவப்பட்ட பழைய கட்டிடத்திலேயே இருக்கிறது. கால வோட்டத்தின் காரணமாக மேலதிக கட்டிடங்கள் தேவைப்படுகின்றன. தேவைக்கு ஈடுகொடுக்க நேரிட்டு மேற்படி பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினர் தற்காலிக இணைப்புக் கொட்டில்களை அமைத்துள்ளனர். இவை தாக்குப்பிடிக்க முடியாதவை. ஆதலால், அத் தற்காலிக கொட்டில்களுக்கு ஈடாக புதிய மண்டபம் ஒன்றையாவது நிறுவி அப்பள்ளிவாசலை விஸ்தரிக்க வேண்டும். அபிவிருத்தியடைந்துவரும் மேற்படி பூநொச்சிமுனை வட்டாரத்தின் மார்க்கத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

3. 19ம் வட்டாரத்தின் அப்துல் ரஹ்மான் வீதியிலுள்ள மஸ்ஜிதுன்தூர் பள்ளிவாசல் நிரந்தரக் கட்டிடம் இல்லாமல் காலம் காலமாக தகரக் கொட்டில் ஒன்றில் இருந்து வருகிறது. காத்தான்குடிப் பட்டினப் பகுதியை எல்லையாகக் கொண்ட கேத்திர ஸ்தானத்தில் அமைந்திருக்கும் அப் பள்ளிவாசலைப் புனரமைக்கும் வகையில் நிரந்தரக் கட்டிடம் நிறுவ ஏற்பாடுகள் செய்யப்படுவது அத்தியாவசியம்.

மேற்காட்டிய மூன்று தொழுகை இடங்களிலும் மலசல கூடங்கள், பாலர் பாடசாலைகள், குர்-ஆன் வகுப்பறைகள் முதலானவற்றை அப்பகுதியைச் சார்ந்த எமது நகர பிதா ஜனாப் முகம்மது காசீம் ஜலால்டீன் அவர்களின் கோரிக்கைகளுக்குச் செவிமடுத்து 'யுனிசெவ்' உதவியுடன் எமது மாநகர சபை நிறைவேற்றிக்கொடுக்க நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது.


இதே வேளையில், மேலே காட்டிய பள்ளிவாசல் கட்டிட விவகாரங்களையும் இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் அனைவரதும் மேலான கவனத்துக்கு நட்புரிமையுடன் கொண்டுவருகிறோம். மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதில் அவர்களுக்கு அவர்களே நிகரானவர்கள். எமது ஆப்த நண்பர், பத்திரிகை வட்டாரத்தோழன், மாண்புமிகு முஸ்லிம் விவகார இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஷ்வர் அவர்களது கவனமும் இவ்விவகாரத்தின் பால் ஈர்க்கப்படுவதாகுக.

இலங்கை வாழ் முஸ்லிம் தனவந்தர்கள் மேற்படி மூன்று தொழுகை இல்லங்களைப் புனரமைக்கும் பேரரிய பணிகளில் ஈடுபட முன்வருமாறு அன்புரிமையோடு அழைக்கிறோம்.

இவ்வாறு மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் செழியன் ஜே.பேரின்பநாயகம் தனது வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

## கிழக்கின் இரத்தினம் ஒன்று மறைந்தது!

### 44 வருடம் எழுதிய கை ஓய்ந்தது



நம் நாட்டின் தலை சிறந்த கவிஞர்களுள் ஒருவரான ஈழத்து இரத்தினம் சென்னையில் (21.6.94) செவ்வாய் கிழமை அதிகாலை 2.00 மணிக்கு காலமானார். கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விபத்தில் சிக்கிய இவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சத்திர சிகிச்சை செய்யப்பட்டும் பலனற்றுப்போய் விட்டது.

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு இரத்தினம் ஓர் இயற்கவிஞர்.

திரைப்படத்துறையில் ஈடுபடவேண்டும் என்ற ஆர்வமேலீட்டால் 1957ல் சென்னை சென்றார். 'ஜுபிட்டர் பிக்சர்ஸ்' என்ற தலைசிறந்த திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தில் உதவி இயக்குநராகப் பணி புரிந்து அமுதவல்லி, முரடன் முத்து, அரசிளங்குமரி, தங்கப் பதுமை, எல்லோரும் இந்நாட்டு மன்னர் போன்ற திரைப்படங்களில் பணிபுரிந்திருக்கிறார்.

கலைஞர் மு.கருணாநிதியின் திரைக்கதை வசனத்தில் உருவான 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' திரைப்படத்தில் "எல்லாரும் இந்நாட்டு மன்னரடா இங்கு இளைத்தவரும் சளைத்தவரும் இல்லையடா" என்று தொடங்கும் பாடலை இவரே எழுதினார். லிங்கப்பா இசையில் ரி.எம்.சவுந்தரராஜன், ஜிக்கி, இராஜேஸ்வரி குழுவினர் இப்பாடலை பாடியுள்ளனர், ஜெமினிகணேசன் இப்படத்தின் கதாநாயகன்.

நாம் தமிழர் இயக்கம் 1958ல் அகில இந்திய ரீதியில் நடத்திய 'சுதந்திரத் தமிழ் நாடு ஏன் வேண்டும்" என்ற பேச்சுப் போட்டியில் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்ட ஈழத்து இரத்தினத்துக்கு முன்னாள் தமிழ்நாடு சட்டப்பேரவை முதல்வர் சி.பா.ஆதித்தனார் 7 1/2 பவுண் தங்கப் பதக்கம் அளித்தார்.

இலங்கையில் தயாரான பல சிங்களப் படங்களை இயக்கியதுடன் இங்கு தயாரிக்கப்பட்ட தமிழ்ப் படங்களிலெல்லாம் இரத்தினத்தின் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. வானொலி தொலைக்காட்சிகளிலும் அவரால் இயற்றப்பட்ட எண்ணற்ற பாடல்கள் இடம்பிடித்துள்ளன.

கவிஞருக்கு 58 வயதாகிறது. தனது 14வது வயதில் 'பாடல் புனையும்' ஆற்றலைப் பெற்ற இரத்தினம் ஒரு 'சகலகலா வல்லுநர்'. அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும்.

## அக்குறணையில் தபால் ஊழியர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை

(அக்குறணை நிருபர்)

நாடளாவிய ரீதியில் அரசாங்கத்தால் உறுதியளிக்கப்பட்ட தபால் ஊழியர்களுக்கான 25 சதவீத சம்பள உயர்வை உடனடியாக அமுல்படுத்துமாறு கோரி தபால் ஊழியர்கள் அனைவரும் ஒருமித்த கோரிக்கையையெழுப்பினர்.

17.06.94 அன்று அக்குறணை பிரதான தபால் அலுவலகக் கட்டடத்துக்கு வெளியே இது சம்பந்தமான சுவரொட்டிகள் காணப்பட்டன.

"அரச தபால்சேவையாளர்களுக்கு உறுதியளித்த 25 சதவீத சம்பள உயர்வை உடனடியாக வழங்கவேண்டும்" என்னும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளும் சிங்களத்திலும் தமிழிலும் காணப்பட்டன.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்!

# சுதந்திரக் கட்சி எம்.பி.வாக்குறுதி!!

(தினமுரசு நிந்தவூர் நிருபர்)

'கல்முனை கல்விமாவட்டப் பாடசாலைகளில் கடந்த சுமார் 10 வருடகாலமாக தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வரும், இதுவரை ஆசிரிய நியமனம் வழங்கப்படாத 318 தமிழ், முஸ்லிம் இளைஞர், யுவதிகளுக்கும் எமது சிறிலங்கா சுதந்திரக்கட்சி எதிர்வரும் பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிப்பீடமேறியதும் நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்குவோம்."

இவ்வாறு கல்முனை மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடல் கூட்டம் ஒன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரும் கிழக்கு மாகாண சி.ல.சு.க.அமைப்பாளருமான சட்டத்தரணி அல்.ஹாஜ்.ஏ.எம். சம்சுதீன் வாக்குறுதி அளித்தார். கூட்டத்தில், 1984ம் ஆண்டு முதல் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிவரும் தாம் கடந்த காலங்களில் நடைபெற்ற தொண்டர் ஆசிரியர் நியமனங்களின்போது புறக்கணிக்கப்பட்டுள்ளமையும், சகல தகுதிகளும் கல்வித் தகமைகளும் தமக்கு இருந்தும் 'பின் கதவுகளால்' தகமையற்ற பலர் புகுந்து நியமனம் பெற்றுள்ளமையையும் சங்க உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர் அல்-ஹாஜ் சம்சுதீனிடம் அழாக்குறையாக எடுத்துக்கூறினர்.

நியமனம் இன்று கிடைக்கும், நாளை கிடைக்குமென நம்பிக்கையூட்டப்பட்ட நிலையில் வேறு தொழிலை நாடாமல் தாம் விரக்தி நிலையிலிருப்பதையும், வயது அதிகரிப்பு ஏற்பட்ட வண்ணமிருப்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

## தொலைத்தவர் பெற்றுக்கொள்ளவும்

(அக்குறணை நிருபர்)

அரபு எமிறேற்ஸிலுள்ள 'மதீனத்துல் முனவ்வரா' நகரில் வேலை பார்ப்ப தற்கான அனுமதி அட்டை. இதன் உரிமையாளர் பெயர் சாஹுல் ஹமீது முஹமது சரூக் என்று அடையாளங் காணப்பட்டுள்ளது. உரியவர் அக்குறணை தபால் நிலைய தலைமை அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அடையாளங்கூறிப் பெற்றுக்கொள்ளவும்.

## 'எங்கள் குறையை எவர் அறிவார்?' தொலைபேசி நிலைய அதிகாரிகள் கவலை!

(காரைதீவு நிருபர்)

இப்பிரதேசத்தில் தொலைபேசி சேவை சீரின்மை பற்றி பலரும் புகார் தெரிவிக்கிறார்களே தவிர எமது அலுவலக வசதியீனங்களைப் பற்றி எவரும் குரல் கொடுக்காதது எம்மை கவலையிலாழ்த்துகிறது என கல்முனை தொலைபேசி பரிவர்த்தனை நிலைய அதிகாரியொருவர் வேதனையுடன் கூறினார்.

உண்மையில் 1000 தெலைபேசிகள் உள்ள கல்முனை மாவட்டத்தில் மூன்றே மூன்று தொடர்பு வழிகள் வழங்கப்பட்டுள்ளன. இவை இங்குள்ள பாவனையாளர்களை திருப்திப்படுத்த கடுகளவும் போதாது.

ஒரே தடவையில் மூன்றே மூன்று ஜோடிகளே இங்கிருந்து தொடர்பு கொள்ள முடியும். அதிலும் சமீபத்தில் கட்சியொன்றின் செல்வாக்கில் ஒரு தொடர்பு வழி தனியார் ஸ்தாபனமொன்றிற்கு மாற்றப்பட்டிருக்கிறது.

இந்நிலையில் இங்கிருக்கக்கூடிய பாதுகாப்புப் படை முகாம்கள், அரசியல்வாதிகள், அரச ஸ்தாபனங்கள், தபாலகங்கள் மற்றும் பாவனையாளர்கள் அனைவரையும் எப்படி திருப்திப்படுத்துவது?

வியாபார மையமாக உள்ள கல்முனைக்கு குறைந்து பத்து தொடர்பு வழிகளாவது பரிவர்த்தனை நிலையத்திற்கு வழங்கப்பட வேண்டுமென்று பாவனையாளர்கள் 'ரெலிகொம்' நிறுவனத்தாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். 1995 இலாவது சீராகுமா? பொறுத்திருந்து பார்ப்போம்!

## 'திருமலை தமிழ்தின போட்டிச் செய்தி!

### 'தவறவில்லை முரசு' நிருபர் பதில்!

மே 22-28.94 தினமுரசு இதழில் வெளியான திருமலைத் தமிழ்தினப் போட்டிகளும் தடுமாறித் தவறு செய்த நடுவர்களும் என்ற செய்திக்குப் பொறுப்பான நிருபர் என்ற வகையில் ஜுன் 5-11.94 இதழில் வெளியான 'தவறலாமா முரசு'? என்ற மறுப்புக்குப் பதில் அளிக்க வேண்டியவனாகிறேன்.

திருமலை நிருபரும் நடுவர் குழாமில் ஒருவராக இருந்தார் என்பதற்கான செய்தியில் உண்மை இல்லை என்றாகிவிடாது. எல்லா நடுவர்களும் தவறு செய்தார்கள் என்பதல்ல செய்தி. முரசு நிருபர் இரண்டு துறைகள் சார்ந்த நான்கு போட்டிகளுக்கு நடுவராகக் கடமையாற்றிய போதிலும் அவற்றின் தீர்ப்புகளில் ஆட்சேபனைகள் எதுவும் எழவில்லை என்பது மறுப்பாளர் அறியாததல்ல. ஆட்சேபனைகள் வரவில்லை என்பதால் முரசு நிருபரும் தவறவில்லை என்பதுதான் உண்மை.

தோல்வியடைந்த பாடசாலைகள் முறைப்பாடு செய்வது ஒன்றும் பெரிய விடயம் அல்ல என்பதை முரசும் அறியும்; நிருபரும் அறிவார். ஆனால் 'முரசு' அவசரப்பட்டு ஆதாரமில்லாமல் செய்தி வெளியிடவில்லை என்பதை மறுப்பாளர் உணர வேண்டும்.

திறந்த நாடகப் போட்டியில் புராண–இலக்கிய நாடகங்களையே தெரிவுசெய்ய வேண்டிய நடுவர்கள் 'கைலாய வன்னியன்' என்ற வரலாற்று நாடகத்துக்கு முதலிடம் வழங்கியபோது எழுந்த ஆட்சேபனை பாரதூரமானதல்லவா...? அப்பட்டமான மீறல் எனத் தெரிந்தும் முரசு செய்தி வெளியிடாமல் இருக்கலாமா?

ஒரு பாடசாலை, ஒரு பெரிய மனிதர் ஆகியோரிடமிருந்து வந்த ஆட்சேபனைகளைத் தொடர்ந்து கல்வித் திணைக்களத்தில் பலமான வாதப் பிரதிவாதங்கள் எழுந்ததும் 18.05.94 திகதியிடப்பட்டு வகிமா/மாகதி/எஸ்.ஓ/பி/205 இலக்க சுற்று நிருபம் மூலம் புராண இலக்கிய நாடகம் என்பதற்கான விளக்கங்கள் அளிக்கப்பட்டதாக முதல் மூன்று இடங்களைப் பெற்ற நாடகப் பிரதிகள் கோரப்பட்டதும், அதைத் தொடர்ந்து மேலும் பல கடிதப் போக்குவரத்துக்கள் நிகழ்ந்ததும், 'இறுதி முடிவை யார் எடுப்பது?' என்ற சிக்கலால், 11.05.94ல் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு 4.6.94 வரை தெளிவான பதில் கொடுக்கப்படாதிருந்ததும் எதைக் காட்டுகிறது?

4.6.94 அன்றும் பிரதேச மட்டப் போட்டிகள் நடைபெறத் தொடங்கிய பின்னரும் 'ஒரு முடிவு' எடுக்க வகையின்றி இருந்ததோடு, மதியம் 12.20 அளவில் 'உங்கள் நாடகத்தையும் கொண்டு வாருங்கள்' என்று அவசர அழைப்பையடுத்து 'தவறு' செய்யாத நடுவர்கள்(?!) முடிவை ஆணித்தரமாக மீறி இரண்டாவதாக வந்த நாடகத்தையும் போட்டியில் சேர்த்துக்கொண்டது தமிழ்த் தின அமைப்பாளர்களது தடுமாற்றத்தைக் காட்டவில்லையா?

ஒரு கோட்ட மட்டத்திலுள்ள அடுத்த போட்டிக்கு இரண்டு நாடகங்கள் மேடையேற்றப்படலாகாது என்ற விதியை மீறியதாக அன்றே சேனபூர் மகாவித்தியாலயத்தால் கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டிருப்பதும் இரண்டு நாடகங்களை ஏன் மேடையேற்றுகிறோம் என்பது பற்றி அதிகாரிகளுக்குக் கடிதமூலம் விளக்கம் அளித்துக் கொண்டுள்ளதும் மறுப்பாளரது ஆணித்தரத்தையும் உறுதியையும் காட்டுகிறதா?

எனவே முரசு தவறவில்லை என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறேன்.

(திருமலை நிருபர்)

## இறைச்சிக் கடைகளை இடம் மாற்றுங்கள்

(அக்குறணை நிருபர்)

'சிறு மக்கம்' என இலங்கை முஸ்லிங்களால் புகழப்படும் அக்குறணையின் நுழைவாயில் (கண்டியின் புறமாக) மாட்டிறைச்சிக் கடைகளினால் ஆகிரமிப்பு செய்யப்பட்டு அக்குறணையின் அழகுப் பொலிவையே இல்லாமலாக்கிக் கொண்டிருக்கின்றன.

அத்துடன் மழை காலங்களிலும் மற்றும் நேரங்களிலும் சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் துர்நாற்றத்தை ஏற்படுத்தும் பஜாரின் மத்தியில் அமைந்துள்ள கோழிக் கடைகளையும் சேர்த்து, மேற்படி இறைச்சிக் கடைகள் அந்த இடங்களில் இருந்து மாற்றப்பட்டு ஒரு பொருத்தமான இடத்தில் அமைக்கப்படுவது மிகவும் பொருத்தமானதும் சுகாதார பூர்வமானதுமாகும் என்று பொதுமக்களிடையே கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இதனை சம்பந்தப்பட்டவர்களும், அதிகாரிகளும் கவனங் கொள்வது சாலப் பொருத்தமானதாகும்.

## பிரதி அதிபரின் விபரீத ஆசை!

# ஊர் மக்கள் தர்ம அடி

(காரைதீவு நிருபர்)

பாடசாலை மாணவியொருத்தியை டியூசனுக்கு என அழைத்து கர்ப்பமாக்கிய பிரதி அதிபரொருவர் ஊர் மக்களால் நையப்புடைக்கப்பட்டார்.

இச்சம்பவம் சாய்ந்தமருது பகுதியில் நடைபெற்றது. இதுபற்றி மேலும் தெரிய வருவதாது: சாய்ந்தமருது பகுதியில் உள்ள வித்தியாலயம் ஒன்றில் பிரதி அதிபராக கடமையாற்றும் பிரஸ்தாப நபர் அதே பாடசாலையில் ஆண்டு 7 கற்கும் மாணவியை தினமும் ரியூசனுக்கு வருமாறு அழைத்து பலாத்காரம் புரிந்து வந்துள்ளார் என்பது மாணவி குழந்தையைப் பிரசவித்த போது தெரியவந்தது.

50 வயதான பிரதி அதிபர் மட்டக்களப்பில் நடைபெறும் கல்விக் கண்காட்சியை பார்த்துவிட்டு வந்திறங்கியதும் ஊரார் சேர்ந்து வெடி கொளுத்தி பிரதி அதிபரை தாறுமாறாக தாக்கினார்கள். ஈற்றில் எதிர்பாராத விதமாக அங்கு வந்த பொலிசார் அவரை கல்முனைக்கு எடுத்துச் சென்றனர்.

பிரஸ்தாப அதிபரின் மூத்த மகளுக்கு எதிர்வரும் 26ல் திருமணம் என்றிருந்தது. இந்த வேளையில் இந்த அவமானம் ஏற்பட்டுள்ளது அதைக் குழப்பிவிடுமோ என்ற ஊகமும் எழும்பியுள்ளது. அதிபருக்கு 4 வயது வந்த பிள்ளைகள் உண்டாம்.

எனினும் இப் பிரசவத்திற்குதான் காரண மல்ல என்று அவர் கூறிவருகிறார். ஆனால் அம்மாணவியோ 'இவர்தான் என் நிலைக்கு காரணம்' எனக் கூறிவருகிறார்.

விடயம் நீதிமன்றம் சென்றுள்ளது. இந்தக் காலத்தில் எப்படி மக்களை பாடசாலைக்கு நம்பி அனுப்புவது? என சிலர் விசனப்பட்டுக் கொண்டனர்.

## இங்கே தமிழ் எங்கே?

(ஹேவாஹெட்ட நிருபர்)

பாத்த ஹேவாஹெட்ட பிரதேச சபைக்குட்பட்ட சுமார் 35 கூட்டுறவுச் சங்கக் கடைகளிலும் உள்ள பெயர் பலகைகளில், தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு தனிச் சிங்களத்திலேயே பெயர் பலகைகள் இடம்பெற்றுள்ளன.

இவ்விடயம் இப்பிரதேசத்தில் வாழும் பல்லாயிரக் கணக்கான தமிழ் பேசும் மக்கள் மனதைப் பாதிக்கும் அம்சமாகவே அமைந்துள்ளது.

இது மட்டுமன்றி இங்குள்ள சகல கூட்டுறவுச் சங்கக் கடைகளிலும் அடிக்கடி வெளியிடப்படும் அறிவித்தல்கள், பிரசுரங்கள் என்பனவற்றிலும் தனிச்சிங்களத்திலேயே அமையப் பெற்றிருப்பதை அவதானிக்க முடிகிறது.

தலாத்துஓய நகரில் அமைந்திருக்கும் இப்பகுதிக் கூட்டுறவுச் சங்கக் கடைகளின் தலைமையகத்தில்கூட பெயர் பலகையுட்பட சகல அறிவித்தல்களும் தமிழ் புறக்கணிக்கப்பட்ட நிலையில் தனிச் சிங்கள மொழியே இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.

இதே பிரதேசத்தில் பிரதேச சபையில் தமிழ் பேசும் பிரதேச சபை உறுப்பினர்கள் ஐவர் இருந்தும்கூட இதுவரை இந்தத் தமிழ் புறக்கணிப்பு நிலை தீர எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பல்லின மக்கள் வாழும் இப்பிரதேசத்திலே தமிழ் பேசும் வாடிக்கையாளருக்காக தமிழ் மொழியில் எந்தவித பங்களிப்புகளையும் இங்குள்ள கூட்டுறவுச் சங்கக் கடைகளில் காண முடியாத நிலை இப்பகுதி மக்களை அதிருப்தியடையச் செய்துள்ளது.

இவ்வாறான தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகின்ற நிலை தொடராது காக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனியேனும் கவனமெடுப்பார்களா? என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.


### விளம்பரப் பகுதி

## மலையாள மாந்திரீகம்



வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கடந்த 27 வருடங்களாக மாந்திரீகத் துறையில் உண்மையான, நிலையான சேவையை ஒட்டியே தற்பொழுது எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட தனியார்துறையாக (PVT. LTD) உருவாகியுள்ளது. இதன் சொத்து அனைத்துமே சிறீ துர்க்கா அம்மனுக்கே.



இதைவிட உண்மையை அறிய நேரில் வாருங்கள்.
உங்கள் குறை என்ன?
வாழ்வில் நிந்திப்பா?
வறுமையில் தவிப்பா?
இஷ்ட தேவவைகளில் குறையா?
இஷ்டப்பட்டவனையோ,
இஷ்டப்பட்டவளையோ
தீர்க்கமாகவே அடைந்து தீர வேண்டுமா? இன்னலுக்குப் பின் இன்னலாக வரும் தறுவாயில் எதிர் நீச்சலுக்கு ஏணிப்படியாக பற்பல உற்சாடனங்கள் உண்டு.
இன்னும் வசியத் தொப்பி, தீர்க்க முடியாது என முடிவெடுக்கப்பட்ட ஆஸ்துமா நோய், தீராத நோய்கள் அனைத்துக்கும் அம்மனிடம் வாருங்கள்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் மகா விகாரை, கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையம் இவற்றின் மத்தியில் அமைந்துள்ள புதியதோர் இடத்தில் மாதந்தோறும் 20முதல் 31 வரை நிச்சயம் சேவையில் இருப்பேன். இத்தினங்களில் பூஜைகள், ஆராதனைகள், அன்னையின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதங்கள் பெறலாம். அதுமட்டுமல்ல. எமது பிரிவில் கைரேகை நிபுணத்துவம், வாழ்க்கைச் சுவடி சாஸ்திரம், ஜாதகக் குறிப்பு, என் ஞானக் குறிப்பு, இனியும் வேறு என்ன என்பதற்கு நேரில் வரவும்.

***வறியவர் எனக்கண்டால் எமது ஸ்தாபனத்தில் தனி இடம் உண்டு.***

*தலைமைப்பீடம்*

P.K.சாமி JDGAN (மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3093

கொழும்பில்– இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 078-71592, 078-71243

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
FAX: 0094 2508, 0094 3093

## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
*187, செட்டியார் தெரு,*
*கொழும்பு 11,*
*போன்: 421398*

## "தனலக்ஷ்மி" அதிர்ஷ்ட சீட்டுத் திட்டம்

REGD. NO. A.A 4203

- மொத்த மாதங்கள் 24
- மாதாந்தம் ரூபா 500/=, ரூபா 1000/= மட்டும்.
- மாதாந்தம் நடைபெறும் குலுக்கலில் வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு ரூபா 12,000/= மற்றும் ரூபா 24,000/= பணப்பரிசுகள்.
- வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகள் தொடர்ந்து பணம் செலுத்தத் தேவையில்லை.
- வெற்றிபெறாத ஏனையோருக்கு செலுத்திய தொகையுடன் 24ம் மாதமுடிவில் ரூ.12,500/=ம் மற்றும் ரூபா 25,000/= பணமாக வழங்கப்படும்.
- இத்திட்டத்தில் இலங்கையில் எப்பாகத்திலிருந்தும் சேரலாம்.
- வெற்றிபெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்கு கடிதமூலம் அறியத்தரப்படும். மேலும் பத்திரிகை வாயிலாகவும் அறியலாம்.
- குறிப்பிட்ட உறுப்பினர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படும்.

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 5,64,000/=
விரையுங்கள் பரிசுகளைத் தட்டிச் செல்ல.

** வெகுவிரைவில் முதலாவது குலுக்கல் திகதி அறிவிக்கப்படும்.*

விபரங்களுக்கு:–
*SURESH COMBINE*
AMUTHA JEWELLERS
20, DAILY FAIR COMPLEX
NUWARA ELIYA

கிளை:
*AMUTHA GOLD HOUSE*
15, BUS STAND
RAGALA, HALGARANOYA.
*T.P. 052-5305*

Advt

## நரைமயிர் கறுப்பாகிறது!

### புதுமை ஆனால் உண்மை!

வட இந்தியாவில் தேர்ச்சி பெற்ற டாக்டர் ஒருவரால் 10 வருடகாலமாக பரிசோதனை செய்து தயாரிக்கப்பட்டது.

மெடிக்கல் ஒயில் விலை ரூபா 280/=

நீங்கள் விரும்பிய எண்ணெயுடன் கலந்து பாவிக்கலாம்.

**கால வர்ண கேசா லெப்ப**

*கிடைக்குமிடங்கள்:*

UVA MEDICALS -**UDAPUSSELLAWA.** CITY DRUGS-NO. 93, OLCOTT MAWATHA, (OPPOSITE RAILWAY STATION) **PETTAH,** ROYAL TRADE+NUWARA-ELIYA MEDICALS-**NUWARA-ELIYA,** RENUZA- **WELIMADA** + UWA+URE **BANDARAWELA,** LANKA MEDICALS-**RATNAPURA,** PRAME MEDICALS PERADENIYA ROAD, **KANDY,** METROY PELMADULLA SERENDIB -**PANADURA,** CENTRAL- **HATTON,** SILVAS - **GALLE,** LOYED - **MATARA,** THE NEW PHARMACY-**KURUNAGALA,** KANDY LINES-**KEGALLE,** BADULLA APPOTHICARIES- **BADULLA,** MEGAS- **HAPUTALE,** UNION PHARMACY- **WELLAWAYE,** SAUSIRI PHARMACY **MONERAGALA,** THE NEW CITY PARMACY-**AMPARA,** SETHMINI PHARMACY -**MAHIYANGANA,** PRIYA PHARMACY- **BIBILE,** KANAGA PHARMACY-**HALGARANOYA,** WIJEMANNA GROSARIES-**HORANA.**

விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்
விளம்பர மேலாளர்
தினமுரசு வாரமலர்
இல.5, காவிந்த பிளேஸ்,
கிருளப்பனை
கொழும்பு–06.
தொலைபேசி 852041

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

நாரதர் எக்ஸ்பிரஸ் ரிப்போர்ட்

# யாழ் சென்றுவரும் பத்திரிகையாளர்கள் கொண்டுவரும் செய்திகள்

**யா**ழ் சென்ற செய்தியாளர்கள் வெறுங்கையுடன் திரும்ப விரும்ப வில்லை.

செய்தியாளர்களது நோக்கம் நல்லதுதான். ஆனால் அவர்கள் கொண்டுவந்த செய்தியில் புதிய தாக்கமோ திருப்பமோ தென்படவில்லை.

இலண்டன் பி.பி.சியின் இலங்கை முகவரும், 'ராய்டர்' செய்தியாளரும் கடந்த வாரம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்பியிருக்கிறார்கள்.

பிரபாகரனைச் சந்திக்காமல் தமது செய்தியாளர் திரும்பவேமாட்டார் என்பதுபோல பி.பி.சி.சொல்லிக் கொண்டிருந்தது.

ஆனால் செய்தியாளர்கள் காத்திருந்தும் பிரபாவைச் சந்திக்க முடியாமல் அரசியல் ஆலோசகர் திரு.பாலசிங்கத்தை பார்த்துவிட்டு திரும்பவேண்டியதாகிவிட்டது.

பிரபாவைத்தான் காண முடிய வில்லை, பாலசிங்கத்தின் வாயைக் கிளறுவோம் என்று செய்தியாளர்கள் நினைத்தார்கள்.

பாலசிங்கம் அனுபவசாலி. அரசியலில் பழம் தின்று கொட்டை போட்டவர். அதனால் பிடியே கொடுக்காமல் பேசியிருக்கிறார்.

"நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயார்" என்று சொல்லியிருக்கிறார்.

ஏதோ கிடைத்ததே போதும் என்று அவர் சொன்ன செய்தியைக் கொண்டு வந்து கொழும்பில் வெளியிட்டிருக்கிறார்கள் செய்தியாளர்கள்.

அது ஒன்றும் புதிய செய்தியல்ல. அரசும்-புலிகளும் பேச்சு முறித்து மீண்டும் போர் ஆரம்பித்த சில மாதங்களின் பின்னர் நிபந்தனையற்ற பேச்சுப் பற்றிப் புலிகள் பேசத் தொடங்கிவிட்டார்கள்.

இலங்கைப் பத்திரிகைகளை கடந்த நான்காண்டுகளாக பத்திரமாக சேகரித்து வைத்திருப்பவர்கள் ஒரு முறை அவற்றை புரட்டிப் பார்க்கலாம்.

"நிபந்தனையற்ற பேச்சுக்கு புலிகள் தயார்" என்னும் செய்தி ஒன்றுக்கு பத்து தடவை பிரசுரமாகியிருப்பதைக் காணலாம்.

கடந்தவாரம் மீண்டும் அந்த செய்தி மறுபிரசுரமாகியிருக்கிறது.

சில பத்திரிகைகள் மறதியின் காரணத்தினாலோ அல்லது வேறு ஏதோ காரணத்தினாலோ அதனை புதிய செய்திபோல பெரிய தலையங்கத்தோடு வெளியிட்டும் இருந்தன.

புலிகளது மொழியில் சொல்ல வேண்டுமானால் 'இரண்டாம் கட்ட ஈழப்போர்' தொடங்கிய கடந்த நான்கு வருடங்களில் பேச்சுக்கு தயார் இல்லை என்று புலிகள் ஒருமுறைகூட பகிரங்கமாகச் சொன்னது கிடையாது.

மாறாக ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காதான் போரில் ஒரு கரை கண்டுவிட்டுத்தான் பிரபாவோடு பேசுவேன் என்ற தொனியில் பேசியிருந்தார்.

அண்மையில் வவுனியா சென்ற ஆளும் கட்சியின் செயலாளர் "ஜனாதிபதி பேசத் தயார். ஆயுதம் ஏந்தாத எவருடனும் பேசுவதற்கு இப்போதும் அவர் சித்தமாக இருக்கிறார்" என்று கூறியிருந்தார்.

புலிகளை தவிர்த்துவிட்டு பிரச்சனைக்கு தீர்வு காண்பது சாத்தியமில்லை என்ற நிலையிலும் அவர் அப்படிப் பேசியிருக்கிறார்.

ஆயுதம் ஏந்தாதவர்களோடு மட்டும் தான் ஜனாதிபதி பேசுவார் என்றால் தமிழ் விடுதலைக் கூட்டணியுடன் மட்டும்தான் பேசவேண்டியிருக்கும்.

அல்லது தற்போது இடைக்கிடையே அறிக்கைவிடும் தமிழ் மூத்தோர் அவையுடன்தான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

"புலிகளோடு வேண்டாம் நீங்கள் வாருங்கள் பேசுவோம்" என்று அரசு அழைத்தால்கூட கூட்டணியினரும், மூத்தோரும் கும்பிடு போட்டுவிட்டு ஓடிவிடுவார்கள்.

ஆக, மொத்தத்தில் சூழ்நிலை புரியாமல் அரச தரப்பில் இருந்து பேசப்படுகிறதே தவிர, புலிகள் புத்திசாலித்தனமாகத் தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே- நிபந்தனையின்றி பேசத் தயார் என்று புலிகள் கூறுவது ஒன்றும் புதிய செய்தியல்ல.

ஆனால் நிலமை என்னவென்றால் யாழ் சென்று திரும்பும் சில செய்தியாளர்கள் தமது நிறுவனங்களை திருப்தி செய்ய சூழ்நிலைக்கு புறம்பான கற்பனைகளை உருவாக்க முயலுகிறார்கள்.


அதனால், மக்களும் அடிக்கடி எதிர்பார்ப்புக்களை உருவாக்கிக்கொண்டு பின்னர் ஏமாந்து போகிறார்கள்.

இறுதியில் அரசியல் நிகழ்வுகள் மீதும் நாட்டு நிலவரங்கள் மீதும் விரக்தியான கண்ணோட்டத்திற்கு சென்று விடுகிறார்கள்.


முன்னர் இப்படித்தான்; கொழும்பின் பிரபல ஆங்கிலத் தினசரி நிருபர் ஒருவர் தான் யாழ்ப்பாணம் சென்றதாகவும், பிரபாவை சந்தித்ததாகவும் கூறி பேட்டி ஒன்றையும் வெளியிட்டிருந்தார்.

நிபந்தனையற்ற பேச்சு என்பதில் ஏனைய தமிழ் அமைப்புக்கள் பேச்சில் கலந்துகொள்ள வேண்டும் என்பதையும் புலிகள் நிராகரிக்கிறார்கள்.

ஏனைய தமிழ் அமைப்புக்கள் பேச்சு வார்த்தை நடக்கும் பக்கமே எட்டியும் பார்க்கக்கூடாது என்பதுதான் புலிகளது நிலைப்பாடு. பின்னர் எங்கே நின்று புலிகளை இவர்கள் வரவேற்கப் போகிறார்கள் என்றுதான் தெரியவில்லை.



"கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்"







அநுரா

அந்த ஆங்கில தினசரி தவிர வேறு சில செய்தி நிறுவனங்களுக்கும் தனது யாழ் பயண அனுபவக் கதையை அவர் நல்லதொரு விலைக்கு விற்றுவிட்டதாகவும் ஒரு தகவல் உண்டு.

பத்திரிகைகளில் செய்தியைப் பார்த்த பிரபாவுக்கு அதிர்ச்சியாம்.

அப்படி ஒரு நிருபரே இங்கு வந்ததும் இல்லை. எங்கள் தலைவரைக் கண்டதும் இல்லை என்று புலிகள் உடனே மறுத்துவிட்டனர்.

"கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர்" என்பதுதான் யாழ் சென்றுவரும் சில செய்தியாளர்களுக்கும் பொருத்தமாக இருக்கிறது.

இதே சமயம் நிபந்தனையற்ற பேச்சுக்குப் புலிகள் தயார் என்று பழைய செய்தியை புதிதாக கேட்டவர் போல திரு.பிரட்மன் வீரக்கோன் "அப்படியா சொன்னார்கள்? அப்படி என்றால் கவனிக்கத்தான் வேண்டும்" என்கிறார்.

அதே நேரம் இராணுவ பிரிகேடியர் ஒருவர் இதைவிட்டால் தமது பலத்தை சுட்டிக்காட்ட வேறு சந்தர்ப்பம் இல்லை என்பதுபோல, புலிகள் பலவீனமாகி விட்டார்கள்- அதுதான் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள் என்கிறார்.

'புளொட்' இயக்கத் தலைவர் திரு. சித்தார்த்தனும் தமது சமாதான விருப்பத்தை காட்ட ஒரு வாய்ப்பாக 'புலிகள் பேச வந்தால் வரவேற்கலாம்' என்கிறார். ஏனைய இயக்கங்களிடம் செய்தியாளர்கள் கேட்காமல் விட்டுவிட்டார்கள்.

கேட்டிருந்தால் அவர்களும் வரவேற்கத் தயார் என்று சொல்லியிருக்கக்கூடும்.

எப்படியோ செய்தி பழையதானாலும் அதை வைத்தே ஒரு பரபரப்பை ஏற்படுத்திய செய்தியாளர்களை பாராட்டத் தான் வேண்டும்.

ஆக, நாட்டின் தற்போதைய அரசியல்-இராணுவ நிலைகளில் புலிகளின் கையே மேலோங்கியிருக்கிறது.

இன்னும் நாலு வருடம் சென்ற பின்னரும் புலிகள் சொன்னதையே திருப்பிச் சொன்னால்கூட அப்போதும் அது பரபரப்பான செய்தியாகும்.

இதன்மூலம் அறியப்படும் நீதி யாதெனில் பலமுள்ளவன் பேச்சே சபை ஏறும்.

ஆனால் செய்திகளைப் பார்த்துவிட்டு திருப்பம் வரப்போகிறதோ என்று நினைத்து ஏமாறுகிறவர்கள், உண்மையான திருப்பம் வரும்போதும் 'புலி வருகுது' கதையாக நம்பிக்கையீனம் கொள்ளும் நிலை தவிர்க்க முடியாதது.

அது பற்றிச் செய்தியாளர்களுக்கு கவலையில்லை. தம்மை வடக்கே அனுப்பவும், செய்தி திரட்டவும் பணம் செலவிடும் தமது நிறுவனங்களை திருப்திப்படுத்துவதே அவர்களது கடமை.

உண்மையில் போர் நிறுத்தம் வந்தால் கவலைப்படப் போவது அந்த செய்தி யாளர்கள்தான். ஏனெனில் வெறும் வாயை மெல்ல முடியாதல்லவா?

## அமைச்சரவை மாற்றங்கள் ஆளும் கட்சிக்குள் முணுமுணுப்புக்கள்

**அ**மைச்சரவை மாற்றங்கள் அறிவிக்கப்பட்டுவிட்டன.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சை ஜனாதிபதியே பத்திரமாக தன் வசம் வைத்துக்கொண்டார்.

முதலில் திரு.காமினி திசாநாயக்காவுக்கு அந்தப் பொறுப்பு கொடுக்கப்படவுள்ளதாக அரச வட்டாரங்களில் பேசப்பட்டது.

திரு.காமினி திசாநாயக்கா கூட எதிர்பார்த்திருந்தார்.

பின்னர் திரு.காமினி ஜெயவிக்கிரம பெரேராவுக்கு கொடுக்கப்படப் போவதாக ஒரு செய்தி மெல்லக் கசிந்தது.

இறுதியில் இரு காமினிகளுக்குமே இல்லையென்றாகிவிட்டது.

பாதுகாப்பு-நிதி இரண்டுமே மிக முக்கிய துறைகள்.

முக்கிய துறைகளை உடனடியாக கைமாற்றிக்கொடுப்பது முதலுக்கே மோசமாகிவிடலாம் என்று எவராவது ஜனாதிபதிக்கு எடுத்துச் சொல்லிவிட்டார்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமா பாதுகாப்புப் பொறுப்பை ரஞ்சனிடமும், நிதிப் பொறுப்பை தற்போதைய ஜனாதிபதியிடமும் கொடுத்திருந்தார்.

பிரேமதாசா நம்பிக்கை வைத்தது போல தானும் நம்பிக்கை கொள்ளக்கூடிய வர்களை ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா இன்னமும் இனம்காணவில்லை என்றும் கருதலாம்.

மந்திரிசபை மாற்றங்கள் ஆளும் கட்சிக்குள் முணுமுணுப்பை உருவாக்கி யிருப்பது மெய்தான்.

திரு.அலுவிகாரை தன்னிடம் இருந்த பொறுப்பை எடுத்துவிட்டு வேறு பொறுப்பைக் கொடுத்தபோது மறுத்து விட்டார்.

அமைச்சரவை மாற்றத்தின் அன்றே புதிய அமைச்சராவோர் பட்டியலில் இருந்த திரு.காமினி ஜெயவிக்கிரம பெரேராவும் பதவி ஏற்க மறுத்துவிட்டதாக ஒரு செய்தி அடிபட்டது.

முன்னர் வடமேல் மாகாண முதல்வ ராக இருந்தவர் அவர். கட்சிப் பணிகளிலும் தீவிரம் உள்ளவர். மறைந்த ஜனாதிபதி பிரேமாவுக்கு நெருக்கமாக இருந்தவர்.

வடமேல் மாகாண சபையில் ஆளும் கட்சி ஆட்சிப் பொறுப்பை பெற முடியாது போனாலும் தனிநபர் விருப்பு வாக்குகளை அவர்தான் அதிகமாகப் பெற்றிருந்தார்.

தனக்கு தருவதாக முதலில் சொல்லப்பட்ட அமைச்சர் பொறுப்பு குறித்து திருப்தி இல்லாத காரணத்தால் உடனே மறுத்தார் என்கிறார்கள்.

அமைச்சரவை மாற்றத்தால் சந்தோசமாக இருப்பவர்தான் திரு.அநுரா பண்டாரநாயக்கா.

புதிதாக ஒரு பொறுப்பு. தேசிய நல்லிணக்க அமைச்சர் பதவி.

திரு.அநுரா நியாயமாக தனது சகோதரியாருக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.

அநுராவின் கரத்தை ஆளும் கட்சி பலப்படுத்துவது எதிரணியின் முகத்தில் குத்துவதற்கே என்பது இரகசியம் அல்ல. குத்தில் பாதி சகோதரியின் முகத்திலும் விழுந்துவிடாமல் போகாது.

எதிரணி வெள்ளத்தை தடுக்க அநுராவும் ஒரு அனாதைதான். சந்திரிக்காவின் கரம் ஓங்காமல் தடுக்க அநுராவின் கரம் பலப்படுத்தப்படுகிறது. அதனால் கரம் ஓங்க முற்படும் சந்திரிக்காவுக்கு அநுரா நன்றி சொல்வதில் தவறில்லை.

ஆளும் கட்சிக்குள் முணு முணுப்புக்கள் இருந்தாலும்கூட அவை வெளியே கேட்கும் முழக்கமாக மாறும் அறிகுறி தெரியவில்லை.

அமைச்சரவை மாற்றங்களும் ஜனாதிபதியின் அதிரடியான சலுகை அறிவிப்புக்களும் ஜனாதிபதித் தேர்தலில் வென்றுவிடலாம் என்ற நம்பிக்கையை ஆளும் கட்சியிடம் உருவாக்கியுள்ளன.

அமைச்சர் தொண்டாவும் ஆதரவாக உள்ளதால் வெற்றி பெறும் நம்பிக்கை அதிகமாகியிருக்கிறது.

முஸ்லிம் காங்கிரசின் ஆதரவையும் ஜனாதிபதி கேட்டிருக்கிறார்.


அதே நேரம் சந்திரிக்காவும் கோரியிருக்கிறார்.

அஷ்ரப் பிடிகொடாமல் பதில் சொல்லி சமாளித்துக் கொண்டிருக்கிறார்.

இனப் பிரச்சனைக்கான தீர்வை முன்வைக்கும்படி இரு தரப்பினரிடமும் அஷ்ரப் வலியுறுத்தியுள்ளதை பாராட்டலாம்.

ஆதரவு கேட்கிறீர்கள். ஆகவேண்டிய தீர்வை முதலில் கவனியுங்கள் என்று எடுத்துச் சொல்லியிருப்பது அஷ்ரப்பின் அரசியல் விவேகத்திற்கு சபாஷ் போட வைக்கிறது.

## அதிரடி அய்யாத்துரை



**யா**ழ் குடாநாட்டிலை நினைச்சவுடன் சினிமா பார்க்க முடியாது. முன்னொரு காலத்திலை நகரிலை படம் பார்க்க சாப்பாட்டு பொட்டலம் சகிதம் மாட்டு வண்டி கட்டி கிராமத்து சனம் விடியக் காலையிலேயே வெளிக்கிடுறவை. இப்பவும் படம் பார்க்கிறதெண்டா பெரிய அடுக்குப் பண்ணவேணும். ஜெனரேட்டர் எடுத்து, டெக், ரி.வி வாடகைக்கு பிடித்து, கொப்பி எடுத்து, செலவை ஈடுகட்ட அயல் வீடுகளையும் திரட்டி செலவோடை செலவா விடிய விடிய நாலு படம் பார்த்து முடிக்கிறதெண்டா லேசுப்பட்ட வேலையோ? திருவிழா மாதிரித்தானாம்.

**கொ**ழும்பிலை பழைய தமிழ் திரைப்படங்கள் ஓடுது கண்டியளோ? யாழ் பகுதியிலை வந்த ஒரு குடும்பம் 'தில்லானா மோகனாம்பாள்' பார்க்கப் போனதாம். சோகம் தாங்காமப் போய் குடும்ப சகிதமாய் தியேட்டரிலை கண்ணக் கசக்கி மூக்கு சிந்திக்கொண்டிருந்தவையாம். யாழ்ப்பாணத்திலை எண்டா இந்த மாதிரிப் படம் பார்த்து அழ முடியுமே. பிணம் பார்த்துத்தான் அழவேணும்.

**அ**ரச பத்திரிகை நிறுவனத்துக்கு பல நூறுகோடியிலை புது அச்சுமெசின் வந்திருக்கு. தமிழ் பத்திரிகையும் விழுந்து விழுந்து செய்தி போட்டதுதான் மிச்சம். தமிழ் பத்திரிகை பழைய மெசினிலைதான் அடிபடுதாம். அலுவலகமும் ஒரு கோழிக்கூடு மாதிரி இடத்திலைதான் இருக்குதாம். எங்கடை ஆக்களுக்கு வாழ்த்தத்தான் தெரியும். தேவையானதை கேட்டு வாங்கத் தெரியாது.

**ம**களைத்தான் போட்டியிட வைக்க வேண்டும் எண்ட அபிப்பிராயம் எதிர்வரிசையிலை பலமா எழும்பத் தொடங்கிப் போட்டுதாம். கரைப்பார் கரைச்சா கல்லும் கரையும் எண்ட மாதிரி அம்மாவும் யோசிக்கிற மாதிரித் தெரியுதாம்.

**ச**மீப காலமாக ரெண்டு எழுத்தாருக்கு சாதகமா பேசி வரும் தமிழ் இயக்கம் ஒன்று தமிழ் நாட்டிலை கூடி ஒரு முடிவெடுத்திருக்காம். ரெண்டு எழுத்தாரை கண்டிக்காமல் கரிசனை வாற மாதிரி நடந்து கொள்ளுறதுதான் முடிவாம். ஆனால் பாருங்கோ. ரெண்டு எழுத்தாற பரிவு காட்டுவினமோ தெரியேல்லை.

**ப**ருதிக்கு ஒரு துண்டா பிரிஞ்ச நிற்கும் வெளிச்ச வீடு சுயேட்சை குழுவின் ஒரு துண்டுத் தலைவர் வெளிநாட்டு பிரஜா உரிமையோடை ஈழத் தமிழனுக்காக குரல் கொடுக்கிற நினைவு வர ஓடோடி வந்திருக்கிறாராம். இதைக் கேள்விப்பட்ட கிழக்குத் துண்டு பொறுப்பாளர் கோபத்திலை கொதிச்சப் போயிருக்கிறாராம். 'கொழும்பிலை இருந்து வெளிநாட்டு ஏஜென்சி செய்யிறவை அரசியல் கட்சி நடத்த விடமாட்டேன்' எண்டு சபதமும் எடுத்திருக்கிறாராம். பார்க்கலாம் யார் வெல்லுறது எண்டு.

**ப**ழைய கூட்டாளிகளை எல்லாம் சந்திச்ச குசியிலை கூட்டான அணித் தலைவர்மாருக்கு கால் நிலத்திலை இல்லையாம். எலக்சன் வரட்டும் வெளுத்துக் கட்டலாம் எண்டு வாலிப உற்சாகம் திரும்பியிருக்குதாம்.

**ச**மீபத்திலை தமிழ்நாட்டு அரசியல்வாதி திரு.சுப்பு எழுதின புத்தகம் ஒன்று வாசிக்கக் கிடைச்சுது. ஒரு புதுக்கவிதையை மேற்கோள் காட்டியிருந்தார். எனக்குப் பிடிச்சுதோ இல்லையோ நீங்கள் படிச்சுப் பாருங்கோ. தலைப்பு-'குற்ற உணர்வு'!

'தேச விரோதிகளே!'
என்று அழைத்தேன்...
திரும்பிப் பார்த்தவர்கள்
அரசியல் வாதிகள் மட்டும்!

கழனிவாசல் காளிதாஸ் என்பவர்தான் எழுதியது. நம்ம ஊர் அ.வாதிகள் கோபிக்கக்கூடாது. சுப்புவும் அரசியல்வாதிதானே?


வன விலங்குகளை சிறு குட்டிகளாக இருக்கும் காலத்திலேயே எடுத்து வளர்த்தாலும் அவற்றின் 'மிருகக் குணம்' என்றுமே மாறப் போவதில்லை என்பதற்கு உதாரணம் இந்த உண்மையான கதை:

ஃபுளொரிடாவிலுள்ள மெற்றோ உயிரியல் பூங்கா (மிருகக் காட்சிச்சாலை)யில் லக்னோ என்ற பெயருடைய வெள்ளை வேங்கைப் புலி ஒன்றுண்டு. வெள்ளை வேங்கை மிக

# வளர்த்தவரை விழுங்கிய வேங்கை

## அமெரிக்காவில் நடந்த கொடூரம்!

அரிதாகவே காணப்படும் இந்தப் புலியை சிறு குட்டியாக இருக்கும்போதே சீராட்டி வளர்த்து வந்தவர் டேவிட் மார்ஷல் என்ற மிருக வளர்ப்பாளர்.



160 கிலோ எடை கொண்ட அந்தப் பிராணி எப்போதும் சாந்த சொரூபியாகவே இருந்து வந்தது. இரவு நேரங்களில் கூண்டுகளுக்குள் அடைக்கப்படும் மிருகங்கள் பகல் நேரங்களில் காட்சிச்சாலைகளுக்கு வரும் பார்வையாளர்களை ஈர்ப்பதற்காக இயற்கை வனம் போன்ற செயற்கைச் சூழலுக்கு அனுப்பப்படுவதுண்டு.

ஜூன் மாத முதல் வாரத்தில் ஒரு நாள் வழக்கம்போல் மார்ஷல், லக்னோவை செயற்கை வனத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

மார்ஷல் நீண்ட நேரம் குறிப்பிட்ட இடத்துக்குத் திரும்பாமையினால் ஏனைய சக, ஊழியர்கள் அவரை தங்கள் தொர்புக் கருவியான 'வோக்கி-ரோக்கி' மூலம் தொடர்பு கொண்டும் பயன் காணாது தேடியதில் அவருடைய உயிரற்ற சடலம் தான் கண்டுபிடிக்கப்பட்டது.

கழுத்து முறிக்கப்பட்டு உடலின் சில பகுதிகளில் சதை பெயர்க்கப்பட்டு அந்த உடல் கிடந்தது. புலியின் வேலைதான் அது என்று புரிந்தது.


ஒரு தடவை மனித இரத்தச் சுவைகண்ட மிருகம், தொடர்ந்தும் மனித வேட்டையாடத் தயங்காது என்ற கருத்துக்கொப்ப, லக்னோவை இனிமேல் உயிருடன் விட்டு வைக்கலாகாது என்ற கருத்து மிருகங்களுடன் உறவாடும் ஊழியர்களுக்கு உண்டானது.

ஆனால் அதிகாரிகளும் பொதுமக்களும் புலியைக் கொலை செய்யலாகாதெனக் குரலெழுப்பினர். "மனிதர்கள் தங்களைப் பாதுகாக்கத்தவறியமை புலியின் குற்றமல்ல" என்று எதிர்ப்புக் கிளம்பியது. அதுமட்டுமல்லாமல் வெள்ளை வேங்கை அரிய இனம் என்பதனால் அதனை அழித்து விட முடியாது என்றும் தீர்மானித்தனர்.

கொடிய வன விலங்குகளுடன் பழகுவோர் இனிமேல் தனித் தனியாகச் செல்லாமல் இருவரிருவராகச் செல்ல வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ●

# கனடாவிலும் அந்நிய எதிர்ப்புக் கோஷம்

## "மூன்றாம் உலக நாட்டவர்களே வெளியேறுங்கள்"




"மூன்றாவது உலக நாடுகளிலிருந்து வந்து கனடாவில் குடியேறுவோரால் எமது கலாசாரம் பாதிப்படைகிறது. ஆகவே அவர்களுடைய குடியேற்றம் உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும். பதிலாக எமது பண்பாடுகளுடன் ஒன்றிப்போகவல்ல ஐரோப்பிய நாட்டவர்கள் வந்து குடியேற கதவுகளைத் திறந்து விடுங்கள்" என்ற கோஷம் இப்பொழுது கனடாவில் எழுந்துள்ளது.

கனடாவில் அகதிகள் அந்தஸ்து பெற்றுள்ள மற்றும் கனடிய பிரஜா உரிமை பெற்றுள்ள இலங்கைத் தமிழர்களையும் கலக்கமடைய வைத்துள்ளது இக்கோரிக்கை.

மூன்றாவது உலக நாடுகளான ஆபிரிக்கா, இலத்தின் அமெரிக்கா, ஆசியா ஆகிய பிரதேசங்களிலிருந்து கனடா நோக்கி வருபவர்கள் குடியேற்ற நோக்குடன் வருபவர்களல்ல. அந்தப் பிராந்திய நாடுகளில் நடைபெறும் உள்நாட்டுப்போர் போன்ற இன்னோரன்ன பிரச்சனைகளால் துன்பப்பட்டு வெளியேறும் அகதிகளாகவே அவர்கள் காணப்படுகின்றனர். ஆங்காங்கே நிலவும் வறுமை, பட்டினிச்சாவு போன்ற கொடுமைகளாலும் பலர் கனடாவுக்கு வருகின்றனர்.

சோமாலியா, அங்கோலா, ஆப்கானிஸ்தான், இலங்கை மற்றும் மெக்சிக்கோ ஆகிய நாடுகளில் நடைபெறும் அரசியல் கொந்தளிப்பு தொடர்பான வன்முறைகளுக்கு அஞ்சியோரும் கனடாவில் அகதிகளாகப் புகலிடம் தேடுகின்றனர்.

ஆபிரிக்க நாடுகள் தொடர்பான உலக வங்கி அறிக்கை பின்வருமாறு கூறுகிறது: ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள அரைவாசிக்கும் மேற்பட்ட நாடுகள் உள்நாட்டு அரசியல் கொந்தளிப்புகளில் சிக்கியுள்ளன.

இதற்குக் காரணம் இந்நாடுகளை அடிமைப்படுத்தி வைத்திருந்த ஏகாதிபத்திய நாடுகள் அந்தந்த நாட்டு மக்களை சுயாட்சி நடத்துவதற்கேற்றவர்களாக அறிவூட்டத் தவறியமையேயாகும்.

இதனால் ஆதிக்கப்போட்டியினால் ஏற்படும் ஆயுதப் போராட்டங்கள், உயிர்ப்பலி மற்றும் வறுமை ஆகியவை தலையெடுக்கின்றன. அத்துடன் கனடா மக்களின் நீண்ட ஆயுளும் ஒரு காரணமாகும்.

ஆபிரிக்க மக்களின் சராசரி ஆயுள் ஆக 47. அதே வேளை கனடாவில் வாழும் குடிமகன் சராசரி 78 வருடம் உயிர்வாழ்கிறான்.

ஆபிரிக்காவிலுள்ள நாடுகளில் பெரும்பாலானவை 1960களில் சுதந்திரமடைந்தன. உடனடியாகவே ஆதிக்க ஆசைகளும் வெடித்து இரத்த ஆறு ஓடும் நிலை உருவானது.

அது மட்டுமல்லாமல் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் இந்நாடுகளில் தத்தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முற்பட்டமையும் முக்கியமானதொரு காரணமாகும்.

ஜனநாயகம் என்ற அணியில் அமெரிக்க ஓரணியை அணைத்து ஆயுதங்களை வழங்கியது. சோவியத் நாடு கொம்யூனிச தத்துவத்தை விதைத்து மறுசாராருக்கு ஆயுதங்களை வழங்கியது. அன்று தொடங்கிய ரணகளம் இன்றுவரை ஓயவில்லை.

இவ்வாறு உலக வங்கியின் அறிக்கை தெரிவிக்கிறது.

சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் கனடா என்றும் மதிப்பளித்து வந்துள்ளது. உலகின் பல பாகங்களிலும் ஐ.நா.அமைதிப்படை அணிகளில் கனேடியத் துருப்புகளும் காணப்படுகின்றன. இங்கெல்லாம் கனேடிய நாட்டுத் துருப்புகளுக்கு நல்ல மதிப்பளிக்கப்படுகிறது.

சீனாவில் ஜனநாயகம் கோரிப்போரிட்ட சீன இளைஞர்களை ரியனன்மன் சதுக்கத்தில் அந்நாட்டு இராணுவம் வகைதொகையற்றுக் கொன்று குவித்தது. இதனைத் தொடர்ந்து 4,500 சீனர்கள் கனடாவில் தஞ்சம் புகுந்தனர். அவர்கள் தங்கள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் நிச்சயமாக அவர்கள் பழி வாங்கப்படுவார்கள் என்பது திண்ணம்.

அவ்வாறிருந்தும்கூட கனடா குடிவரவு அதிகாரிகள் இதுவரை அவர்களுக்கு குடியேற்ற அந்தஸ்து தரவில்லை. அவர்களுடைய சுதந்திரப் போராட்டம் மேற்கு உலக நாடுகளின் ஆதரவையும் அனுதாபத்தையும் பெற்றது என்பதை மறுக்க முடியாது.

இன்று கனடாவில் பரவி வரும் அந்நிய எதிர்ப்புக் கோஷங்கள் மிகவும் வலிமை கொண்டு வளர்ந்து வருவதாக பல்வேறு ஆய்வுகளின் தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

இருப்பினும் இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி, கனடா தனது பாரம்பரிய பண்பியல்பான- அமைதியை நேசித்து , மனிதாபிமானத்துக்கு முக்கியத்துவம் அளித்துவரும் தன்மையினை விட்டு விடுமானால் இந்நாட்டில் மதிப்புக்குறைந்து விடும் என்றே பெரும்பாலான கனேடியர்கள் கருதுகின்றனர். ■

## ஸ்போர்ட்ஸ்




# 'இமாலய முயற்சி'யுடன் அணிகள் மும்முர மோதல்!

**(பிரட்மன்)**

உலகின் பதினைந்தாவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் தற்போது மும்முரமான நிலையை எட்டியுள்ளன.

கடந்த 17ந் திகதி அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் இந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை சிக்காக்கோவின் 'யுத்த வீரர் மைதானத்'தில் (Soldier field) ஆரம்பித்து வைத்திருந்தார். சுமார் 70 ஆயிரம் பேர் இந்த மைதானத்தில் ஆரம்ப விழா நிகழ்ச்சிகளைப் பார்வையிடத் திரண்டிருந்தனர்.

அமெரிக்காவின் ஒன்பது நகரங்களில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பான முறையில் இடம்பெறுகின்றன.

ஆரம்ப தினப் போட்டியில் ஜெர்மனியும், பொலிவியாவும் மோதிக்கொண்டன. இதில் ஜெர்மன் அணி ஒரு கோலைப் போட்டு வெற்றி பெற்றிருந்தது. பொலிவியா கோல்கள் எதனையும் போடவில்லை.

ஜெர்மனியே இதற்கு முன்னர் இத்தாலி நாட்டில் 1990ம் ஆண்டு இடம்பெற்ற 14வது உலகக் கிண்ண போட்டிகளில் சாம்பியன் பட்டத்தைப் பெற்றிருந்தது.

ஜெர்மன் இதுவரை மூன்று தடவைகள் உலக உதைபந்தாட்டச் சாம்பியனாகியுள்ளது. 1954ம் ஆண்டில் முதலாவது வெற்றியையும், 74ம் ஆண்டு, 90ம் ஆண்டுகளில் முறையே இரண்டாம், மூன்றாம் தடவைகளாக உலக சாம்பியன் படத்தை ஜெர்மன் தட்டிச் சென்றிருந்தது.

ஜெர்மன் இதுவரை இடம்பெற்ற உலகக் கிண்ணபோட்டிகளில் மூன்று தடவைகள் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது.

ஆரம்பத்தினப் போட்டிகளைப் பார்வையிட ஜெர்மன் அதிபர் திரு.ஹெல்மட் தோல் அவர்கள் சுமார் பத்து ஜெர்மன் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும், முன்னாள் ஜெர்மன் உதைபந்தாட்ட வீரர்கள் சகிதம் சிக்காக்கோ நகருக்கு வந்திருந்தார்.

பொலிவியா நாட்டு அதிபரும் தனது நாட்டு அணியினரை உற்சாகப்படுத்த சிக்காக்கோ வந்திருந்தார்.

சுமார் இரண்டாயிரம் நடனக்காரர்களின் நடன நிகழ்ச்சிகள், போட்டிகளில் கலந்து கொள்ளும் இருபத்திநான்கு நாடுகளின் தேசிய நடனங்கள் ஆகியவற்றுடன் உலக உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகியிருந்தன.

டயானா றோஸ் என்ற பிரபல அமெரிக்க கறுப்பினப் பாடகி அரங்கின் நடுவே தோன்றி வரவேற்புப் பாடல்களைப் பாடியிருந்தார்.

இத்தடவை உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் அமெரிக்காவில் இடம்பெறுகின்றன. ஆயினும் அமெரிக்காவில் பேஸ்போல், (Base ball) அமெரிக்கன் உதைபந்தாட்டம் (American foot ball) கூடைப்பந்தாட்டம் ஆகியனவே மிகப் பிரபலமானவையாகும்.

### முரட்டுப் பந்தயம்

அமெரிக்கன் உதைபந்தாட்டம் என்பது மிகவும் முரட்டுத்தனமான போட்டியாகும். இப்போட்டியில் பந்தை கால்களால் மட்டுமல்ல, கைகளாலும் எடுத்துச் சென்று ஆடமுடியும். இப்போட்டியில் பங்குபற்றும் வீரர்கள் தலைக்கவசம், கையுறை போன்றவற்றை அணிந்திருக்கக் காணப்படுவர்.

எனவே அமெரிக்காவில் இத்தடவை இடம்பெறும் உதைபந்தாட்டத்தின் நுணுக்கங்களை முதல் தடவையாகப் பார்வையிடுவோரும் இலட்சக்கணக்கில் உள்ளார்கள் என்றே தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் டிட்ரொய்ட் (Detroit) மாநிலத்தில் உள்ள பொன்டியாக் ஸில்வர்டோம் (Pontiac Silverdom) என்ற விளையாட்டரங்கு எத்தகைய காலநிலையையும் தாக்குப்பிடிக்கக்கூடியதாக இருக்கின்றது.

1975ம் ஆண்டு கூட்டப்பட்ட இந்த அரங்கு 80,500 பார்வையாளர்களைக் கொண்டிருக்கக் கூடியது. அத்துடன் மழை ஏற்படும்போது இந்த விளையாட்டரங்கின் மேலாக கூரைகள் தோன்றும். இதனையடுத்து காற்றோட்டம், வெளிச்சம் என்பன அனைத்தும் செயற்கையான முறையிலேயே இம் மைதானத்தினுள் கிடைக்கும்.

A,B,C,D,E,F என்று ஆறு குழுக்களாக உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும் 24 நாடுகளும் தற்போது மோதிவருகின்றன.

### இறுதிப் போட்டிகள்

அடுத்த மாதம், அதாவது ஜுலை இரண்டாந் திகதிக்குப் பின்னர் இந்த குழுநிலைப் போட்டிகளில் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற நாடுகள் இரண்டாவது சுற்று ஆட்டங்களில் பங்குபற்றும்.

தொடர்ந்து கால் 'இறுதிப்போட்டிகள் ஜுலை 9ம்,10ம் திகதிகளில் இடம்பெறும். அதனையடுத்து ஜுலை 13ந் திகதி லொஸ் ஏஞ்சல்ஸ், நியூயோர்க் நகரங்களில் அரை இறுதிப்போட்டிகள் இடம்பெறும்.

இறுதியாக ஜுலை 17ந் திகதி லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பார்வையாளர்கள் முன்பாக றோஸ்போல் (Rose bowl) அரங்கில் இறுதிப் போட்டிகள் இடம்பெறும்.

கிரேக்கம், நைஜீரியா, ரஷ்யா, சவுதி அரேபியா ஆகிய நாடுகளே இத்தடவை முதல் முறையாக உலகக் கிண்ண சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றும் சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளன. இதற்கு முன்னர் பிராந்திய ரீதியான பூர்வாங்கப் போட்டிகளில் இந்நாடுகள் தோல்வியைத் தழுவியிருந்தன.

சோவியத் யூனியன் பல்வேறு குடியரசுகளாகப் பிரிந்ததன் பின்னர் ரஷ்யா இத்தடவை தனியொரு நாடாக உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றுகின்றது.

### கண் விழிக்கும் சீனர்கள்

அமெரிக்காவில் இடம்பெறும் போட்டிகளை நேரடியாக மைதானங்களுக்குச் சென்று பார்வையிடும் இலட்சக் கணக்கானவர்களை விட கோடானுகோடி உலக மக்கள் தொலைக்காட்சிகள் வாயிலாகவும் இத்தடவை உலகக் கிண்ணப் போட்டிகளை கண்டு களிக்கின்றனர்.

உலகில் ஒவ்வொரு தேசங்கள் வாரியாக எடுத்துக்கொள்ளும் பட்சத்தில் சீனாவிலேயே அதிகளவு தொலைக்காட்சி நேயர்கள் உலகக் கிண்ணப்போட்டிகளைப் பார்வையிடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்திய ரீதியான பூர்வாங்கப் போட்டிகளில் சீனா தோல்வி கண்டிருந்தது. ஆயினும் அங்கே கோடிக்கணக்கான உதைபந்தாட்ட இரசிகர்கள் நள்ளிரவு, மற்றும் அர்த்த சாமங்களிலும் கண் விழித்து போட்டிகளை உற்சாகமாக தொலைக் காட்சிகள் மூலமாகப் பார்த்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண போட்டிகளில் பங்குபற்றும் நாடுகள் கடுமையான பயிற்சிகளுக்குத் தம்மை உட்படுத்தியிருந்தன.

இந்நாடுகளில் ஆசிய நாடான தென் கொரியா பெற்ற பயிற்சியே மிகவும் கடுமையானது என்று வர்ணிக்கப்பட்டுள்ளது.

### கடும் பயிற்சி

தென் கொரியாவில் உள்ள அதி உயர்ந்த மலையை மூன்று தடவைகள் ஏறி-இறங்கி சூடான தேகப் பயிற்சிகளை தென்கொரிய வீரர்கள் பெற்றிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் உலகக் கிண்ண போட்டிகளின் இறுதிக்கட்டத்தை அடைவது இமயத்தை வெற்றி கொள்வது போன்றதென விமர்சிக்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண போட்டிகளில் பங்குபற்றும் நாடுகளின் பொருளாதார நிலை குறித்தும் சுவிற்ஸர்லாந்தின் பிரபல வங்கி ஒன்று ஆய்வுகளை நடத்தியிருந்தது.

அந்த ஆய்வில் உலகக் கிண்ண இறுதிப் போட்டிகளில் பிரவேசித்துள்ள உலகின் முன்னணி உதைபந்தாட்ட நாடுகள் பொருளாதார ரீதியாக நல்ல வளர்ச்சியைக் கண்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பிரேஸில், ஆர்ஜன்டீனா, கொலம்பியா போன்ற வளர்சியடைந்துவரும் தென் அமெரிக்க நாடுகள் அண்மைக் காலங்களில் நல்ல பொருளாதார வளர்ச்சியைக் கொண்டுள்ளன எனவும் அந்த ஆய்வு குறிப்பிடுகின்றது. ●

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## அலசுவது – இராஜதந்திரி

மேல் மாகாண ஆளுநர் சுப்பையா சர்வானந்தா திடீரென பதவி நீக்கஞ் செய்யப்பட்டுள்ளதுடன், புதிய மேல் மாகாண ஆளுநராக திரு.டி.எம்.சுவாமிநாதன் என்ற சட்டத்தரணி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு.எஸ்.சர்வானந்தா இலங்கையின் சட்டத்துறையில் ஒரு சிறந்த வழக்கறிஞராக இருந்தவர். உயர் நீதிமன்ற நீதியரசராக 1974ம் ஆண்டில் நியமனமான திரு.சர்வானந்தா, பின்னர் பிரதம நீதியரசராக நீதித்துறையின் உச்சநிலையை எட்டியிருந்தார்.

1988ம் ஆண்டு இலங்கையில் மாகாண சபை ஆட்சிமுறை அறிமுகமானதையடுத்து நீதிச் சேவையிலிருந்தும் இளைப்பாறியிருந்த திரு.சர்வானந்தா, மேல்மாகாணத்தின் முதலாவது ஆளுநராக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவினால் நியமிக்கப்பட்டிருந்தார்.

உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்படுமுன்னர் திரு.சர்வானந்தா, சிவில் சட்டத்துறையில் ஒருசிறந்த வழக்கறிஞராக விளங்கியிருந்தார். அரசியலுடன் சட்டத்துறையிலும் பிரகாசித்து மறைந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம், மு.திருச்செல்வம், மற்றும் பிரபல வழக்கறிஞர் சி.ரங்கநாதன் ஆகியோருடன் பணியாற்றி பல்வேறு சிக்கலான, அதேவேளை பிரபலமான சிவில் சட்ட வழக்குகளில் திரு.சர்வானந்தா ஆஜராகியிருந்தார். இதன் காரணமாக உயர் நீதிமன்ற வட்டாரத்தில் பலரதும் மதிப்புக்குரியவராக திரு.சர்வானந்தா விளங்கியிருந்தார்.

உயர் நீதிமன்ற நீதியரசர் பதவி முதற்கொண்டு, பிரதம நீதியரசர் பதவி, மற்றும் நீதிச்சேவையிலிருந்து இளைப்பாறிய பின்னர் ஆளுநர் பதவி ஆகிய அனைத்தும் திரு.சர்வானந்தாவைத் தேடி வந்தவையாகும்.

திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனாவினால் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்த திரு.சர்வானந்தா, மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் ஆட்சியின்போது மேல் மாகாண ஆளுநராக தொடர்ந்து பதவி வகித்திருந்தார்.

ஆனால் தற்போது ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவின் ஆட்சியில் ஆளுநர் பதவியிலிருந்தும் திரு.சர்வானந்தா தூக்கி எறியப்பட்டுள்ளார்.

திரு.சர்வானந்தா மீதான நடவடிக்கை சட்டத்துறை, மற்றும் நீதித்துறையில்

பொதுஜன மக்கள் முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டிருந்தது.

ஆனால் இன்று ஒரு வருடத்தின் பின்னர் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கக் காணப்படுகின்றது.

மறைந்த ஜனாதிபதி ரணசிங்க

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இன்று இரண்டாகப் பிரிந்திருப்பதுடன்,ஒரு வலுவற்ற கட்சியாகவும் மாறியுள்ளது.

இந்நிலையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஒரு சாரார், அரசு சார்பான நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளனர். வடமேல் மாகாண



நடத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நீதித்துறையில் நாட்டின் பிரதம நீதியரசர் என்ற உயர் பதவியை வகித்த திரு.சர்வானந்தா, ஒரு மாகாணத்தின் ஆளுநர் என்ற நிலைக்குத் தமது தகுதியைக் குறைத்திருக்கக் கூடாது எனவும் விமர்சிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியல் அமைப்பின் பிரகாரம், ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் தமது பதவிப் பிரமாணத்தை பிரதம நீதியரசர் முன்பாகவே மேற்கொள்வதுண்டு.

இந்நிலையில் பிரதம நீதியரசராகப் பதவி வகித்த திரு.சர்வானந்தா, ஆளுநர் என்ற நிலைக்கு இறங்கியதும், தொடர்ந்து அப்பதவியிலிருந்து அவர் ஒரு சாதாரண அரசாங்க ஊழியரைப்போன்று ஜனாதிபதியினால் அகற்றப்பட்டிருப்பதும், நீதித்துறையினரை அவமதிக்கும் ஒரு செயலாகவும் நோக்கப்படுகின்றது.

புதிய மேல்மாகாண ஆளுநர் திரு.டி.எம்.சுவாமிநாதன் சுமார் 25 வருடகால சட்டத்துறை அனுபவத்தைக் கொண்டவராக இருக்கின்றார். அத்துடன் கொழும்பு, பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் தர்மகர்த்தாவாகவும் இருக்கும் திரு.சுவாமிநாதன், சேர்.பொன்னம்பலம் இராமநாதனின் இன்றைய சந்ததி உறவினராகவும் இருக்கக் காணப்படுகின்றார்.

திரு சர்வானந்தாவை ஆளுநர் பதவியிலிருந்தும் அகற்றிய விடயத்தில் இனவாத நோக்கம் எதுவும் கலந்திருக்கவில்லை என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் வகையிலேயே திரு.டி.எம்.சுவாமிநாதனை புதிய ஆளுநராக

எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் ஒரு சில மாதங்களுக்கு முன்னர் தென் மாகாண சபைத் தேர்தலில் காமினி, றொனி ஆகியோர் ஆளுங் கட்சி சார்பாக தீவிர பிரசாரங்களை மேற்கொண்டிருந்தனர்.

திரு.றொனி டி.மெல் தென் மாகாணத்தின் தெவிநுவரையைச் சேர்ந்தவர். ஆயினும் அவரால் தென் மாகாண சபைத் தேர்தலில் ஆளுங்கட்சிக்கு தகுந்த வெற்றியைப் பெற்றுத் தரமுடியாதிருந்தது.

தமது சொந்த மாகாணத்திலேயே ஓர் ஆரோக்கியமான வெற்றியைப் பெற்றுக்கொடுக்க முடியாத திரு.றொனி டி.மெல், நாடு தழுவிய தேசிய தேர்தல்களில் எவ்வளவுதூரம் ஒரு சிறந்த 'பிரசார இயந்திர'மாக இயங்கமுடியும் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

ஆளுங் கட்சியினர் தமது தரப்பில் பல்வேறு மாற்றங்களையும் மேற்கொண்டுவரும் இத்தருணத்திலேயே, அமைச்சர் எஸ்.தொண்டமான், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் ஆகியோர் வடக்கு-கிழக்கு பிரச்னை தொடர்பாக கூட்டு சமரசத்திட்டம் ஒன்றை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளனர்.

ஆளுங்கட்சியில் பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு தம்மைப் பலப்படுத்துவதில் தீவிரமாக இருக்கும் திரு.டி.பி.விஜேதுங்கா எவ்வளவுதூரம் தொண்டா-அஷ்ரப் ஆகியோரின் கூட்டு சமரசத் திட்டத்தை ஆற அமர இருந்து பரிசீலிப்பார் என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

அமைச்சர் தொண்டமான் ஆரம்பத்தில் தமது சமரச யோசனைகளை பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக சமர்ப்பித்திருந்தார். தமது யோசனைகளின் அடிப்படையில் வடக்கே தமிழ் விடுதலைப் புலிகளையும் சென்று சந்திக்க தயாராக இருப்பதாகவும் திரு.தொண்டமான் அன்று அறிவித்திருந்தார்.

ஆனால் பாராளுமன்ற தெரிவுக்குழு நடவடிக்கைகளில் அதிருப்தியடைந்து அதிலிருந்து அமைச்சர் தொண்டமானே ஆரம்பத்தில் வெளியேறியிருந்தார்.

# 'அலாக்காக' தூக்கி எறியப்பட்ட ஆளுநர் சர்வானந்தா!

இருப்போருக்கு ஆச்சரியத்தையளிப்பதாக இருப்பதுடன், இன்றைய ஆட்சியாளரின் எதேச்சையான போக்கையும் வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

மேல் மாகாண சபையில் சுகாதார அமைச்சராக பதவி வகித்த பிரேமரத்ன குணசேகர ஆளுநரினால் பதவி நீக்கஞ் செய்யப்பட்டதன் எதிரொலியாகவே, ஜனாதிபதியினால் திரு.சர்வானந்தா ஆளுநர் பதவியிலிருந்தும் அகற்றப்பட்டுள்ளார்.

தமது பதவி நீக்கம் பற்றிக் குறிப்பிட்ட திரு.சர்வானந்தா, மேல் மாகாண சபையின் சுகாதார அமைச்சர் பிரேமரத்ன குணசேகராவை, தாம்

பிரேமதாசாவினால் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தும் வெளியேற்றப்பட்டிருந்த திரு.லலித் அத்துலத் முதலி, திரு.காமினி திசாநாயக்கா ஆகியோரினால் ஆரம்பிக்கப்பட்டதே ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியாகும்.

இக்கட்சியில் மறைந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவின் அதிருப்தியாளர்கள் பலரும் சேர்ந்திருந்தனர். திரு.காமினி திசாநாயக்காவின் மைத்துனரும், தற்போது ஜனாதிபதி விஜேதுங்காவின் உயர்மட்ட செயலாளராகவுமிருக்கும் டாக்டர் விக்கிரம வீரசூரியா, வடமேல் மாகாண சபையின் முதலமைச்சராக இருக்கும் திரு.ஜி.எம்.பிரேமச்சந்திரா ஆகியோரும்

முதலமைச்சர் திரு.ஜி.எம்.பிரேமச்சந்திரா இந்த அரசு சார்பு அணியினருக்குத் தலைமை தாங்குகிறார்.

இந்த அணியைச் சேர்ந்தவரே மேல் மாகாண சபையின் சுகாதார அமைச்சர் பதவியிலிருந்தும் அகற்றப்பட்ட பிரேமரத்ன குணசேகர ஆவார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் மற்றைய பிரிவினர் 'லலித் அணி' என்று தம்மைக் குறிப்பிட்டவர்களாக பொதுஜன மக்கள் முன்னணியை ஆதரித்து வருகின்றனர்.

எனவே எதிரணியினரின் பலத்தைக் குறைப்பதில் குறியாக இருக்கும் ஆட்சியாளர்கள், மேல் மாகாணசபையை

ஜனாதிபதி நியமித்திருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

ஆயினும் இந்நடவடிக்கை ஜனாதிபதியின் எதேச்சையான போக்கை நிரூபிப்பதுடன், தலைநகரில் ஆட்சியாளருக்கு சவால் விட்டுவரும் சந்திரிக்கா தலைமையிலான மேல் மாகாண சபையை கடும் போக்குடன் அணுகுவதாகவும் இருக்கக் காணப்படுகின்றது.

இதேவேளை முன்னாள் வடமேல் மாகாண முதலமைச்சர் திரு.காமினி ஜயவிக்கிரம பெரேரா, மற்றும் முன்னாள் நிதியமைச்சர் திரு.றொனி டி.மெல் ஆகியோர் பாராளுமன்றத்தினுள் பிரவேசித்திருக்கக் காணப்படுகின்றனர்.


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், எம்.எச்.எம்.அஷ்ரப் பாராளுமன்றத் தெரிவுக்குழு கூட்டத் தொடரின்போது தமிழ் அரசியல் கட்சிகளுடன் ஒத்துழைப்பதில் வெற்றி கண்டிருக்கவில்லை.

ஆனால் தற்போது திரு.தொண்டமான், திரு.அஷ்ரப் ஆகியோர் வடக்கு-கிழக்கில் மாநில, பிராந்திய சபைகள் என்ற அடிப்படையில் தமது கூட்டு சமரசத்திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளனர்.

தேர்தல்கள் நெருங்கி வருவதையடுத்து ஆட்சியாளர்கள் தெற்கே பல்வேறு வாக்குறுதிகளையும் வழங்க ஆரம்பித்துள்ளனர்.



# தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்ளும் தொண்டா-அஷ்ரப்!



தமக்குள்ள சட்ட பூர்வமான அதிகாரங்களுக்கமைய முதலமைச்சர் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்காவின் சிபார்சின் பேரிலேயே பதவி நீக்கஞ் செய்திருந்ததாகவும் இதன் காரணமாகவே ஜனாதிபதியினால் தாம் பதவி விலக்கப்பட்டிருப்பதாக நம்புவதாகவும் தெரிவித்திருந்தார்.

மேல் மாகாணசபை இன்று ஆட்சியாளருக்கு பெரும் சவாலாகவே இருந்து வருகின்றது. இச்சபையின் முதலமைச்சராகவும், பொதுஜன மக்கள் முன்னணியின் முக்கிய புள்ளியாகவும் இருந்துவரும் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்கா ஆட்சியாளருக்கு ஒரு 'சிம்ம சொப்பன'மாகவே இருந்து வருகின்றார்.

கடந்த ஆண்டில் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலின்போது ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் பெற்றிருந்தனர்.

ஆனால் இன்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை ஆரம்பிப்பதில் முன்னின்ற திரு.காமினி திசாநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துள்ளதுடன், அவரது மைத்துனரான டாக்டர் விக்கிரமவீரசூரியா ஜனாதிபதியின் முக்கிய செயலாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

கூடவே எதிர்வரும் தேர்தல்களின்போது ஆளுங்கட்சியினரின் பிரசாரங்களை கையாளுவது, மற்றும் கட்சி நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பது போன்ற பணிகளுக்கும் டாக்டர் விக்கிரம வீரசூரியாவே பொறுப்பாக இருப்பார் எனவும் ஆளுங்கட்சி வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

எனவே ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் 'தூண்கள்' என்று கருதப்பட்டவர்கள் இன்று ஐ.தே.கவில் இருக்கக் காணப்படுகின்றனர். இது தவிர

மறைமுகமாக தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் ஒரு நடவடிக்கையாகவே ஆளுநர் பதவியிலிருந்தும் திரு. சர்வானந்தாவை நீக்கியுள்ளதுடன், திரு.டி.எம்.சுவாமிநாதன் என்ற சாதாரண சட்டத்தரணி ஒருவரை புதிய ஆளுநராக நியமித்துள்ளனர்.

திரு.சர்வானந்தா பதவி நீக்கம் செய்யப்பட்ட விவகாரம் பல்வேறு மட்டத்திலும் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.

நீதித்துறையின் பாரம்பரியங்களை மையமாக வைத்து இந்த விவகாரத்தை ஆராய்வோர், திரு.சர்வானந்தாவின் சட்ட-நீதித்துறை சார்ந்த பின்னணியைப் பொருட்படுத்தாது; கால அவகாசம் எதுவும் தராது ஒரு சாதாரண ஊழியரைப் பதவி நீக்கம் செய்வதுபோல ஜனாதிபதி நடந்து கொண்டுள்ளார் எனக் குறிப்பிடுகின்றனர்.

திரு.சர்வானந்தாவும், பத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில், தாம் மிகவும் கேவலமான முறையில் ஜனாதிபதியால்

காமினி, றொனி ஆகியோர் தற்போது அமைச்சர்களாகவும் மாறியுள்ளனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியனவற்றின்போது ஆளுங்கட்சியைப் பலப்படுத்தும் வகையிலேயே தேசியப் பட்டியல் மூலமாக இவர்கள் பாராளுமன்றத்தினுள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்றத்தினுள் நுழைவதற்கு கடினமான பிரசார நடவடிக்கைகளோ, அல்லது போட்டிகளோ இன்று தேவையில்லை என்பதனை வெளிப்படுத்துவதாகவே காமினி திசாநாயக்கா, றொனி டி.மெல்,ஜயவிக்கிரம பெரேரா ஆகியோரின் பாராளுமன்றப் பிரவேசங்கள் காணப்படுகின்றன.

காமினி, றொனி, ஜயவிக்கிரம பெரேரா ஆகியோர் ஆளுங் கட்சியில் இணைக்கப்பட்டுள்ளதையடுத்து தேர்தல் பிரசாரங்களை ஆட்சியாளர்கள் முடுக்கி விடுவார்கள் என்றே

ஆனால் வடக்கு-கிழக்கு பிரச்னை தொடர்பாக ஆட்சியாளர்கள் எதுவித காத்திரமான அரசியல் நடவடிக்கைகளையும் முன்னெடுக்காதவர்களாக இருக்கக் காணப்படுகின்றனர்.

இந்நிலையில் கடந்த பதினேழு வருடகாலமாகத் தீர்க்கத் தவறிய வடக்கு-கிழக்குப் பிரச்னையை இன்னும் ஆறுமாத காலத்தில் ஆட்சியாளர்களால் நேர்த்தியாகவும், உறுதியாகவும் தீர்த்து வைக்கமுடியும் என நம்புவது மடமையிலும் மடமையே.

இந்நிலையில் அமைச்சர் தொண்டா, திரு.எம்.எச்.எம்.அஷ்ரப் ஆகியோர் தமது புதிய கூட்டு சமரசத் திட்டத்தை ஜனாதிபதியிடம் கையளித்ததன் மூலம் அவர்கள் இருவரும் தம்மைத் தாமே ஏமாற்றியவர்களாகின்றனர் என்றே கருதமுடிகின்றது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

இல்லறம் செழிக்க ஒரு ஆலோசனை

# இருப்பதைக்கொண்டு இல்லத்தை சிறப்பாக்க முடியும்

# இதமான மனநிலைக்கு இனிதான இல்லச் சூழல்!

இருப்பதைக் கொண்டு சிறப்புற வாழ்வதே வாழ்க்கை.

வாழ்க்கையில் வீடு ஒரு இன்பமான இடம். வீடு இன்பமான இடமாக இருக்க வேண்டுமானால் இல்லறம் மகிழ்ச்சியானதாக இருக்கவேண்டும்.

ஆணோ-பெண்ணோ உழைத்துக் களைத்துப் போனபின் ஓய்வு தேவைப் படுகிறது.

ஓய்வு இதமானதாக இருந்தால் மனம் மகிழ்வானதாகி சுமைகள் இலேசானதாக மாறிவிடுகின்றன.


கணவனும்-மனைவியும் தனித்திருக்கும் இடம் சயன அறை.

சயன அறையில் சூழ்நிலை மனதுக்கு இனிமை தருவதாக அமைய வேண்டும்.

அதற்கு பணம் கொட்டித்தான் சயன அறையை அழகுபடுத்தவேண்டும் என்று அர்த்தமல்ல.

சயன அறையை இனிதான இடமாக மாற்றுவதற்கு சுலபமான யோசனைகள் சில-எவ்விதமான இடையூறுகளும் இல்லாத இடமாக இருக்கவேண்டும்.

அன்றாட வாழ்க்கையில் அலைந்து களைத்துப்போன உடலும்-உள்ளமும் மீண்டும் தன் சக்தியை பெற்றுக்கொள்ளும் இடம்தான் சயன அறை.



உ. தயா

அங்கு காற்றோட்டமும் வெளிச்சமும் கட்டாயம் தேவை.

தற்போது நகரங்களில் உள்ள வீடுகளில் போதிய வசதிகள் இல்லை. இட நெருக்கடி வாடகைப் பிரச்சனை காரணமாக பல அறைகள் கொண்ட வீடகள் குறைவு.

அதனால் சயன அறையில்கூட பொருட்களை வைக்கவேண்டிய நிலை.

ஆனால் அப்படி வைக்கும் பொருட்களை கன்னாபின்னாவென்று போட்டு வைக்காமல் ஒழுங்காக அடுக்கி வையுங்கள். அதுவும் அழகாக இருக்கும். நெருக்கடியாக இருக்கும் மனநிலை ஏற்படாது.

சயன அறையில் தம்பதியர் தமக்கு விருப்பமான நிறத்தில் இருக்கக்கூடிய திரைச்சீலைகளை தொங்கவிடலாம். குறைந்தது மாதத்தில் மூன்று தடவையாவது அவற்றை தோய்த்து அழுக்கின்றி இருக்க விடுங்கள்.

சயன அறையின் சுவரில் கண்ணில்பட்ட படங்களையெல்லாம் வெட்டி ஒட்டி வைப்பது நல்லதல்ல.

மனதுக்கு பிடித்தமான இயற்கை காட்சியையோ அல்லது அழகான குழந்தையின் புன்னகை சிந்தும் படத்தையோ தொங்கவிடலாம்.

படுக்கையில் இருந்தபடி பார்வையை சுற்றி ஓடவிட்டால் சுகமான சூழ்நிலையில் இருப்பதுபோல் உணரவேண்டும்.

கரப்பான் பூச்சி, எலி தொல்லைகள் அதிகமாக இடம் கொடாதீர்கள்.

அடுத்து, மிக முக்கியமாக, வீட்டிலே குறிப்பாக சயன அறையிலே முகம் சுளிக்க வைக்காத இனிய மணம் பரவுமாறு தினமும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

'ஸ்பிறே' செய்யக்கூடிய வாசனைப் பொருட்கள் மட்டும்தான் தேவை என்று நினைக்க வேண்டாம். சுலபமாகக் கிடைக்கக்கூடிய மலர்களைக் கொண்டே வீட்டையும் சயன அறையையும் வாசனையாக்க முடியும்.

சிலர் நன்றாக சம்பாதிப்பார்கள். அவர்கள் அணியும் ஆடைகள் விலை உயர்ந்த ரகத்தில் இருக்கும். ஆனால் வீட்டுத் தலையணையோ அழுக்காகக் கிடக்கும்.

பணம் இருந்தால்தான் வீடு அழகாக இருக்கும் என்று நினைக்கக்கூடாது. மாட மாளிகைகளைவிட மண் குடிசையில் இருப்பவர்கள் தம் வீட்டை சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்கிறார்கள்.

பணத்தைவிட மனம்தான் முக்கியம். எதற்கு முக்கியம் கொடுக்க வேண்டும் என்று தெரிந்து இருப்பதைக் கொண்டு சிறப்புற வீட்டின் சூழலை உருவாக்க வேண்டும்.

வெளிப்பகட்டல்ல வாழ்க்கை. அகம் சுத்தமாக இருக்கவேண்டும். அகவாழ்வில் வீடும் அடக்கம். வீட்டின் சுகவாழ்வில் சயன அறையும் அடக்கம்.

தலையணை உறை அழுக்காக இருப்பதற்கும், போர்வைகள், விரிப்புகள் அழுக்கேறிப் போவதற்கும் பணமா காரணம்? அலட்சியமான மனந்தான் காரணம்.

எதிலும் அலட்சியம் இல்லறத்திலும் அலட்சியமாகிவிட்டால் தம்பதிகள் இடையே உளப்பூர்வமான நெருக்கம் குறைந்துவிடும்.

சயன அறை ஒரு சரணாலயம் போலவும் இருக்கிறது.

தம்பதியர் அன்று முழுவதும் எதிர்கொண்ட பிரச்சனைகள், சுமைகள் மறந்து ஒருவரில் ஒருவர் அடைக்கலமாகி இளைப்பாற நாடும் இடமல்லவா அது!

எனவே-சயன அறை தூய்மையாக, சுத்தமாக, மனதுக்கு இதமாக இருக்க வேண்டாமா? அப்படி இருந்துவிட்டால் அதுவே மனதுக்கு மருந்து. உடல்- உளப் பிரச்சனைகள் எழுவதும் இல்லாமல் போய்விடும்.

லேடீஸ் ஸ்பெசல்

## தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

பரிசுத் திட்ட கூப்பன் இல-18

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.

## சமைப்போம் சுவைப்போம் தொகுத்துத் தருவது—சுகந்தினி

### ஹவாயன் பனானா

தேவையானவை:

வாழைப்பழம்-6
தேன்- 2 மேசைக்கரண்டி
எலுமிச்சம் பழச்சாறு- 1 தே.கரண்டி
வெனிலா ஐஸ்க்ரீம்- 4 கோப்பை.

செய்முறை:

1. வாழைப்பழத்தை நன்றாக மசித்துக் கொள்ளவும்.
2. தேன்-எலுமிச்சம் பழச்சாறு இரண்டையும் சேர்க்கவும்.
3. ஐஸ்க்ரீமுடன் கலந்து குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும். ஜில் என்று பரிமாறவும்.

### மசாலா சப்பாத்தி

தேவையானவை:

கோதுமை மா- 2 கோப்பை
எண்ணெய் அல்லது உருக்கிய நெய்- 2 மேசைக்கரண்டி
காரப்பொடி- 2 தேக்கரண்டி
உப்பு-தேவையான அளவு
மல்லிப்பொடி- 1 தேக்கரண்டி
சீரகம்- 1 தேக்கரண்டி
வெள்ளை எள்- 1 தேக்கரண்டி
மஞ்சள் பொடி- 1/2 தேக்கரண்டி

செய்முறை:

1. கோதுமை மாவில் எல்லாப் பொருட்களையும் கலந்து தண்ணீர் சேர்த்து நன்றாக அழுத்திப் பிசையவும்.
2. இக் கலவையை 1 மணிநேரம் ஊற வைக்கவும்.
3. மாவை ஒரே அளவில் உருண்டைகளாகச் செய்து கொள்ளவும்.
4. வட்டங்களாக இட்டு, கல்லில் நெய்விட்டு, இரண்டு பக்கமும் சுட்டு எடுக்கவும்.
5. இதனை தயிருடன் பரிமாறலாம்.




## நில்! கவனி!! முன்னேறு!!!

எந்த நேரத்தில் எதைச் செய்வது என்று புரிந்து, உடலும் மனமும் அதற்கு இசைவாக்கப்பட்டுவிட்டால் மனக் குதிரை கட்டுக்குள் இருக்கும்.

சுற்றுப்புற நெருக்கடிகள் சமயத்தில் சலிப்பைத் தரத்தான் செய்யும். அந்தச் சலிப்பு பணியின் சிறப்பைக் கெடுத்துவிடக் கூடாது.

### சிந்திக்கலாம் இங்கே...

எதிரே மரம் இருக்கிறது. அந்த மரத்திலே கிளைகள் உண்டு. இலைகளும் உண்டு. கனியும் உண்டு.

வில் எடுத்து கணைதொடுத்த அர்ஜுனனுக்கு கனி மட்டும்தான் கண்ணில் தெரிந்தது.

அதனால்தான் அர்ஜுனன் என்னும் விஜயன் வில்லுக்குரியவன் என்று வியக்கப்பட முடிந்தது.

குறி எதுவென்று தீர்மானித்து விட்டால் முழுக் கவனமும் அதிலே கவிந்துவிட வேண்டும்.

நோக்கத்திலே தெளிவு வந்து விட்டால் செயலில் தேக்கம் இருக்காது. இருக்கவும் கூடாது.

எந்தவொரு காரியத்திலே ஈடுபட்டாலும் மனம் முழுவதும் அதிலே மொய்த்துக்கொள்ள வேண்டும்.

ஒரு துணியை வெட்டுவதானாலும் ஏழு முறை யோசிப்பதில் தவறே கிடையாது.

வெட்டியாக வேண்டும் என்று முடிவு செய்துவிட்டால் கத்தரிக்கோல் எடுத்து அதனைக் கச்சிதமாக வெட்டி முடித்துவிட வேண்டும்.

வெட்டியபடியே இடை நடுவில் நின்று, வெட்டாமல் விட்டிருக்கலாமோ என்று தடுமாறினால் துணி வெட்டு தாறுமாறாகிவிடும்.

துணி விடயத்திலும் சரி வேறு எந்த பணிகளில் என்றாலும் சரி துணிந்து இறங்கிவிட்டால் முடிவுவரை தளர்ந்து போகாமல் இருக்க வேண்டும்.

சிலர் இருக்கிறார்கள். எந்த வேலையைச் செய்தாலும் முகத்திலே களிப்பு இருக்காது. அடிக்கடி சலித்துக் கொள்வார்கள்.

"என்னய்யா வேலையெல்லாம் எப்படிப் போகுது?"

"ஏதோ போகிறது." அவர்கள் சொல்லும் பதிலால் கேட்கும் நமக்கே களைப்பு வந்துவிடும்.

அப்படியானவர்களின் வேலையிலும் சிறப்பிருக்காது. மனதிலும் உற்சாக மகிழ்விருக்காது.

உப்பு விற்கப் போன இடத்திலே சோளப் பொரி விற்பவனைப் பார்த்து பெருமூச்சுவிட்டுக்கொண்டிருந்தால் உப்பு வியாபாரமும் செழிக்காது; உள் மனதிலும் நிம்மதியிருக்காது.

உப்பு வியாபாரம் உனக்கு சரிப்பட்டு வரவில்லையா? உடனே தலை முழுகி விட்டு வேறு துறையில் ஈடுபடு.

இல்லை-உப்பு வியாபாரம்தான் எனக்கு ஏற்றது என்றும் நினைத்துக் கொண்டு, அதையும்விட முடியாமல், சோளப் பொரி விற்பவனைப் பார்த்து பெருமூச்சம் விட்டுக்கொண்டிருந்தால் நீ எதற்கும் இலாயக்கில்லை என்றுதான் அர்த்தம்.

எந்தவொரு பணியிலும் உடலும், மனமும் ஒன்றுபட்டு இயங்க வேண்டும்.

மனைவிக்கு பக்கத்திலே இருந்து மாலையிலே பார்த்த திரைப்படத்தின் நடிகையை நினைத்துக்கொண்டிருக்கக்கூடாது.

அப்படி நினைத்துக்கொண்டிருந்தால் மனைவிக்கும் திருப்தி வராது. உன் மனதுக்கும் சாந்தி வராது.

படுக்கையறையில் இருந்து பழைய கணக்குப் பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது.

கணக்குப் பார்க்கும் நேரத்தில் படுக்கையறையை நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது.

செய்யும் தொழிலே தெய்வம் என்பார்கள்.

தொழிலை பூஜிப்பதைவிட பூரண ஈடுபாடே செழிப்பினைத் தரும்.

கோழி முட்டை விற்றவன் கோடிஸ்வரனான கதையைக் கேட்டுவிட்டு அய்யோ நம்மால் கோடிஸ்வரனாக முடியவில்லையே என்று குப்புறப்படுத்து விடக்கூடாது.

எம்மால் எது முடிகிறதோ அதுதான் நடக்கும்.

கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டு கொண்டிருந்த முடவன் குடிக்க கூழும் இல்லாமல் வாழ்வை முடித்த கதையாகி விடாமல் முடிந்ததைச் செய்து அதையே சிறந்ததாய் ஆக்கவேண்டும்.

"கஞ்சிக்கு வழியில்லாமல் இருந்தவன் இன்று கத்தையான நோட்டுகள்மீது கால்மேல்கால் போட்டிருக்கிறான்."

இது பொறாமையால் பிரசவமாகும் கையாலாகாத வார்த்தை.

நேற்று வாழ்க்கையிலே தொய்ந்து கிடந்தவன் உழைப்பினால் இன்று உயர்ந்து விட்டான் என்றால் வாழ்த்த வேண்டும்.

அவன் அனுபவம் என்னவென்று கற்றுக்கொண்டு உன் பாதையில் விழாமல் நடக்கப்பழக வேண்டும்.

பொறாமைப்பட்டவன் எவனும் பொழிவோடு வாழ்ந்ததில்லை. அவன் பொறாமையே அவனுக்கு பொல்லாத எதிரியாகிவிடும்.

நிதானமாக யோசித்து காரியத்தில் ஈடுபடுகின்றவனை எந்தக் காரியத்தில் ஈடுபடுகிறானோ அந்தக் காரியம் கைவிடாது காப்பாற்றும்.

கவனம் சிதறாமல் காரியம்மீது குறியாக இருந்தால் உழைப்பின் பலன் உயர்ந்ததாய் இருக்கும்.

"ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு" முதுமொழி என்றாலும் வாழ்வில் உயர முதுகெலும்பான மொழி இது. மறந்துவிடாதிருப்போம்.

(மறுவாரமும் சிந்திக்கலாம்)


## நீங்களும் தைக்கலாம் எஸ்-எஸ்

### பினபோம் (வெளியில் போடும் சட்டை (கையில்லாதது)

15 வயதுப் பிள்ளைகளுக்கு

A-B சட்டையின் அகலம் 10+10 அங்.
A-C சட்டையின் நீளம் 16 அங்.
பாவாடையின் உயரம் 22 அங்.
அகலம் (ஒருபக்கம்) 35 அங்.
வெட்டும் முறை: (படம்-1 ஒரு பக்களவு)


20 அங்குல அகலமும் 16 அங்குல நீளமுமான, துணியை எடுத்து அகலப் பகுதியை சமனாக மடிக்கவும். மடித்த துணியை Aயிலிருந்து 4 அங்குலம் உள்நோக்கி E எனக் குறிக்கவும். Eயிலிருந்து 7 அங்குலம் கீழ் நோக்கி Fஎன குறிக்குக. Eயிலிருந்து 3 அங்குலம் முன்னோக்கி (Eக்கும் Bக்கு) இடையில் Gஎனக் குறித்தும் Gயிலிருந்து 8 1/2 அங்குலம் கீழ்நோக்கி H எனவும் இவ்வாறு வரைந்த பகுதிகளில் கை, கழுத்து என புரிந்துகொண்டு அப்பகுதியில் 3 அங்குலமான தோள் பகுதியை 1/2 அங்குலம் சரிவாக வெட்டிக்கொள்ளவும். கைப்பகுதியிலிருந்து நாரிப்பகுதியை சிறிது சரிவாக வெட்டவும். வெட்டிய பகுதிகளை மூட்டவும். அதன் பின்பு 22 அங்குல உயரமுமான 35x2 அங்குல அகலமுமான நேர் துணியினை எடுத்து உயரப் பகுதியின் இரு பக்கத்தையும் மூட்டவும். மூட்டியதும் 35x2 அங்குல பகுதியின் மேற்பகுதியில் சிறு நூலோடி தையல் சுருக்கிட்டு, மேல் உடம்புப் பகுதியுடன் மூட்டவும். மூட்டிய பின்னர் விளிம்புப் பகுதிக்கு 1 1/2 அங்குல மடிப்பு இடவும். இதனுள் போடுவதற்கான உள் மேற்சட்டை (பிளவுஸ்) (படம்-2)



படம்.1

O-P சட்டையும் அகலம் 10+10அங் (ஒருபக்களவு)
O-R சட்டையின் உயரம் 14 அங்குலம்.

சட்டையின் 20 அங்குல அகலத்தை சமனாக மடித்ததும் 10 அங்குலம் ஆகின்றது. அப்பகுதியின் அளவின்படி OP.QR எனக் குறிக்குக. குறித்த O விலிருந்து 4 அங்குலம் உள்நோக்கி Tஎனவும் Tயிலிருந்து 6 1/2 அங்குலம் கீழ்நோக்கி வளைவாக Sஎனவும் Sஇலிருந்து கீழ்நோக்கி மீதியாக இருக்கும் 7 1/2 அங்குலத்தை மென் சரிவாக வெட்டவும். தோள் மூட்டுப் பகுதிக்கு என 3 அங்குலத்தை அளந்து U எனக் குறிக்குக. மீதியாக உள்ள பகுதியை கழுத்திற்கென எடுக்கவும். எடுத்து வடிவத்திற்கேற்ப 1 1/2 அங்குலம் பதித்து கண் வடிவத்தில் கழுத்து வெட்டவும். வெட்டிய பகுதிகளை மூட்டவும். போடுவதற்கு இலகுவாக




படம்.2

தோள் பகுதிகளில் ஒரு பகுதிக்கு 2 சட் வைத்துக்கொள்ளவும்.

கையின் ஒருபக்க அளவு (படம்:3)
S-Tகையின் அகலம்- 8+8 அங்குலம்
T-V கையின் உயரம்- 9 அங்குலம்

S Tகையின் அகலம் 8 அங்குலம் T Vகையின் உயரம் 9 அங்குலமாகும். Sலிருந்து 3 அங்குலம் கீழ் பதித்துXஎனக் குறிக்குக.



படம்.3

Uவிலிருந்து 1 அங்குலம் உட்புறமாக Wஎனக் குறிக்குக. குறித்த XW பகுதியை மென் சரிவாக வெட்டவும். Xஇலிருந்து Tவரை 3 அங்குல வளைவில் வெட்டவும். வெட்டியபின் 1 அங்குல மடிப்பிட்டு XW பகுதியை 1 1/2 அங்குலமாக உட்பிடித்து தைத்த பிளவுஸின் கைக்குரிய பகுதியில் இணைக்கவும்.

குறிப்பு- சட்டைக்கு (பிளவுஸ்) வேறு கலரில் எடுத்தால் அழகாக இருக்கும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

கண்ணை நம்பாதே! பெண் என்று ஏமாற்றும்!

# வார இறுதியில் மட்டும் பெண்!

# காதலித்து ஏமாந்தார்கள் காளையர்கள்

அமெரிக்க நகரங்களில் இப்பொழுது சற்று உடல் பருத்த அளவுக்கு மீறி நாணிக் கோணி உலாவரும் பெண்களைக் காணலாம்.

சாதாரண அமெரிக்க சராசரிப் பெண்களிடம் இன்று காணப்படாத 'பெண்மை' இவர்களிடம் காணப்படுவதால் இவர்களுக்கு காதல் வலை விரிப்பவர்களுமுண்டு. ஆனால் பாவம் இறுதியில் ஏமாற்றம்தான் மிஞ்சியது.

காரணம் அத்தனை புது அழகிகளும் உண்மையில் பெண்களல்ல- ஓர் 'இதுக்காகவே ஆண்கள் பலர் பெண்களாக மாறுகிறார்கள். அதுவும் வார இறுதி நாட்களில்தான் இந்த பால் மாற்றம்!

குறும்புக்காக ஒரு சிலரால் தொடங்கிய இந்தப் போலி வேட விளையாட்டு இப்பொழுது படு வேகமாகப் பரவி விட்டது. இதனால் உண்மையிலேயே உடல் சற்றுப் பெருத்த பெண்கள் தெருவில் நடந்து சென்றாலும் அவர்களை வேடம் புனைந்த ஆண்கள் என்று கருத ஆரம்பித்து விடுகின்றனர் மக்கள்.

இத்தகைய பால் மாறும் வேடிக்கையினைத் தொடக்கி வைத்தவர்களின் முன்னோடி, வியட்நாம் போரில் ஈடுபட்ட முன்னாள் வீரரான ஸ்ரொஃப்னி சாண்ட்லர் என்பவராகும். 52 வயதான இவருக்கு 3 பிள்ளைகள் உள்ளனர். பேரப்பிள்ளைகளும் உண்டு. இவர் பெண் வேடம் போட்டு வெளிவந்தால் 25 வயது அழகியாகத் தோன்றுவார்.

இந்த வேடதாரிகள் அதிகரித்து வருவதால் 'மாற்ற'மளிக்கும் மையம்' என்ற பெயரில் தனி அலங்காரசாலைகள் ஆங்காங்கே தோன்றியுள்ளன. பொஸ்ரன் நகரில் வேர்ணன் போட்டர் என்ற அழகியற் கலைஞரே முதல் மாற்றமளிக்கும் மையத்தைத் தோற்றுவித்தார்.

'பொஸ்ரன் ஹெரல்ட்' என்ற செய்தித்தாளின் நிருபர் கிறிஸ்ரஃபர் கொக்ஸ் என்பவர் வேர்ணன் போட்டரின் கலையகத்தில் பெண் உருவினைப் பெறும் நிலையினையே படம் காட்டுகிறது. அவருடைய உண்மையான தோற்றம் படத்துள் படமாக (சிறிதாக)ச் செருகப்பட்டுள்ளது. இவர் பெண் வேடத்தில் சென்று சில தகவல்களைத் திரட்டுவதற்காகவே வேடம் போடுகிறாராம்.

அதற்கு ஒரு காரணமும் சொல்கிறார். பெண்கள் என்று நம்பி அசடுவழிந்து இரகசியத் தகவல்களை யெல்லாம் சிலர் உளறிக்கொட்டி விடுகிறார்களாம். ஹி.ஹி.ஹி. ரொம்ப வசதியான வேசம்தான்!





# கழுதைப் புலியின் மனித வேட்டை!

## புதை குழிகளுக்கும் ஆபத்து

புலிகளில் கழுதைப் புலி என்றோர் இனமுண்டு. இவை மிக மிகப் பயங்கரமானவை என்று தெரிகிறது.

பெயர் நாட்டில் கொங்கோ வனத்தில் காணப்படும் கழுதைப் புலிகள் அயலிலுள்ள கிராமங்களுக்குள் புகுந்து உயிருடன் கிராமவாசிகளைக் கடித்துக் குதறி எலும்புகூட விடாமல் தின்று விடுகின்றன.

ம்டும்பா என்ற கிராமம் சங்கா நதிக்கரையிலுள்ளது. இக்கிராமத்தில் மட்டும் அண்மையில் 32 பேரை கழுதைப்புலிகள் கொன்று தின்றுவிட்டன. இதனால் இக்கிராமத்தில் மட்டுமல்லாமல் அயலிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்களும் குடிபெயர்ந்து சென்றுவிட்டதாக அறியப்படுகிறது.

ம்டும்பா கிராமத்தில் இடுகாட்டில் புதைக்கப்பட்ட பிரேதங்கள் திடீர் திடீரெனக் காணாமற்போகத் தொடங்கின. இது யாராவது மந்திரவாதிகளினதோ விஷமிகளினதோ வேலையாக இருக்கவேண்டும் என்றே ஆரம்பத்தில் நம்பப்பட்டது. ஆனால் சில தினங்களில் சகல புதை குழிகளும் தாறுமாறாகக் கிண்டிக் கிளறப்பட்டுக் காணப்பட்டன.

இதன் மர்மத்தைக் கண்டுபிடிக்க இடுகாட்டுக்கு காவலாளி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் அடுத்த நாளே அவர் அங்கு காணப்பட வில்லை. மாறாக சில எலும்புத் துண்டுகள் மட்டும் காணப்பட்டன. காவலாளியை உயிருடன் பதம்பார்த்த கழுதைப் புலிகள் உயிருடன் நடமாடும் மனிதர்களையே கொன்று தின்ன முற்பட்டன. பட்டப் பகலிலேயே மக்களைப் பிடித்துத் தின்னத் தொடங்கிவிட்டன. துப்பாக்கி போன்ற எத்தகைய ஆயுதங்களுமற்ற நிலையில் கிராமத்தவர்கள் பகலிலும் நடமாட முடியாது பூட்டிய வீடுகளுக்குள் அடைபட்டுக் கிடந்தனர்.

கொன்று தின்னப்பட்டவர்களின் தொகை 32 ஆக இருந்தபோதும் அம்மிருகங்களிடம் அகப்பட்டும் கை கால்களை இழந்து முடமாகிப்போனவர்களின் தொகையும் எண்ணிலடங்கா என்று கூறப்படுகிறது.

அந்நாட்டு அரசாங்கத்துக்கு கழுதைப்புலிகளின் கொடுமைகள் பற்றி எடுத்துக்கூறியும் எதுவித பலனும் கிடைக்காதமையினால் கிராமங்களைவிட்டு மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறிவிட்டார்கள்.

# தகவல் பெட்டி



## புத்தகச் சாதனை

பார்பரா கார்ட்லன்ட் (89) தன்னுடைய 500ஆவது நாவலை நவம்பர் 1990ல் வெளியிட்டார். இவருடைய புத்தகங்கள் 27 மொழிகளில் வெளியிடப்படுகின்றன. விற்பனை 500 மில்லியன் அளவைத் தாண்டி கின்னஸ் சாதனைப் பட்டியலில் இடம்பெற்று விட்டது. கடந்த 13 அண்டுகளாக ஆண்டொன்றுக்கு 23 புத்தகங்களை எழுதிக் குவித்துள்ளார்.

பல பதிப்பகங்கள் அவரது நாவல்களை வெளியிட கியூ வரிசையில் காத்து நிற்கின்றன.



# கல்யாணமாம்—கல்யாணம்

# நாய் தம்பதிக்கு தேனிலவு யோகம்!

நாய்களையும் இப்போது செல்லப் பிள்ளைகள் போன்று வளர்க்கும் காலம் இது.

பஞ்சு மெத்தையில் உறக்கம். தொலைக்காட்சி வசதியோடு தனி அறை வாசம். அடிக்கடி உடல் பரிசோதனை என்று நாய் வளர்ப்புக்கு மனித வளர்ப்பைவிட கவனம் செலுத்தும் காலம் இது.

இலங்கை உட்பட பல நாடுகளில் வருடாவருடம் நாய் அழகுப்போட்டிகளும் நடந்து வருகின்றன.

இப்படியாகப்பட்ட காலத்தில் பாரிசில் ஒரு திருமண முகவர் நிலையம் உருவாக்கியுள்ளது.

நாய்களுக்கு சட்டபூர்வ திருமணம் செய்து வைக்கப்படும்.

மணமகன்-மணமகள் தேவையா? உடனே தொடர்பு கொள்ளவும் என்று விளம்பரம் கொடுத்தார்கள்.

விளம்பரத்தை கண்ட நாய் உரிமையாளர்கள் உடனடியாக படையெடுத்து தங்கள் வீட்டுச் செல்ல நாய்க்கு மிகவும் பொறுப்புணர்வு, கடமையுணர்வுடன் பொருத்தமான ஜோடியை தெரிவுசெய்தார்கள்.

படத்தில் இருப்பதுதான் அந்த முகவர் நிலையத்தில் சட்டபூர்வமாக முதலாவது திருமணம் செய்த ஜோடி. அதாவது நாய் தம்பதிகள். (திரு-திருமதி என்று சொன்னால் தப்போ?)

திருமணம் முடித்துவைத்தால் போதுமா? தேனிலவு சமாச்சாரம்? ஏன் இல்லை. அதுவும் உண்டு. அலங்கரிக்கப்பட்ட காரில் ஏற்றி வாழ்த்தி வழியனுப்பி வைக்கும் காட்சியும் படத்தில் காணலாம். வாழ்க தம்பதிகள்!

தகவல் உதவி—எம்.ஐ.யூ.ரகுமான் மருதமுனை.



வேடிக்கை பார்த்தபடி இவர்கள் போவது தேனிலவுக்கு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## கிசு-கிசு-நம்பர் I

### வேறு வழி? ஓகே!

தமிழில் இருந்து மலையாள படவுலகப் பக்கம் போனவர் நல்லெண்ணை சித்ரா. (நல்லெண்ணை விளம்பர படத்தில் நடித்ததால் அந்த பட்டம்) மலையாளத்தில் மீனவப் பெண் வேசம் கொடுத்து அவர சேலையை உருவி விட்டார்கள் படத்தின் பெயர் 'கடல்' அப்படி நடிப்பது ஆபாசமே இல்லை அவர் அறிக்கைவிட, இப்போது அவரை தேடிவரும் தயாரிப்பாளர்களும் 'சேலை' இல்லாத பாத்திரத்தில்தான் நடிக்கச் சொல்லுகிறார்களாம். சித்ராவும் ஓகே சொல்கிறார். வேறு வழி உண்டா என்ன?

## கிசு-கிசு-நம்பர் II

### அடி தடிக்கு ரெடி!

டிஸ்கோ சாந்திக்கு தமிழில் வாய்ப்பு இல்லை. இனிமேல் கவர்ச்சியாக நடித்தால் தமிழ் இரசிகர்கள் ஏற்க மாட்டார்கள். பத்து வில்லன்களை ஒரே அடியில் வீழ்த்துவது மாதிரியான வேசம் இருந்தால் தாருங்கள் இரசிகர்கள் குசிப்படுவார்கள் என்கிறாராம்.

## கிசு-கிசு-நம்பர் III

### முன்னுக்கு வர என்ன செய்வேண்டும்?

'வெள்ளைத் தேவன்' படத்தின் மூலம் கோடம்பாக்கம் வந்தவர் நடிகை மீரா இப்போது மலையாளத்தில் திறமை காட்டி வருகிறார். தான் நடிகையாக வருவதற்கு தாயார் தான் காரணம் என்று நன்றியோடு சொல்லி கண்டபடி கண் கலங்கும் மீரா இன்னொன்றையும் சொல்கிறார். "முன்னுக்கு வருவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கற்றுத் தந்ததும் அம்மாதான்." இதை மீரா சொல்ல அருகில் இருந்த தாயாரும் கண் கலங்கி எக்கச்சக்கமாக உணர்ச்சிவசப்பட்டு விட்டாராம்.

## கிசு-கிசு-நம்பர் IV

காந்திய கொள்கைதான் தனக்குப் பிடிக்கும் என்று சொல்லுகிறார் கஸ்தூரி. காந்தியவாதியான கஸ்தூரி வெளிப்புறப் படப் பிடிப்புகளுக்கு சென்றால் ரி.வி.டெக். பழைய தமிழ்பட கசட்டுகள் என்று தயாரிப்பாளர்கள் செவியில் வாங்கிப் பார்த்து தொல்லைபடுத்துகிறாராம். பாவம் காந்தி.

### பரம பிதா

இயேசு கிறிஸ்து நாதரின் தெய்வீக வரலாற்றை மையமாக வைத்து 'வோல்டு இன்டர் நேஷனல்' என்னும் புதிய பட நிறுவனம் தயாரிக்கும் படம் 'பரம பிதா' இயேசு கிறிஸ்துவாக புதுமுகம் ஒருவர் நடிக்கவுள்ளார். அதற்கான தேர்வு நடைபெற்று வருகிறது.



மீனா

### அங்கே போகிறார

விருது பூசும் அர்ச்சனாவுக்கு தமிழில் தோ வாய்ப்பு. அதனால் இந்தியில் தேடுகிறார். வாய்ப்பைத் தான்

### உரிமையோடு.....

நடிகை ரேவதியை அவரது சொந்தப் பெயரான ஆஷா கேளுண்ணி என்று அழைக்கும் உரிமை மூவருக்கு மட்டும்தான் இருக்கிறது. பாரதிராஜா, சுரேஷ்மேனன், மூன்றாமவர் கமல்.



நாகார்ஜுன்-மீனா
படம்-கலாட்டா மாப்பிள்ளை

### யுவராணியின் கவர்ச்சி

'ஜாதி மல்லி' படத்தில் பாலசந்தர் யுவராணிக்கு நல்ல பெயர் எடுத்துக் கொடுக்க முயன்றது பலிக்கவில்லை. கவர்ச்சி விடயத்தில் தாராளமான யுவராணி தொடர்ந்தும் அப்படியே நடித்து வருகிறார். தற்போது நடித்துவரும் 'செல்லக்கண்ணு' படத்திலும் நெருக்கமான காதல் காட்சிகளில் தாராளமாக நடித்துக்கொண்டிருக்கிறார். படத்தின் நாயகன் விக்னேஷ் வெட்கப்பட்டாலும் தைரியம் சொல்லி ஊக்குவிக்கிறாராம் யுவராணி. கிராமத்து கதை என்றாலும் கவர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள். யுவராணி போன்றவர்கள் திரையுலகில் நீடிப்பது கஷ்டம்தான். கவர்ச்சி வானவில் மாதிரி.

### படம் ஒன்று-ஜோடிகள் நான்கு!

4 ஜோடிகள் நடிக்கும் புதிய படம் தயாராகிவருகிறது. ராஜீவ்-ரேகா-எஸ்.வி சேகர் ரோகிணி, சந்திரசேகர்-வைஷ்ணவி ஆகிய ஜோடிகளுடன் புதிய ஜோடி ஒன்றும் நடிக்கவுள்ளது 'எங்கள் தங்க மகன்' என்று படத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது.

இப்போது தமிழில் மொழி மா... சிரஞ்சீவி கதாநாயகன் ... பிறகென்ன ஆடல், பாடல், ... நிறைய உண்டு. சிரஞ்சீவி ...

## நட்சத்திரப் பொறிகள்

### மாமனாராகும் மணி

நகைச்சுவை நடிகர் கவுண்டமணி வடிவேலுவின் வரவால் சற்று கலக்கமடைந்துள்ளார். ஆனாலும் ஒரு இனிப்பான செய்தியை எதிர்பார்த்திருக்கிறார். தனது மூத்த மகனுக்கு தகுந்த மணமகள் தேடச் சொல்லியிருக்கிறாராம். பொருத்தமானவர் கிடைத்தால் மணிக்கு அது இனிப்பான செய்திதானே?

### சத்யராஜ் ஸ்டைல்

எம்.ஜி.ஆரைப் பின்பற்றி பாடல் காட்சிகளில் நடித்தவர் சத்யராஜ். அவர் எம்.ஜி.ஆரை பின்பற்றும் இன்னொரு விஷயமும் உண்டு. அடிக்கடி கதாநாயகிகளை மாற்றிக்கொள்வதுதான் அது. (பாவம் பானுப்பிரியா மற்றும் சுகன்யா)

### கன்னத்தில் மட்டும்தான்

முத்தக் காட்சியில் நடிப்பீர்களா? நடிப்பேன் ஆனால் ஒரு நிபந்தனை என்கிறார் ரஞ்சிதா. என்ன நிபந்தனை? கன்னத்தில் மட்டும்தான் கொடுப்பேன் என்றுவிட்டார். உறுதி காப்பாற்றப்படுமா அல்லது காற்றில் பறக்குமா?

### ஷர்மிலியின் ஜோக்

தலைக்கனம் என்றால் என்னவென்று தெரியாதவர்கள் ஷர்மிலி சொல்லும் ஜோக்கை கேளுங்கள். தீப்பெட்டியும், தீக்குச்சியும் மோதிக்கொள்ளும்போது தீக்குச்சி மட்டும் ஏன் எரிகிறது? அதற்கு தலைக்கனம் அதிகம். அதனால்தான் எரிகிறது என்று நடிக்கிறார் சொதி..சிரிக்கிறார்.

### குஷ்பூவின் வெட்கம்

இரசிகர்களோடு நின்று போட்டோ எடுத்துக்கொள்ள உடனே ஓகே சொல்பவர் குஷ்பூ. ஆனால் கவர்ச்சி உடையில் இருக்கும்போது மட்டும் 'நோ'. வெட்கமாம்.

### சொன்னது போச்சு!

பாட மாட்டேன், பாடல் எழுதமாட்டேன் என்று சொன்னவர் இசையமைப்பாளர் தேவா. இப்போது அந்த இரண்டையுமே அவர் செய்கிறார் 'ரசிகன்' படத்தில்.

### போட்டியோ போட்டி

கேரளாவில் ஊர்வசிக்கும் ஷோபனாவுக்கும் கடுமையான போட்டி. நம்பர் வன்னாக இருந்த ஊர்வசியை இந்த ஆண்டு வீழ்த்திவிட்டு அந்த இடத்திற்கு வந்துவிட்டார் ஷோபனா. நடிகை ஊர்வசியை வீழ்த்தினாலும் ஊர்வசி பட்டத்தை பெற்றுவிட்டார் ஷோபனா.

### ஏமாற்றுவானா காதலன்?

தயாரிப்பாளர் குஞ்சுமோன் 'ஜென்டில்மேன்' படத்தின் வெற்றிக்குப் பின்னர் படு பிரபலமானவர். ஆனால் 'சிந்துநதிப் பூ' படம் அடி வாங்கியதால் புகழுக்கு சேதம் வந்தது. இப்போது அவரது தயாரிப்பில் உள்ள 'காதலன்' பட விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கிறார். பிரபுதேவா, நக்மா ஜோடி நடித்துள்ள 'காதலன்' பயங்கரமான செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது. அடி வாங்கினால் மீள்வது கஷ்டம். 'இந்து' படம் பிரபுதேவாவை கொஞ்சம் ஏமாற்றிவிட்டதால் அவரும் 'காதலன்' வெளிவந்து தனது காட்டில் மழை கொட்ட வைக்காதோ என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்.




சோமி அலி



பிரபுதேவா-நக்மா
படம்-காதலன்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்





## என்ன வாழ்க்கை?

சிறிய மீன்களைப்
பெரிய மீன்கள்
விழுங்கி வாழ்வது
மீன்களின் வாழ்க்கை.

மிருகத்தை மிருகம்
கடித்துக் குதறி
உண்டு வாழ்வது
மிருக வாழ்க்கை.

சிறியவர் பெரியவர்
சிரித்துக் கூடி
மகிழ்ந்து வாழ்வது
மனித வாழ்க்கை.

மனிதனை மனிதன்
மண்ணை ஆள
கொன்று குவிப்பது
என்ன வாழ்க்கை?

ஏ.ஐ.எம்.மஹ்றூபு-மாபோளை.

"காவியம் செய்வோம், நல்ல காடு வளர்ப்போம்; கலை வளர்ப்போம், கொல்லருலை வளர்ப்போம்; ஓவியம் செய்வோம், நல்ல ஊசிகள் செய்வோம்; உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்."

-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

## எலிச் சவால்

ஒரு காட்டில் மதம்பிடித்த யானை ஒன்று மிகுந்த இறுமாப்புடன் திரிந்தது. மிருகங்களுக்குள்ளேயே தான் மட்டுமே மிகுந்த பலசாலி என்கின்ற நினைப்பு அதற்கு. அதனால் எதிரில் வரும் எல்லா மிருகங்களையும் கிண்டல் செய்தது.

புலியைப் பார்த்தால், "ஏய் புலியாரே உனக்குப் பல்லும், நகமும் இல்லாவிடில் உன்னைக் கண்டு யாரும் பயப்பட மாட்டார்கள். மாமிசம் சாப்பிட்டு உன் பல் பாசி படிந்து கிடக்கிறது. போய் பல்லைத் தேய்த்துக் கொண்டுவா." எனக் கேலி செய்யும்.

ஒட்டகச் சிவிங்கியைப் பார்த்து, "ஏய் பாம்புக் கழுத்தா உனக்கு இவ்வளவு பெரிய கழுத்து இருந்து என்ன பயன்? இலைகளைப் பறித்து உன்னால் சாப்பிட முடியுமே தவிர கிளைகளை ஒடித்துப்போட உன்னால் முடியாது. என்னைப் பார் நான் எவ்வளவு ஜோராக ஒடித்துப்போடுகிறேன்," என்றது.


கரடியைப் பார்த்து, "ஐய்யே உன் மூஞ்சியே நல்லா இல்லே. உடம்பு பூராவும் மொசு மொசன்னு ரோமம். உன்னை எப்படித்தான் இவ்வளவு அசிங்கமாகக் கடவுள் படைத்தாரோ?" என்று கேலி செய்யும்.

காட்டில் உள்ள எல்லா மிருகங்களுமே இந்த மாதிரி யானையின் ஏளனத்திற்கு ஆளாகியுள்ளன. ஆனால் எந்த மிருகமும் அதை எதிர்த்துப் பேசியதில்லை. பேசும் தைரியமும் வந்ததில்லை.

ஆனால் ஒரு சுண்டெலிக்கு வந்ததே ரோஷம்.

ஒருநாள் எலி போனபோது யானை அதைத் தும்பிக்கையால் பிடித்து ஒரு சுழற்று சுழற்றி கீழே போட்டுவிட்டு, "ஏய் சுண்டெலியே! உனக்கு அந்தப் பெயர் தவறானது. சுண்டைக்காய் எலி என்பதே பொருந்தும். உனக்கு என்ன துணிச்சல் இருந்தால் நான் நடந்து போகும்போது குறுக்கே வருவாய்?", என்றது.

எலிக்குக் கோபம் கோபமாக வந்தது.



"ஏய் யானையாரே நீர் உருவத்தில் பெரியவனாக இருக்கலாம். நான் சிறியவனாக இருக்கலாம். ஆனால் மூளையைப் பெறுத்தவரையில் உன்னைவிட நான் பலசாலி. என்க்குள் உள்ள மூளை வேலை செய்கிற மாதிரி உன் மரமண்டை வேலை செய்யாது," எனச் சற்றுச் சூடாகவே பதில் அளிக்கவே யானைக்குக் கோபம் வந்து எலியைத் தனது காலால் நசுக்க வந்தது.

எலி ஓடிப்போய் மரத்தின் மீது ஏறிக் கொண்டு, "நாளை பகல் மூன்று மணிக்கு இதே இடத்திற்கு வா. நான் பெரியவனா, நீ பெரியவனா என்பதை நான் நிரூபித்துக் காட்டுகிறேன்," என சவால் விட்டது.

யானையும் அந்தச் சவாலை ஏற்றுக் கொண்டது.

மறுநாள் எலி இந்தச் சவாலை அனைத்து மிருகங்களிடமும் சொன்னபோது, "உனக்கு கெட்டகாலம் போலிருக்கிறது. போயும் போயும் நீ அவ்வளவு பெரிய யானையிடம் மோதலாமா?" என்றன. எலி அதை லட்சியப் படுத்தாமல் அந்தக் குறிப்பிட்ட மரத்தடிக்கு எல்லா மிருகங்களையும் வரச் சொல்லிற்று.

சுண்டெலி சொன்ன மாதிரியே யானையும், மற்ற மிருகங்களும் அந்த மரத்தடியில் கூடிவிட்டன. எலியை மட்டும் காணவில்லை. யானை, சுண்டெலியின் வாதத்தை அனைத்து மிருகங்களிடமும் சொல்லி எலியைக் கேலி செய்துகொண்டிருந்தது.

அந்தச் சமயம் பார்த்து மரத்தின் மீது கிறீச்...கிறீச்..என்று சப்தம் கேட்கவே அனைத்து மிருகங்களும் மரத்தை அண்ணாந்து பார்த்தன. எலியின் சப்தம்தான் அது என்று அனைத்து மிருகங்களுக்கும் தெரிந்திருந்தாலும் அது மரத்தின்மீது எங்கே ஒளிந்திருக்கிறது எனக் கண்டு பிடிக்க முடியாமல் அனைத்து மிருகங்களும் திண்டாடின.

மெலிந்த குரலில் எலி பேசலாயிற்று.

"யானையாரே பந்தயத்திற்கு நான் ரெடி. நீ ரெடியா?"

"நீ முதலில் வெளியில் வா; பந்தயம் என்னவென்று சொல்." யானை பதில் அளித்தது.

"உன் தும்பிக்கையால் மரக்கிளையை அசைத்து என்னைக் கீழே விழச் செய். அப்படிச் செய்துவிட்டால் நீதான் பலசாலி. மூளையுள்ளவன். நான் தோற்றுப்போனதாக அறிவிக்கத் தயார்," எலி சாமர்த்தியமாக தான் இருக்கும் இடம் தெரியாமல் பேசியது.

யானைக்கு ஆவேசம் வந்து, "ஐந்து நொடியில் உன்னைக் கீழே வீழ்த்துகிறேன் பார்," என்றபடியே மரக்கிளையைப் பிடித்து உலுக்கிற்று. ஒரே ஒரு நிமிடத்தில் என்ன நடந்தது என்றே தெரியாது. யானை பிளிறியபடியே துள்ளித் துடித்தது. தும்பிக்கையை மேலும் கீழும் அசைத்து பிறகு ஓட ஆரம்பித்தது. அனைத்து மிருகங்களும் என்ன நடந்தது என தெரியாமல் யானையைப் பின் தொடர்ந்தன.

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு எலி யானையின் தும்பிக்கையின் துவாரத்திலிருந்து வெளியே வந்தது. யானை மூச்சுத் திணறி படுத்துக்கொள்ள அனைத்து மிருகங்களும் யானையைச் சுற்றி நின்று கொண்டன.

எலி சரசரவென ஓடிப்போய் ஒட்டகச் சிவிங்கியின் தலையில் ஏறிக்கொண்டு, "ஏய் யானையாரே நான் சிறயவன்தான். உருவத்தில் பெரியவனான உன் மூக்குத் துவாரத்தில் நுழைந்து உன்னை என்ன பாடு படுத்தி விட்டேன். உன் தும்பிக்கையை உயர்த்தவே நான் மரத்தின்மீது ஒளிந்திருந்து பேசினேன். நீ மரத்தை உலுப்பியபோது நான் உன் துதிக்கையின் துவாரத்திற்குள் நுழைந்து விட்டேன். பெரியவனான உன்னால் என்ன செய்ய முடிந்தது?" என்றது.

யானை வெட்கித் தலை குனிந்தது. அன்று முதல் யானை யாரையும் இகழ்ந்து பேசுவதில்லை. யானைக்கு எலியால் புத்தி வந்தது.

## விடுகதைகளும் விடைகளும்

1. சிறிய கூட்டில் ஆயிரம் மனிதர்கள். அது என்ன?
2. இரகசியம் எல்லாம் உன்னிடம்தான். நீ வருடமெல்லாம் என்னிடம்தான். அது என்ன?
3. கறுப்பு நிறச் சிங்காரிக்கு வெள்ளைக் கரைச் சேலை. அது என்ன?
4. அடிக்காமல் அழுவான். அது என்ன?

விடைகள்

1. தேன் பூச்சி 2. டயறி
3. சிலேற்று 4. ஐஸ் பழம்

பெ.சாந்தினிதேவி
பரிசுத்த திருத்துவ கல்லூரி- ஆவேலிய.

1. தலையைக் கொடுத்து தணலாகிப் போவான். அவன் யார்?
2. வெள்ளை நிறப் பையனுக்கு மஞ்சள் நிற உடை. அவன் யார்?
3. காய்க்கும், பூக்கும், பளபளக்கும், காக்கா நிக்கக் கொப்பில்லை. அது என்ன?
4. எட்டுக்கால் ஊன்றி, இருகால் படமெடுத்து, வட்டக் குடை பிடித்து வாறாராம் வன்னியனார். அவர் யார்?
5. முட்டிக்குள் முத்துக்கள் அது என்ன?

விடைகள்

1. தீக்குச்சி 2. வாழைப்பழம்
3. திராய் 4. நண்டு
5. மாதுளம் பழம்.

எஸ்.சுதர்சன்
வாழைச்சேனை.

## கணக்கு புதிர்



ஒரு கடையில் உள்ள 35 பெட்டிகளின் மதிப்பு 18,900 ரூபாய். அதில் 9180 ரூபாய் மதிப்புள்ள பெட்டிகள் விற்கப்பட்டது. மீதமுள்ள பெட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

உங்கள் விடையைச் சரிபார்க்க 13ம் பக்கம் பாருங்கள்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 02.07.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 46
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 43

பரிசுக்குரியவர்
ஆர்.பிரதீபன்
பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி-கொழும்பு-04.

பாராட்டுக்குரியவர்கள்
எம்.எம்.ஸன்ஸர்
தி/கிண்ணியா மத்திய மகாவித்தியாலயம்-கிண்ணியா-6.
அ.முஹம்மத் அஸாம்
அஹதியா சன்மார்க்க போதனா பீடம்-புத்தளம்.
செல்வி.பாயிஷா ஜலீல்
ரம்பைக்குளம் மகளிர் கல்லூரி-வவுனியா.
கணபதிப்பிள்ளை பிரதீபராஜ்-திருகோணமலை.
வே.குமாரசுவாமி
களு/பேர்த் அரசினர் தமிழ் பாடசாலை-ஹொரணை.
எம்.ஏ.நைஸர்-தி/அல் அக்ஸா ம.வி-கிண்ணியா.

## இரத்த அழுத்தம்



இரத்த அழுத்தம் என்றால் என்ன?
இரத்தக் குழாய்களில் இரத்தம் பாயும் வேகம் இரத்த அழுத்தம் எனப்படும்.

இரத்த அழுத்தத்தை நிர்ணயிப்பது எது?
இரத்தக் குழாய்கள் சுருங்கி விரிவதால் இரத்த அழுத்தம் ஏற்படும். இரத்தக் குழாய்கள் சுருங்கினால் இரத்த அழுத்தம் அதிகமாகும்.

இரத்தக் கொதிப்பு (ஹைப்பர் டென்ஷன்) என்றால் என்ன?
இரத்த அழுத்தம் மிக அதிகமாக இருப்பதற்கு இரத்தக் கொதிப்பு (ஹைப்பர் டென்ஷன்) என்று பெயர். இரத்தக் குழாய்கள் நிரந்தரமாகச் சுருங்கி விடுவதால் இது ஏற்படுகிறது.

இரத்த அழுத்தம் எவ்வாறு அறியப்படுகிறது?
ஸ்பிக்மோ மனோ மீற்றர் என்ற கருவியின் மூலம் அறியப்படுகிறது. இந்தக் கருவியில் உள்ள இரு பட்டைகள் கைகளின் மேல் புறத்தில் இறுக்கமாகக் கட்டப்பட்டு இரத்த அழுத்தம் அறியப்படும்.

இரத்த அழுத்தம் எப்போதும் கட்டுப்பாட்டிற்குள் இருக்கவேண்டும்? ஏன்?
இரத்த அழுத்தம் தொடர்ந்து அதிகமாகவே இருந்தால் கண், மூளை, சிறுநீரகம், இதயம், ஆகியவற்றை அது பாதிக்கும். இறுதியில் உயிருக்கே ஆபத்து ஏற்படும். அதனால் இரத்த அழுத்தம் அதிகம் உள்ளவர்கள் தொடர்ந்து மருந்துகளை உட்கொண்டு அதைச் சரியான அளவில் வைத்திருக்க வேண்டும்.

## இலங்கையின் பிரதமர்களும் ஜனாதிபதிகளும்


பிரதமர்கள் (சுதந்திரத்திற்குப் பின்னர்)

| | |
|---|---|
| டி.எஸ். சேனாநாயக | - 1948-1952 |
| டட்லி சேனாநாயக | - 1952-1953 |
| ஜோன் கொத்தலாவல | - 1953-1956 |
| எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க | - 1956-1959 |
| விஜயானந்த தஹநாயக்க | - 1959-1960 |
| டட்லி சேனாநாயக்க | - 1960 |
| சிறிமா ஆர்.டி.பண்டாரநாயக்க | - 1960-1965 |
| டட்லி சேனாநாயக்க | - 1965-1970 |
| சிறிமா ஆர்.டி.பண்டாரநாயக்க | - 1970-1977 |
| ஜே.ஆர். ஜயவர்த்தனா | - 1977-1978 |
| ஆர்.பிரேமதாச | - 1978-1989 |
| டி.பி.விஜேதுங்கா | - 1989-1993 |
| ரணில் விக்ரமசிங்க | - 1993 |

ஜனாதிபதிகள்

வில்லியம் கொபல்லாவ (ஜனாதிபதி) 1972-1977
ஜே.ஆர். ஜயவர்த்தனா (நிறைவேற்று அதிகாரம் கொண்ட) 1978-1989
ஆர்.பிரேமதாச (நிறைவேற்று அதிகாரம் கொண்ட) 1989-1993
டி.பி.விஜேதுங்க (நிறைவேற்று அதிகாரம் கொண்ட) 1993

செல்வி எம்.என்.பாத்திமா சுரைஜா-வாஹிறா மத்திய கல்லூரி-அக்குறணை.



ஆபிரிக்க சிங்கம் 9 அடி நீளம் இருக்கும். உயரம் 3 அடி 4 அங்குலம். எடை 185 கிலோ இருக்கும். இதன் விலங்கியல் பெயர் பன்தெரா லியோ.



இந்தியாவில் மத்திய பிரதேச மாவட்டத்தில் 1902ல் இருந்து 1910வரை ஒரே புலி 436 பேரைக் கொன்றது. இதனைக் கார்ன்ஜிம் கார்பெட் என்பவர் சுட்டுக்கொன்றார்.



இறந்த உடல்களைப் பதப்படுத்தி 'மம்மி'கள் ஆக்குவது பண்டைய எகிப்தியர்களின் வழக்கம். அவர்கள் பூனைகளை புனிதமாகக் கருதியதால் பல பூனைகளையும் 'மம்மி'களாக்கினர். அவற்றிற்கு அடுத்த உலகிலும் சாப்பாடு கிடைப்பதற்காக பல எலிகளையும் 'மம்மி'கள் ஆக்கினர். 1888ம் ஆண்டில் எகிப்து நாட்டில் 'பெனிஹாசன்' என்ற இடத்தில் இந்த மம்மிகள் கிடைத்துள்ளன.



பூனைகளிலேயே மிக உயர்ந்த ரக பூனைகள் 'சயாமீஸ்' இனப் பூனைகள். இவை தாய்லாந்தைச் சேர்ந்தவை. 1880ம் ஆண்டிலிருந்துதான் இந்தப் பூனைகள் ஐரோப்பாவிற்குவர ஆரம்பித்தன.

## சொல்லுங்கள் பார்க்கலாம்

A,B,C,D வராத சொற்கள் நூறு ஐந்து நிமிடத்தில் சொல்லுங்களேன் பார்ப்போம்.
ONE
TWO
THREE முதல்
NINETY NINE வரை உள்ள இலக்கம்.
வரையான நூறு சொற்களும்.

பர்ஸானா சஹீட்- அக்குறணை.

## விஞ்ஞானப் பெயர்கள்

1. அப்பச்சோடா- சோடியம் இருகாபனேற்று
2. சலவைச் சோடா- சோடியம் காபனேற்று
3. எரிசோடா- சோடியம் ஐதரொட்சைட்டு
4. பல்மாணிக்கம்- செப்பு சல்பேற்று
5. கறியுப்பு-சோடியம் குளோரைட்டு
6. வெடியுப்பு- பொற்றாசியம் நைதரேற்று
7. வினாகிரி- அசற்றிக்கமிலம்
8. மக்னீசியப்பால்- மக்னீசியம் ஐதரொட்சைட்டு
9. சுண்ணாம்பு நீர்- கல்சியம் ஐதரொட்சைட்டு

கா.சுபாசினி
தி/மெதடிஸ் பெண்கள் கல்லூரி-திருகோணமலை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தேன் கிண்ணம்



## என்ன வேலை?

1. போனதெல்லாம் போயிற்று! அழுகையோடும்
புறப்பட்டு வந்திப்போ நாலாண்டாச்சு!
ஆனதெலாம் ஆகட்டும், ஒளிக்கீறேதும்
அடிவானில் தோன்றட்டும் எனவே பார்த்தால்-
'ஏனுனக்கு அவசரமோ?' என்னுமாப்போல்
இருளாட்சி புரிகிறது-காற்றே இல்லை!
தேனிருந்த மரமெலாம் இலையுமின்றேல்-
சென்றாலென்-இருந்தலென்?சிறைதானெல்லாம்!

2. எல்லோரும் வைத்திருந்தார் வளவும், வீடும்!
ஏழிற்பேராதனைப் பூங்காவோ(டு), ஆராயும்
பல்கலை நற்கழகமும் நான் வைத்திருந்தேன்!
பார்த்தோருக்கது புரியும், அறியார் மற்றோர்!
நல்ல பணம் கொடுத்தாலும் வாங்கொணாத
நாற்கவியும், நன்னூலும் வைத்திருந்தேன்!
இல்லையெனில் எனக்கங்கே என்னவேலை?
எங்கிருந்த போதினிலும் எல்லாமொன்றே!

3. பெற்றதாய் போன்றதுதான் பிறந்த நல்லூர்!
பிறந்த தாமரை இல்லை, வளர்தீவில்லை!
முற்றாகச் சிதைந்தாலும் [illegible]
[illegible] முன்னாளைப்போல்!
[illegible] ஓர் நாள்கைந்தாண்டு!
[illegible] கண்
[illegible] உணர்ச்சி-இன்றேல்
[illegible] வழக்கம்போன்றே!

அகதிக்கவிராயர்-திருகோணமலை.

## "அது"...!



அது என்-
கனவில் வந்தது
சாவும் வாழ்வும்
அதுவாகவேயிருந்தது.

அந்த-
மௌனமுறைந்த
மொட்டை மாடியின்
பெரிய சுவர் பகுதியை
உடைத்தே விட்டது...

பார்க்கும்போது
பயமாக இருக்கிறது
இனி-
ஜன்னல்களையும்
மூடியாகிவிட்டது.

இரவின்-
இன்னொரு ஜன்னல் வழியாக
பூனை பாய்ந்து
மிரட்டுகிறது...

இந்த-
கணப்பொழுதில்தான்
எல்லாமே என் மனதில்
முளைத்துக் கொண்டனபோலும்.

படர்ந்து சென்றது பார்வை
பூட்டியிருக்கும்
கதவின் மீதும்,
திறந்து கிடக்கும்
டயரியின் மீதும்;

என் மனம்
அழுதது இப்படி
"ஒரு மாயையான
இரவு இது! நீ...
பிரியப்பட்டவைகளை
எல்லாம் சிருஷ்டித்துக்கொள்
அது...
மரங்களாகவும்
மிருகங்களாகவும் அல்லது
நீராகவும் வானமாகவும்
பூமியாகவும் - ஏன்...?
மனிதனாகவும் தான்...

மரணமும் வாழ்க்கையும்
போலியுமல்ல...
வாழ்க்கை அழகாகவும்
உருவமற்ற சூன்யமாகவும்
இருக்கலாம்...

ஆனால்...
மரணம் முடிவில்லாத
ஜீவிப்புத்தான்...

இவைகளில்
எது அந்த அது-
எனக்கு இன்னுமே..
புரியவில்லை..இன்னும்
என் கொட்டகை
அதே மௌனத்தில்
அதே கேள்விகளுடன்...!!

பொத்துவில் ஏ.மஜீத்.

12ம் பக்க
கணக்குப் புதிர்
விடை-18

## என் காதலிக்கு!

காதலியே
நீ
நதியாக இருந்தாய்.
நான்
தூண்டில் போட்டேன்.

நீ
மீனாக இருந்தாய்.
அதில்
சிக்கிக்கொண்டாய்.

அப்போது
நீ
இறையின் கொடை
அதனால்,
இதழ்களை
நனைத்து நனைத்துச்
சுவை பார்த்தேன்.

ஓ!!
ஸ்வாரஸ்யமாய்
என் இனிமையைத்
திருடிச் சென்றவளே!
என் நேசத்தை
வருடிச் சென்றவளே!
நான்
தெளிவாக இருந்தும்
நீ
இருண்டிருந்தது எதற்காக?

என்
இதயத்தைக் கெடுத்தவளே!
புது
உதயத்தைத் தடுத்தவளே!
தீப்பிழம்பாகும்
என்
ஒவ்வொரு-உணர்வுகளுக்கும்
காரணம் சொல்லு!

ஓ!
பணமே!
என்றுதான் உன்னில்
மனிதம் பிறக்கும்!

-மக்கொன லின்னாஸ் சௌக்கத்-

## அபாய நோய்வினைகள்

எரிந்துகொண்டிருக்கும்
என்
நெருப்புத் தேசத்தின்
ஜுவாலைகளை
நேசித்தவாறு
இன்றைய
மனித ஜீவிதங்கள்.

••

கனவுகள்
கரியாகிப் போனது
கண்களுக்குள்
அதற்கான
விறகுகள்
அடுக்கப்பட்டிருந்தன.
பக்கத்து
சாய்வில்
வேதனையின்
'தீ' மப்படிமம்.

••

ஓ...
நாங்கள்
அந்தகார
இருட்டுக்குள்
அகப்பட்டுக்கொண்டோம்
நிச்சயித்தாயிற்று
பிணமாகிப்போன
வாழ்வின்
நாளைய
அந்திமக்கிரியைகள்.
வாருங்கள்
கொஞ்ச நேரம்
சாம்பலாகிப்போன
வாழ்வின்
துளிகளெழுத்து
நம்
கண்ணீர் நதியில்
அஸ்தி கரைத்து
புதிது புதிதாய்
அஞ்சலி
செலுத்துவோம்.

••

அன்று
வீடுகளில்
சுகமாய்
விதைக்கப்பட்ட
சின்னச்சின்ன
சாவுகள்
இன்று
ஒவ்வொரு வீதிகளிலும்
அதிகமதிகமாய்
விளம்பரப்படுத்தப்
பட்டுவிட்டன
உயிர்களுக்கு
மயான
ஊர்வலம்
தேவையில்லை
ஏனெனில்
தற்போது
நம் ஊரே
ஒரு பேய் குடிகொண்ட
பெரும்
மயானம்தானே.

••

நம் விதி
சந்தர்ப்பவாதங்களுக்கு
விலைபோய்
விட்டது
அதனால்
வாழ்வு
நிலைமாறிப்போனது
நாக்கு நீட்டிய
நரகத்து
கடூரத்தை
போல.

••

அழவில்லை
நாங்கள்
ஏனெனில்
அதுகூட
இப்போது
ஆயுத ராஜ்யத்தில்
ஆயுட்கால
அடிமை..?

ரைஷ்சபா ரியாஸ்
கிண்ணியா.

# பிரபலமானவர்களின் பிரபலமாகாத சங்கதிகள்



## லொரி ஓட்டிய ராணி

இங்கிலாந்தின் ராணியான எலிசபெத் பிடிவாதம் பிடிப்பதிலும் ராணிதான். இரண்டாம் உலகப் போரின் போது தரைப்படையில் சேர்ந்தே தீருவேன் என்று ஒற்றைக் காலில் நின்று சாதித்தவர். சாதாரண படையாட்கள் போலவே படைப்பிரிவிலும் பணியாற்றியவர். எலிசபெத் நடனமும் ஆடுவார். பியானோ வாசிப்பார். லொரி ஓடுவதிலும் வல்லவர்.

## கமல் மாதிரித்தான்



புருஸ்லி என்றால் உடனே ஆ...ஊ... என்று சண்டை செய்யும் கதாநாயகன் கண்ணில் தெரிவார். புருஸ்லீ கதாநாயகனாக நடித்த பல திரைப் படங்கள் சக்கைபோடு போட்டன. தெரியாத விஷயம் ஒன்று-புருஸ்லி சிறுவயதில் நமது கமல் மாதிரி குழந்தை நட்சத்திரமாக நடித்த படங்களின் எண்ணிக்கை 20. அப்போது புருஸ்லியின் பெயர் லீ ஸ்யூ லூங்.

## என்னால் முடியும்-எடு பேனாவை!

ஹெரால்ட் ரொபின்ஸ் என்றால் உலகில் உள்ள இளைஞர்களும் யுவதிகளும் தமக்கு பிடித்தமான எழுத்தாளர் என்று சொல்லுவார்கள். எழுத்தால் பணம் குவித்த வர் அவர். ரொபின்ஸ் சிறு வயதில் தெருக்களை சுத்தம் செய்யும் தொழிலாளியாக இருந்தவர். ஒரு முறை பட நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்தார். அங்கு இருந்த கதை ஒன்றை படித்துவிட்டு "இதைவிட நான் நன்றாக எழுதுவேன்." என்றார். யாரும் நம்பவில்லை. எடுத்தார் பேனாவை. கதைகளின் மூலம் பணம் குவிக்கும் எழுத்தாளராகிவிட்டார்.

## அவள் கொடுத்தது

விக்டர் ஹ்யூகோ புகழ்பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் நாவலாசிரியர். அவருக்கு ஒரு காதலி இருந்தாள். பெயர் ஜூலியட் ட்ரூபட். அவளுடைய வீட்டுக்கு இவர் தினமும் போவார். தினமும் அவள் ஒரு காதல் கடிதத்தை கொடுப்பாள். சில நாட்களில் 2,3 கடிதம் கூட போனஸாக கொடுப்பாள். அவளிடம் இருந்து விக்டர் பெற்ற மொத்த கடிதங்கள் எவளவு தெரியுமோ? **பதினேழாயிரம்.** கடிதமலைக் காதலி!



## ஹிட்லருக்குப் பிடித்தது

இரண்டாம் உலகப் போரில் மனித வேட்டைகள் பலவற்றுக்கு காரணமான ஹிட்லருக்கு அசைவம் பிடிக்கவே பிடிக்காது. சைவ உணவைத்தான் விரும்பி ஒரு பிடி பிடிப்பார்.

## தந்தையை இழந்த தனவந்தர்

உலகெங்கும் பல நாடுகளில் நட்சத்திர ஹோட்டல்கள் நடத்தியவர் எம்.எஸ். ஒபரோய். கோடி கோடியாக பணம் குவித்த ஒபரோய் சிறு வயதில் கஞ்சிக் காசுக்கூட கஷ்டப்பட்டவர். பிறந்த ஆறு மாதத்தில் அப்பாவை இழந்தார். 50 ரூபா சம்பளத்தில் வேலை பார்த்தார்.



## எவளுக்காய் வாழ்ந்தாலென்ன?

மனம் நிறைய மாதுவினது எண்ணம்.
தனம் கொள்ளத் தலைப்படுமிவ் வுலகம்.
புறம் சொல்லும் பேதமையைப் பாராய்
புதிதெனவே படைக்க நீ வாராய்.

கட்டிலிலே மனைவியோடு கூடல்
கடிதனவே சொல்லி விடவல்ல
புத்தி யொடு கவிஞனிதைப் பார்த்தால்
புது மெருகு தோன்றி விடும் கவியில்.

எத்தனை தான் கோலங்கள் நிதமும்
எண்ணிடவே முடியாத வேதனைகள்.
கவிக்கு இன்னும் பஞ்சமென எண்ணி
கட்டிலறை விட்டு வாராய் கவிஞ!

மங்கையதைப் பாடியது போதும்!
மாங்காய்க் கன்னங்களைச் சொல்லியது போதும்!

சுளை நடுவே பலா போலக் கவிகள்
சுவை படவே தந்தாயே மணியில்!

எவளுக்காய் வாழ்ந்தாலும் கவிஞ-நீ!
எங்களுக்காய் கவியெழுது போதும்
ஏழைக்காய் கவியெழுது-
அகதிகள் படும் பாட்டிற்காய் கவியெழுது!
சாதிச் சண்டைக்காய் கவியெழுது!
ஒற்றுமை உலகிற்காய் கவியெழுது!
மதிப்புள்ள கவிகளை மானிடர்க்காய் எழுது!

அக்குறணை-இளைய அப்துல்லாஹ்.

## என்னுள் கரைந்துவிடு...!



உணர்வுகள் ஒன்றித்து
உயிர்த்த நம் காதலை
மொட்டுகள் விரிந்த
ஒரு மோகனமான
காலை நேரத்தில்
என் உதடுகளில்
முத்தமிட்டு-நீ
புனிதப்படுத்தினாய்...!

காதலி...
காலங்களில் கரைந்த
அந்த
நிமிடங்களை
நினைத்து நினைத்து
என் மனம்

கற்பனையில்
நீந்தித்திரிகிறது!

உயிர்த்த
நம்
உறவினை
பாதிபாதியாக்கிய
பின்னும்-நீ
இடைவெளியினை நீட்டி
என் இதயத்தைப் பிளந்து
வேதனைப்படுத்தாதே!

அ.குமணன்-பாண்டியூர்

# இந்த வாரம் உங்கள் பலன்

(26.06.94 முதல் 02.07.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன் |
| கர்க்கடகம் | - வெள்ளி |
| துலாம் | - வியாழன், இராகு |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| இடபம் | - செவ்வாய், புதன் |

★ சந்திரன்- மகரம், கும்பம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார் ★

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், முன்னேற்றம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், கௌரவம். | காலை 8 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பொருள் செலவு. | பகல் 12 மணி |
| வியாழன்- வீண் கவலை, அந்நியர் உதவி. | காலை 9 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், காரியானுகூலம். | பி.ப 2 மணி |
| சனி- பெரியோர் உதவி, முன்னேற்றம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, மனக்கவலை. | காலை 6 மணி |
| திங்கள்- தேகசுகம் பாதிப்பு, தொழில் நிலைக்கேடு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, புதிய முயற்சி. | காலை 7 மணி |
| புதன்- பணவரவு, நினைத்தகாரியம் சித்தி. | காலை 9 மணி |
| வியாழன்- மனமகிழ்ச்சி, பொருள் இலாபம். | பி.ப 3 மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனக்கலக்கம். | பி.ப 1 மணி |
| சனி- வெளியிட பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உயர்ந்த எண்ணம், முயற்சிகள் வெற்றி. | காலை 9 மணி |
| திங்கள்- செய்தொழில் விருத்தி, கௌரவம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- புதிய தொழில் நிலை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, பிரயாணம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- துன்பம் தீரும், செல்வாக்கு அதிகம். | காலை 7 மணி |
| சனி- மனமகிழ்ச்சி, விருந்தினர் வருகை. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பயனற்ற செயல், பிரயாண மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள- தேகசுகம் பாதிப்பு, முன்னேற்றம் தடை. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- வீண் கவலை, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| புதன்- திடீர் பிரயாணம், மனமகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| வியாழன்- உறவினரால் கஷ்டம், துன்பம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- தெய்வ நம்பிக்கை, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், காரியத்தடை. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் நட்டம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| திங்கள்- மனக்கவலை நீங்கும், குடும்ப சுகம். | காலை 9 மணி |
| செவ்வாய்- தேகசுகம் நன்மை, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| புதன்- உறவினர் உதவி, பணக்கஷ்டம். | பி.ப 2 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப 3 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், முயற்சி வெற்றி. | காலை 7 மணி |
| சனி- தொழில் சித்தி, பணவரவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 8

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- கடன் பயம், மன அமைதியின்மை. | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, செய்தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் தொல்லை நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- தனலாபம், முயற்சிகளில் வெற்றி. | காலை 9 மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனக் கலக்கம். | பி.ப 2 மணி |
| சனி- மன அமைதி குன்றும், தேகசுகம் பாதிப்பு. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 4

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, பணக்கஷ்டம் தீரும். | காலை 8 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், மன மகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| புதன்- திடீர் பயணம், காரியசித்தி. | காலை 8 மணி |
| வியாழன்- குடும்ப மகிழ்ச்சி, இனசனக் கொண்டாட்டம். | பகல் 12 மணி |
| வெள்ளி- திடீர் சுகயீனம், வைத்தியச் செலவு. | காலை 7 மணி |
| சனி- பகை அதிகம், மனப்பயம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப 1 மணி |
| திங்கள்- தனலாபம், காரியசித்தி. | காலை 9 மணி |
| செவ்வாய்- உயர்ந்த எண்ணம், கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- மனப் பயம் நீங்கும், பணவரவு. | காலை 8 மணி |
| வியாழன்-கௌரவம், குடும்ப நன்மை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, முயற்சி வெற்றி. | காலை 8 மணி |
| சனி- தன்னம்பிக்கை, உயர்ந்த எண்ணம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக்கவலை, பணக்கஷ்டம். | பி.ப 2 மணி |
| திங்கள்- செய்தொழில் விருத்தி, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| செவ்வாய்- தனலாபம், பெரியோர் உதவி. | பி.ப 1 மணி |
| புதன்- புதிய முயற்சி, எதிர்பார்த்த வெற்றி. | காலை 6 மணி |
| வியாழன்- உயர்ந்த எண்ணம், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- கடன் பயம் நீங்கும், வெளியிட வாழ்க்கை. | பி.ப 2 மணி |
| சனி- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -5

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- வீண் கவலை நீங்கும், குடும்ப சுகம். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- காரியானுகூலம், புதிய தொழில் முயற்சி. | பி.ப 3 மணி |
| வியாழன்- பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| சனி- எடுத்த காரியம் வெற்றி, பணவரவு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-சனி,அதிஷ்ட இலக்கம் -4

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| திங்கள்- புதிய தொழில் முயற்சி, குடும்ப நன்மை. | காலை 10 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, கடன்பயம் நீங்கும். | பகல் 11 மணி |
| புதன்- அந்நிய சகவாசம், நிலைப்பிரிவு. | பகல் 12 மணி |
| வியாழன்- நிலையற்ற தன்மை, வெளியிடப் பயணம். | பி.ப 3 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பணவரவு. | காலை 8 மணி |
| சனி- நண்பர்களால் கஷ்டம், பகைமை. | பி.ப 4 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்- 2

### மீனம்:

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உயர்ந்த வாழ்க்கை, கௌரவம். | பி.ப 2 மணி |
| திங்கள்- மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| புதன்- பெரியோர் உதவி, பொருள்வரவு. | காலை 9 மணி |
| வியாழன்- பணத்தடை நீங்கும், வெளியிட உதவி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், புதிய முயற்சி. | காலை 8 மணி |
| சனி- செலவு மிகுதி, குடும்ப கலகம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 1

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ ✝ விந்தைகள்

## அவசியம் அறிய வேண்டிய சமாச்சாரங்கள்

### எக்ஸ்–ரேயால் புற்றுநோய்!

எதற்கெடுத்தாலும் எக்ஸ்-ரே எடுக்கும்படி சொல்வது மருத்துவர்கள் பலரின் பழக்கமாக இருக்கிறது.

உடலுக்குள் இருக்கும் நோயை இனங்காண உதவும் எக்ஸ்-ரே அளவைத் தாண்டினால் அதுவும் நோயை உருவாக்கிவிடும் என்று சொல்லப்படுகிறது. புற்றுநோய் போன்ற கொடிய நோயும் ஏற்பட இடமுண்டு.

எக்ஸ்-ரே எடுக்கும்படி எழுதும் மருத்துவர்களில் சிலர் அதற்கு முன் அந்த நோயாளி அதே பாகத்தை எத்தனை தடவை எக்ஸ்ரே எடுத்துள்ளார் என்பதையெல்லாம் கவனிப்பதில்லை.

ஒவ்வொரு முறை எக்ஸ்-ரே எடுக்கும் போதும் நோயாளியின் உடலின் குறிப்பிட்ட பாகத்தில் பாயும் சக்தி மிகுந்த கதிர்கள், மிகக் குறைந்தளவில் அங்குள்ள திசுக்களின் அணுக்களை பாதிக்கின்றன. திரும்ப திரும்ப ஒரே பாகம் கதிர்வீச்சுக்கு உட்படுத்தப் படும்போது சிறு சிறு அளவில் உடலில் சேர்ந்த கதிர்வீச்சு அபாயமிக்க பெரிய அளவில் ஒன்று சேர்ந்து புற்றுநோய் அபாயத்தை உண்டு பண்ணலாம்.

எக்ஸ்-ரே தவிர்க்கப்பட வேண்டியதல்ல. பல சமயங்களில் அவசியமாகவும் இருக்கிறது. ஆனால் அவசியமின்றி அடிக்கடி எடுத்துக் கொள்வதுதான் கூடாது.

### மன மகிழ்வுக்கு ஒரு மார்க்கம்

ஆரோக்கியமான குடும்ப வாழ்க்கை மன வலிமைக்கு கை கொடுக்கிறது. மன அழுத்தம் தீர உதவுகிறது.

ஆரோக்கியமான 'செக்ஸ்' மன-உடல் அழுத்தம் நீங்க வைக்கிறது என்று நியூயோர்க் மருத்துவ மையத்தைச் சேர்ந்த டாக்டர் ரீட் மான்கோவிஸ் தெரிவித்துள்ளார்.

ஆரோக்கியமான-ஒழுங்கான செக்ஸ் உறவின்போது இரத்தத்தில் கலக்கும் அட்ரிலைன் (Adrenalin) அளவு குறைகிறது. உடலையும் மனதையும் அமைதிப்படுத்தும் சுகமான உணர்வைத் தரக்கூடிய என்டார்ஃபின்ஸ் என்னும்



ஹார்மோன்கள் இரத்தத்தில் கலந்து உடல் முழுவதும் பரவுகின்றன. நமது நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகமாகிறது. இரத்த ஓட்டம் சீராகிறது. உணர்ச்சிகளை சமநிலைப்படுத்துகிறது.

ஆரோக்கியமான செக்ஸ் வாழ்க்கை என்னும்போது உடல் இணைவு மட்டுமல்ல ஒருவருடன் ஒருவர் காட்டும் ப்ரிவும்-நெருக்கவும் அதில் அடக்கம் என்கிறார் டாக்டர் மான்கோவிஸ்.

### இது எப்படி சாத்தியம்?

அலாரம் வைத்துவிட்டுப் படுத்தால் அதிகாலையில் அது அடிப்பதற்குள்ளாகவே விழித்துக் கொள்ள முடிகிறது. இது எப்படி?



உங்கள் உடம்பின் சூடு இரவில் குறைந்து கொண்டே இருக்கும். விடிகிற நேரம் மீண்டும் வெப்பம் உடலில் ஏற ஆரம்பிக்கும். உடனே உங்களுக்கு விழிப்பு வந்துவிடும். ஆறுமணிக்கு எழ வேண்டும் என்ற நினைப்புடன் அலாரம் வைத்திருந்தால் இன்னும் சிறிது நேரத்தில் எழ வேண்டும் என்கிற கவனம் நீங்கள் எழ விரும்பாத போதும் மனதில் இருந்துகொண்டே இருக்கும். அதுதவிர உங்கள் பக்கத்தில் இருக்கும் கடிகாரம் டிக்-டிக் என்று கொடுக்கும் சப்தமும் காதுக்குள் ஒலிக்கத் தொடங்கும். இது மாதிரியான நேரத்தில் நீங்கள் முழுமையான உறக்கத்தில் இல்லை. எனவேதான் அலாரம் அடிக்க முன்னரோ அல்லது அலாரம் அடிக்கும் போதோ விருட்டென்று எழுந்து கொள்கிறீர்கள்.

(கும்பகர்ணர்களுக்கு இது பொருந்தாது)

# அறிவில் குறைந்தோருக்கு ஆயுள் கெட்டி!



அறிவாற்றலில் மிகுந்தவர்கள் நீண்டநாட்கள் உயிர்வாழ்வார்கள் என்ற திடமான நம்பிக்கையுடன் ஆராய்ச்சியிலீடுபட்ட விஞ்ஞானிகள், தங்கள் எண்ணம் தப்பானது-எதிர் மாறானது என்பதனைக் கண்டு திகைத்தார்கள்.

அறிவாளிகளைவிட அறிவில் குறைந்தவர்களே அதிக காலம் உயிர் வாழக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்கள் என்பதனை அறிந்துள்ளனர்.

நோர்வே நாட்டிலுள்ள துரோண்டியம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், ஸ்கண்டநேவிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் 6 ஆண்டுகளாக நடத்திய ஆய்வின் பயனாக இம் முடிவுக்கு வந்துள்ளனர். 2,600 பேரை வைத்தே இவ்விஞ்ஞானிகள் ஆய்வினை நடத்தியுள்ளனர். டாக்டர் ஏர்லிங் டிரிவ்டால் என்பவரும் மற்றும் நான்கு விஞ்ஞானிகளும் இந்த ஆராய்ச்சியிலீடுபட்டனர்.

"நவீன உலகத்தில் வாழும் மனிதன் பலதரப்பட்ட அழுத்தங்களினால் பாதிப்படைகிறான். இதனால் அறிவாளிதான் அறிவாற்றல் குறைந்தவர்களைவிட அதிகமான பாதிப்புக்குள்ளாகின்றான். அறிவாளி சிந்தித்து மூளைக்கு அதிக வேலை கொடுக்கிறான். அறிவில் குறைந்தவனோ தன் மூளைக்கு பழு ஏற்றுவதை விடுத்து உடலுக்கு உழைப்புக் கொடுக்கிறான். ஆனால் வேளைக்கு வேண்டிய உணவினை உட்கொள்ள வேண்டுமே என்ற எண்ணமற்ற அறிவாளி தன் உடலைக் கெடுத்துக்கொள்ளுகிறான்." இவ்வாறு டாக்டர் டிரிவ்டால் கூறுகிறார்.

"இத்தகைய கூற்றினால் மூளைசாலிகளாக இருப்பவர்கள் தாங்கள் விரைவில் உயிரைவிட்டுவிட வேண்டி வருமே என்று கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மாற்றமுண்டு." என்கிறார் அவர். இதற்கு உதாரணமாக அதிக காலம் உயிர்வாழ்ந்த விஞ்ஞானி இயன்ஸ்ரீனை டாக்டர் டிரிவ்டால் உதாரணமாகக் காட்டுகிறார்.

### முதுகுவலி–இடுப்புவலி எப்படி தவிர்க்கலாம்?



கனமான பொருளை தூக்கிச் செல்ல வேண்டுமானால் தரையில் இருந்து அப்பொருளைத் தூக்க பெரும்பாலானோர் முழங்காலை வளைக்காமல் முதுகை வளைத்து கைகளால் பொருளைப் பற்றித் தூக்குகிறார்கள். இது தவறான முறையாகும். முதுகு வளையாமல் காலை மடக்கி, குத்துக்காலிட்டு அமர்வது போன்ற நிலைக்கு வந்துதான் பொருளை எடுக்கவேண்டும்.

# தன்னம்பிக்கை உடையவரா நீங்கள்?



உங்கள் வாழ்க்கைப் பிரச்னைகளை எவ்வளவு நம்பிக்கையுடன் எதிர்கொள்கிறீர்கள் என்பதை அறிய, கொடுக்கப்பட்டுள்ள 15 கேள்விகளுக்கு பதில் சொல்லி மதிப்பெண்கள் போட்டுப் பாருங்கள். உங்கள் பதில் எப்பொழுதும் அல்லது பெரும்பாலும் என்றிருந்தாலும் அதற்கு 5 மதிப்பெண்கள். வழக்கமாக என்பதற்கு 4 மதிப்பெண்கள். சில சமயங்களில் என்றிருந்தால் 3 மதிப்பெண்கள். அபூர்வமாக என்றிருந்தால் 2 மதிப்பெண்கள். கிடையாது என்றிருந்தால் 1 மதிப்பெண்.

1. எதிர்பாராத சூழ்நிலையில் உங்கள் திட்டத்தை மாற்றவேண்டி வருகிறது. அந்த மாறுதலிலும் ஒரு புதிய பலனை அடைய முடியும் என்பதை உங்களால் விரைவாகக் கண்டுபிடிக்க இயலுமா?

1 2 3 4 5

2. உங்களுக்கு அறிமுகமில்லாத ஒரு புதிய மனிதர் உங்களையே பார்த்துக்கொண்டிருக்கிறார். நீங்கள் மிகவும் அழகாக இருப்பதால்தான் அவர்/அவன் அப்படிப் பார்க்கிறார் என்ற முடிவுக்கு வருவீர்களா?

1 2 3 4 5

3. நீங்கள் சந்தித்த மனிதர்களில் பெரும்பாலானவர்களை விரும்புவீர்களா?

1 2 3 4 5

4. வருகின்ற புத்தாண்டை நினைக்கிறீர்கள். அப்பொழுது இந்த ஆண்டைவிட வருகின்ற ஆண்டில் உங்கள் வாழ்க்கை நிலை இன்னும் நன்றாக இருக்குமென்று எண்ணுவதுண்டா?

1 2 3 4 5

5. உங்களைப் பற்றி அல்லது உங்களது செயல்பாடுகளைப் பற்றி ஒருவர் விமர்சனம் செய்கின்றார். பயன்பாடுள்ள விமர்சனத்திற்கும், பயனற்ற விமர்சனத்திற்கும் உள்ள வேறுபாடுகளை அவரிடம் எடுத்துச் சொல்லி-அதை அப்படியே கண்டு கொள்ளாமல் விட்டு விடுவீர்கள்?

1 2 3 4 5

6. நல்ல விஷயங்களைப் புகழ்பவரை தவிர்த்து விடுவீர்களா?

1 2 3 4 5

7. உங்கள் மனைவி அல்லது நல்ல நண்பர்கள் அல்லது காதலியிடம் அடிக்கடி குறை காண்பீர்களா அல்லது அவர்களைப் புகழ்வீர்களா?

1 2 3 4 5

8. 21ம் நூற்றாண்டிலும் மனித இனம் உயிர் வாழும் என்று நம்புகிறீர்களா?

1 2 3 4 5

9. உங்கள் நண்பர் உங்களைக் கைவிடும் பொழுது நீங்கள் ஆச்சரியப் படுவீர்களா?

1 2 3 4 5

10. நீங்கள் மகிழ்ச்சி நிறைந்த மனிதர் என்று நீங்களே எண்ணுவதுண்டா?

1 2 3 4 5

11. நீங்கள் சரியான வேகத்தில் (காரில் அல்லது பைக்கில்) சென்று கொண்டிருக்கிறீர்கள். ஆனால் பொலிஸ்காரர் நீங்கள் வேகமாகச் செல்கிறீர்கள் என்று உங்களைத் தடுத்து நிறுத்துகிறார். நீங்கள் ஆணித்தரமாக அவர் குற்றச்சாட்டை மறுப்பதுடன், தேவையென்றால் உங்கள் நியாயத்தை நிலைநிறுத்த நீதிமன்றம்வரை செல்வீர்களா?

1 2 3 4 5

12. நீங்கள் சொல்லும் ஜோக்குகளில் உங்களுக்கே திருப்தி ஏற்படுவதுண்டா?

1 2 3 4 5

13. உங்கள் உடல் நலத்தைப் பற்றி உங்களுக்கே முழுமையான நம்பிக்கை உள்ளதா?

1 2 3 4 5

14. உங்களுக்கு மிகவும் பிடித்தமான பத்து நபர்களின் பெயர்களை தயார் செய்ததுண்டா?

1 2 3 4 5

15. கடந்த சில மாதங்களைப் பற்றி மீண்டும் நினைத்துப் பார்க்கும் பொழுது, அப்பொழுது தங்களுக்கு ஏற்பட்ட சின்னச் சின்ன வெற்றிகளை எண்ணுவீர்களா?

1 2 3 4 5

**உங்கள் மதிப்பீட்டின் தீர்வு:**

நீங்கள் போட்ட மதிப்பெண்கள் 65 அல்லது அதற்கு மேலிருந்தால், நீங்கள் ஒரு சூப்பர் ஸ்டார். மிகுந்த தன்னம்பிக்கையுடையவர். எதையும் சமாளிப்பீர்கள்.

60–65 எக்ஸலண்ட். நீங்கள் தன்னம்பிக்கையுடையவர்.

55–60 குட். சில சமயங்களில் மட்டும் தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள்.

50–55 பரவாயில்லை. நீங்கள் சரிபாதி நம்பிக்கையும், சரிபாதி அவநம்பிக்கையும் கொண்டவர்கள்.

50க்குக் கீழே- உங்களுக்கு எதிலும் நம்பிக்கை கிடையாது.

# மனைவி இறந்த செய்தி செவியில் விழுந்தது பதறிய கணவனின் ஆவி பிரிந்தது



ஆர்தர்-ஜின்னி திருமண நாளன்று எடுக்கப்பட்ட படம்.

### "என்னிடமிருந்து நீ பிரிக்கப்பட்டது ஏன் என்று எனக்குப் புரியவில்லை"-இறுதிக் கடிதம்-

ஆர்தர் படில்லா- ஜின்னி ஜோன்சன் ஆகிய இருவரும் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள். ஆனால் இருவருமே நரம்புக் கோளாறுகளினால் உண்டாகும் நோயினால் பாதிக்கப்பட்டு நடமாட முடியாதவர்கள். அங்கவீனர்களுக்கான தாபரிப்பு மையத்தில் இவர்கள் 17 வருடங்களுக்கு முன்னர் சந்தித்தனர். காதல் கொண்டனர்.

ஆர்தரைவிட ஜின்னி 17 வயது குறைந்தவள். ஆர்தர் படுத்த படுக்கையாகவே கிடப்பார். அதிகமாக பேசவோ எழுதவோ முடியாது. ஜின்னி மோட்டாரின் துணையுடன் இயங்கும் சக்கர நாற்காலியில் சில இடங்களுக்கு மட்டும் செல்லுவாள். மிகக் குறைவாகவே பேசவும் எழுதவும் கற்றுக் கொண்டாள். இருவருக்குமிடையில் எப்படியோ காதல் ஏற்பட்டு கலியாணமும் முடிந்தது. நூற்றுக் கணக்கான நண்பர்கள் சேர்ந்து திருமணத்தைச் சிறப்பித்தார்கள்.

ஆர்தரின் நோய் கடுமையாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சில நாட்களில் உடல் நிலையில் சற்று முன்னேற்றம் காணப்பட்டது. அடுத்த நாளே அவர் வீடு திரும்பலாம் என்று மருத்துவர்கள் கூறினார்கள்.

அதே காலகட்டத்தில்தான் அந்தப் பேரிடி விழுந்தது. தனது கணவனைப் பார்ப்பதற்காக மருத்துவமனைக்கு மோட்டார் சக்கர நாற்காலியில் வந்து கொண்டிருந்த ஜின்னியை வேகமாக வந்துகொண்டிருந்த ஒரு மோட்டார் வண்டி முட்டி மோதியது. அவள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டாள்.

ஜின்னி மாண்ட செய்தியை ஆர்தரிடம் யாரோ சொல்லிவிட்டனர். அவ்வளவுதான் ஆர்தரின் உடல் நிலமை திடீரென மோசமடைந்தது. சில நாட்களில் ஆர்தரும் உயிர் துறந்தார்.

துரிதமாகப் பேசும் சக்தியற்ற ஆர்தர், தனது மனைவியின் இறுதிக் கிரியைக்குச் செல்ல முடியவில்லை. சிறு சிறு சொற்களாக ஒரு நண்பர் மூலம் எழுத வைத்து ஓர் அஞ்சலி ஓலையினை அனுப்பிவைத்தார். இடுகாட்டில் திரண்டிருந்த நண்பர்கள், உறவினர் முன்னிலையில் அவ்வோலை வாசிக்கப்பட்டது.

"என்னிடமிருந்து நீ பிரிக்கப்பட்டது ஏன் என்று எனக்குப்புரியவில்லை. இருப்பினும் இறைவனின் அருகே என்னை எதிர்பார்த்துக் காத்திருப்பாய் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நான் தூங்கும்போது, எனக்காக நீ நடனமாடிக்கொண்டிருப்பதாக நான் கனவு காண்கிறேன். நான் உன்னிடம் விரைவில் வருவேன். என் முன்னால் நடனமாட ஆயத்தமாகக் காத்துக் கொண்டிரு." இவ்வாறு அந்த அஞ்சலி ஓலையில் காணப்பட்டது. இதனை வாசிக்கக் கேட்ட அனைவரும் கண்ணீர் சொரிந்தனர்.

ஆர்தர் இறக்கும்போது அவருக்கு வயது 50. ஜின்னிக்கு 33 மட்டுமே. ஆர்தர் இறுதி மூச்சு விடுவதற்கு முன்னரும் தன்னை ஜின்னி விரைவாக வருமாறு அழைப்பதாக தன் நண்பரிடம் மிகவும் சிரமத்துடன் கூறினாராம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

நெஞ்சம் மறப்பதில்லை-அது
நினைவை இழப்பதில்லை-நான்
காத்திருந்தேன்-உன்னைப்
பார்த்திருந்தேன்
கண்களும் மூடவில்லை-என்
கண்களும் மூடவில்லை

**19**

# கொலை விழும் நேரம்

நிர்மலா ஒன்றும் புரியாமல் குழம்பிப்போய் நின்றாள்.

எல்லாமே ஒரு நாடகம்போலத் தெரிந்தது. கனவுபோல என்றும் சொல்லலாம்.

'யாரை நம்புவது? புரியவில்லை. இப்போது பசுபதியும்-ஜவாஹரும் பேசிக்கொள்வது. ஒருவரை ஒருவர் நம்ப மறுத்த மோத முயல்வது எல்லாம் உண்மைதானா?

அல்லது அல்லது இதுவும் இவர்கள் நாடகத்தில் ஒரு காட்சிதானா?

நிர்மலாவுக்கு [illegible] இருக்கிறதா என்று தெரியவில்லை.

ஜவாஹருக்கும் பசுபதிக்கும் இடையிலே உள்ள தொடர்பு புரியவில்லை.

'தொடர்புண்டு என்பதை ஜவாஹர் ஏன் என்னிடம் மறைத்தான்.

'திட்டமிட்டே மறைத்தானா? அல்லது நானும் கேட்கவில்லை; ஆகவே அதனால் சொல்லவில்லையா?'

நிர்மலா ஒரு முடிவுக்கு வர முடியாமல் தவித்தாள்.

"நிர்மலாவின் தந்தையை கொன்றது யார்" என்று ஜவாஹர் பசுபதியை நாவால் அதட்டி பிஸ்டல் உயர்த்தி மிரட்ட நிர்மலா பசுபதி சொல்லப் போவதைக் கேட்க கவனம் திருப்பினாள்.

பிஸ்டலுக்குப் பயந்து பதில் சொல்ல வாய் திறந்த பசுபதி வார்த்தைகளை உச்சரிக்கத் தயங்கினார்.

பசுபதி தயங்கவும் ஜவாஹர் மேலும் சீறினான்.

"பசுபதி எனக்கொன்றும் கொலையாளியை அறியும் அவசியம் கிடையாது. அதனால் கொலையாளி யார் என்று அறிந்துவிட்டுத்தான் உன்னை கொல்லவேண்டும் என்று தேவையும் கிடையாது. சொல்லமாட்டாய்..."

அவன் முடிக்காமல் நிறுத்த பசுபதி அவசரமாய் கேட்டார்.

"சொல்லவா..?"

"தப்பித் தொலை என்று விட்டு விடுவேன். ஜனத்தொகையில் ஒரு தலை குறையாமல் இருக்கும். சொல்லவில்லை என்று வை. திமிர் காட்டுகிறாய் என்று என் பிஸ்டலுக்கு கோபம் வரும். ஜனத்தொகையில் ஒரு உயிர் புஸ் என்று போகும்- ரயரிலை காற்றுப் போகும் பார் - அப்படி."

உதடு குவித்து காற்றுப் போனது போல் சத்தம் செய்து காட்டிச் சிரித்தான்.

பசுபதியின் உடல் காற்றில் ஆடும் மரம்போல பயத்தில் ஆடியது.

"சொ...சொல்கிறேன்."

குரலிலும் நடுக்கம்வர,

ஜவாஹர் அது கவனித்து கேலி செய்தான்.

"சொ...சொ..சொல்... அட... சொல்லித் தொலையப்பா."

"ஒரு ஒரு நிபந்தனை!"

"நாசமாய் போச்சப் போ. இந்த நேரத்தில் போயும் நிபந்தனையா? கட்டையில் போகும் போது வியாபாரப் புத்தி போகாது பசுபதி உனக்கு!"

ஜவாஹரின் கேலியான பேச்சு பசுபதிக்கு இரசிப்பைக் கொடுக்கவில்லை. உள்ளே கொதிப்பு வந்தது.

'எனக்கு முன்னால் கைகட்டி வாய் பொத்தி நின்றவன் கட்டளையிடுகிறான். சிரிப்பதா அழுவதா?' பசுபதி கவலை மிக அதிகப்பட்டு விதியை நொந்து கொண்டார்.

ஜவாஹர் முரடன். முரடன் மட்டுமல்ல பிடிவாதமான சுபாவம் உடைய சடன் சடன் யோசிக்க மாட்டான். பின் விளைவு பற்றி முன் அறிய நினைக்கமாட்டான்.

'புலிக் கூண்டுக்குள் சிக்கிய புறாமாதிரி ஜவாஹரிடம் மாட்டிக்கொண்டாயிற்று. தப்புவது முடியாத காரியம்.

'ஆனால் மிகப்பெரிய தன்மான நஷ்டம். எனக்குள்ளேயே நின்று கண்ணுக்குள் விரலைவைத்து ஆட்டும் துணிச்சல். இது வெளியே தெரிந்தால் தலைகாட்ட முடியாது.

'பாதாள உலகில் பலத்துக்குத்தான் மரியாதை. அந்தரத்தில் எழுந்து கரண மடித்து எதிரியைத் தாக்க பாதாள உலகம் கைதட்டும். மரியாதையுடன் நடக்கும். இவனோடு மோதல் வேண்டாம் என்று விலகியே நிற்கும். ஆனால் ஒருமுறை 'பாலன்ஸ்' தவறி நிலத்தில் கால் ஊன்ற முடியாமல் தடுமாறினால் அருகே வந்து, தோளில் தட்டி "வசதி எப்படி?" என்று கேலியாக விசாரிப்பார்கள். முறைக்க முகத்தில் குத்துவார்கள்.

'எனவே-பலம்தான் தெய்வம். பணம் தான் ஆயுதம். தந்திரம்தான் கவசம்.' பசுபதியிடம் இன்னமும் பணம் இருக்கிறது. ஆனால் பலமும் தந்திரமும் ஜவாஹர் முன் பறிகொடுத்து தலை குனிந்து நிற்கவேண்டியதாகிவிட்டது.

எப்படியோ இப்போது தப்பிக்கொள்ள வேண்டும். இழந்ததை எப்படிப் பெறுவது என்று பின்னர் யோசிக்கலாம்."

இராமன் முன் இலங்கை அதிபதி இராவணன் வெறுங்கையுடன், ரன் குவிக்காமல் விக்கெட் இழந்த டெண்டுல்கர் மாதிரி நின்றதைவிட இதொன்றும் பெரிய வெட்கமில்லை.

பசுபதி நிதானத்திற்கு வந்தார். ஜவாஹருக்கு விரோதமாக பேசி அவன் வெறுப்பை சம்பாதிக்காமல் சமயோசிதமாக நடக்க நினைத்தார். குரலில் பணிவு கொண்டுவந்தார்.

"ஜவா நிபந்தனை என்று நீ கோபப் பட்டால் என் வேண்டுகோள் என்று எடுத்துக்கொள்."

"அட இது நன்றாகத்தான் இருக்கிறது. சரி பசுபதி உன் வேண்டுகோளை எடுத்துவிடு."

"நன்றி ஜவாஹர். ஒரு 'சிகரெட்' கொடு ஜவா."

"இதைப் பாரடா. பூ..இதுதான் உன் புண்ணிய வேண்டுகோளா?"

"இல்லை ஜவா. ஒரே டென்ஷன். அதுதான்."

ஜவாஹர் பசுபதியை மேலிருந்து கீழ்வரை ஒரு பார்வை பார்த்தான். நூறுவீதமான சந்தேகம் அப்பட்டமாய் தெரிந்த பார்வை.

"இங்கே பார் பசுபதி. இப்போது சிகரெட் கேட்பாய். பிறகு பியர் கேட்பாய். இப்படியே நேரத்தை நீட்டி தப்பலாம் என்று சத்தியமாக கனவு காணாதே. ஏதாவது இடையூறுகள் வருவதாகத் தெரிந்தால் ஏன் வம்பை? ஒரே ஒரு சூடு. நிச்சயம் சாவு. நான் ஓடிவிடுவேன். இந்தா பிடி."

பிஸ்டலை இடது கரத்தில் பிடித்தபடி வலதுகரத்தால் 'சிகரெட்' பக்கற் எடுத்து பசுபதியிடம் நீட்ட அவர் அதில் ஒன்றை எடுத்தார். பக்கற் மூடி உள்ளே வைத்து, லைற்றர் எடுத்து 'கிளிச்' செய்ய அதில், தீ மூட்டிக்கொண்டார்.

லைற்றரை பொக்கற்றுக்குள் போட்டபடி,

"சரி-இப்போது சொல்லு. யார் கொன்றது?" என்று கேட்டான் ஜவா.

புகையை இழுத்து கண்கள் மூடி அப்படியே புகையை வெளியேற்றிவிட்டு, கண் திறந்து தன் எதிரே நிற்கும் ஜவாஹரைப் பார்த்துவிட்டு நிர்மலாவை நோக்கினார் பசுபதி.

நிர்மலா, பசுபதி சொல்லப்போவதை கேட்கும் அவசரமும், பதட்டமும் முகத்தில் எழுதி ஒட்டியதுபோல, பதட்ட மூச்சில் இரு முயல்கள் அசைவதுபோல இளமைகள் எழுந்து தணிய அவரையே கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

பசுபதி உள்ளே இழுத்த சிகரெட் புகை வெளியேறிக்கொண்டிருக்க, அதே நேரத்தில் அந்த பெயரையும் உச்சரித்தார்.

"'பிரியா'. பிரியாதான் கொன்றாள். இதை நீ வெளியே சொல்லக்கூடாது. அதுதான் வேண்டுகோள்."

ஜவாஹரும் நிர்மலாவும் ஒரே சமயத்தில் அதிர்ச்சியால் தாக்கப்பட, பசுபதியின் உதடுகளும், மூக்குத் துவாரங்களும் சிகரெட் புகையை முற்றிலும் வெளியேற்றி முடித்தன.

அதிர்ச்சியில் இருந்து முதலில் விடுபட்டது ஜவாஹர்தான்.

"பசுபதி நீ சொல்வது..?"



"பொய் சொன்னால் நீ விடமாட்டாய். தெரியும் ஜவா. நான் சொன்னது சத்தியம். என் மகள்தான் சொன்னாள். அதனால்தான் வேண்டுகோளையும் இணைப்பாக வெளியிட்டிருக்கிறேன்."

"ஆதாரம்?"

"எதற்கு ஜவா? கொலைக்கா?"

"வேறெதற்கு?"

"இருக்கிறது வா. நீயும் வா நிம்மி!"

நிர்மலா தயங்கி ஜவாஹரைப் பார்த்தாள்.

"பயப்படாதே நிம்மி. நான் இருக்கிறேன். இந்த வயோவை துள்ளவிட மாட்டேன். வயோ என்றால் வயோதிபர்."

ஜவாஹர் சொல்லிச் சிரித்தான். ஆனால் நிர்மலா சிரிக்கவில்லை.

அந்த அறையின் வலது பக்க மூலையில் இருந்த கதவு திறந்து பசுபதி முன்னால் போக, பிஸ்டலை அவர் முதுகில் உரசியபடி ஜவாஹர், ஜவாஹரின் பின்னால் நிர்மலா.

உள்ளே போக கதவு தானாகப் பூட்டிக்கொண்டது.

ஜவாஹர் இப்போது பிஸ்டலை இடுப்பில் செருகுவதை கவனித்தாள் நிர்மலா.

பசுபதி அந்த அறையின் நடுவே இருந்த வட்ட வடிவமான மேசையை நோக்கிப் போனார். மேசையின் மேலே ஒரு தொலைபேசி. அதன் அருகே சாம்பல்நிறத்தில் ஒரு 'இண்டர்கொம்' இருந்தது.

பசுபதி அந்த 'இண்டர்கொம்' எடுத்தார்.

'ரோய்தானே?'

என்று கேட்டார். மறுமுனை பதில் சொல்ல,

"ரோய், இதுவரை நாம் ஒரு நல்ல நாடகம் நடித்து முடித்திருக்கிறோம். அதாவது ஜவாஹரும் நானும். அதை கட்டணம் இல்லாமல் ஜன்னல் வழியாக இரசித்த குலாம்ஷா வெளியே போக வருவான். கவனிக்காதே. அவன் வெளியே போவது மிகமிக முக்கியம். ஓ.கே"

ரிசீவர் வைத்தார். நிர்மலாவைப் பார்த்தார்.

அவள் மயக்கமாகி தடாலடியாக நிலத்தில் விழுந்தாள்.

அவள் விழுந்ததையும் அலட்சியம் செய்தபடி, ஜவாஹர் பசுபதியிடம்,

"பொஸ் உடம்பெங்கும் உங்களுக்கு கண். குலாம்ஷா என்ற கிரைம்புலியைக்கூட விரல்சூப்பும் குழந்தையை ஏமாற்றுவது போல..."

அதுவரை அவன் சொன்னதே போதும் என்பதுபோல் பசுபதி கை உயர்த்தி தடுத்தார். அவன் சொன்னது திருப்தியாய் உணர்ந்து நன்றி சொல்வது மாதிரி புன்னகைத்தார்.

## தருவது — ரசிகன்

ஆனால், பசுபதியின் கணிப்பை பொய்யாக்கிக் கொண்டிருந்தார் குலாம்ஷா.

வட்ட மேசை மீது அமர்ந்திருந்த இண்டர்கொம் அழைத்தது. தொட்டெடுத்து காதோடு அணைத்தார்.

மறுமுனையில் இருந்து ரோய்தான் பேசினான்.

"என்ன ரோய்?"

"குலாம்ஷா இன்னமும் உள்ளேதான் இருக்கவேண்டும்."

"இன்னமும் உள்ளே இருந்து என்ன செய்..ரோய் நீ ஒன்றும் அலட்சியமாக இருக்கவில்லையே!"

"இல்லை பொஸ். சத்தியமாக இல்லை!"

ரிசீவரை பொத்தென்று போட்டு விட்டு ஜவாஹரைப் பார்க்க, விபரீதம் உணர்ந்தவன்போல் அவனும் பரபரப்பு முகத்தில் காட்டி,

"என்ன பிரச்சனை பொஸ்?"

"புலி வெளியே போகவில்லை."

"குலாம்ஷாதானே?"

"யா!" யோசனையாய் தாடையைச் சொறிந்தபடி தற்செயலாய் தன் நேர் எதிரே மேலே பார்த்தவர் திகைப்பால் "ஆ..." என்றார் வாய் திறந்து.

அங்கே ஜன்னல் இருந்த இடத்தில் வெறும் வெளிதான் தெரிந்தது. ஜன்னல் காணாமல் போயிருந்தது.

"ஜவா, குயிக். இங்கே..இங்கேதான் கு..குலாம்ஷா ஒளி..ஒளித்து.."

பயத்தில் வார்த்தைகள் தடம்புரள, அவர்கள் பின்னால் இருந்து அந்த குரல் வந்தது.

"பசுபதி கஷ்டப்படாதே. உனக்கு ஏன் சிரமம்? இதோ நானே ஆஜராகி விட்டேன்."

இருவரும் அதிர்ந்து திரும்ப அங்கே குலாம்ஷா.

குலாம்ஷாவின் கையில் எதுவுமில்லை.

ஜவாஹருக்கு திடீர் துணிச்சல் வந்துவிட்டது.

■

வினோ சிரிக்க காயத்திரியிடம் மெல்லிய கோடாய் பயம் வந்தது.

'சேச்சே..வினோ நல்லவன்' என்று தனக்குள் சமாதானம் சொல்லிக் கொண்டாள்.

"வினோ ஏன் சிரித்தாய்?"

வினோ சடுதியாய் அவளைத் திரும்பிப் பார்த்துவிட்டு,

"ஏன் நன்றாக இல்லையா?"

என்று கேட்டான்.

"யார் சொன்னது? இப்படி நீ சிரித்துக்கொண்டிருந்தால் நான் என் நிருபர் தொழிலையே ராஜினாமா செய்து விடுவேன்."

"ஏன்?"

என்றான் தெருவையே பார்த்துக் கொண்டு ரைவிங் செய்தபடி.

'களுக்' ஒலிவர சிரித்துவிட்டு காயத்திரி சொன்னாள்,

"நீ சிரித்துக்கொண்டே இருந்தால் எனக்குப் பார்த்துக்கொண்டேயிருக்க வேண்டும்போல இருக்கும். வேலை முக்கியமா? விலையில்லா உன் சிரிப்பு முக்கியமா என்று கேட்டால் நான் உடனே சிரிப்பு என்றுவிடுவேன். சோ,வேலைக்கு முழுக்கு!"

வினோ சிரித்தான். ரைவிங் சீற்றிலிருந்து முன்னே குனிந்து சிரித்து திரும்பி அவளைப் பார்த்தான்.

"உண்மையாகவே நாம் இப்போ எங்கே போகிறோம் என்று தெரிந்தால் நீ சிரிக்கவே மாட்டாய் காயத்திரி."

அவன் அசரவில்லை. தனது இடது புறம் திரும்பி, பள்ளிச் சீருடையில் பஸ்சுக்காக கூட்டமாய் காத்து நிற்கும் மாணவப் பட்டாளத்தை பார்த்தபடி பதில் சொன்னாள்,

"வினோ உனக்கொன்று தெரியுமா?"

"ஒன்றும் தெரியாது, ரெண்டும் தெரியாது. நீயே சொல்லு."

"தாங்யூ. வினோ நீ நரகத்துக்கே அழைத்தாலும், நன்றாகக் கவனி வினோ நகரத்திற்கு அல்ல நரகத்திற்கு....."

"புரிகிறது நரகம் என்று மனதில் எழுதி அண்டர்லைன் பண்ணி விட்டேன் மேலே சொல்லு."

"நரகத்திற்கு அழைத்தாலும் வருவேன் நான்."

திடீரென்று காரை ரோட்டின் ஓரமாக்கி, நிறுத்தி, காயத்திரியை திரும்பி கூர்மையாக பார்த்துக்கொண்டே,

"இறங்கு. இப்போது செல்லும் இடம் உனக்கு நரகம். எனக்கு எனக்கு சொர்க்கம்."

என்றான் கதவு திறந்து இறங்கியபடி.

■

டி.ஐ.ஜி.டென்சில் நிர்மலாவின் டயறியில் இருந்து விழுந்த படம் கரத்தில் எடுத்து திகைத்து யோசித்தார்.

இது வினோதராஜ்! பிரபல பாடகன்.

'அப்படியானால் இவன்தான் நிர்மலாவால் வியக்கப்பட்டவனா? இரசிக்கப்பட்டவனா? முழுமையாக அறியப்படவேண்டியவன் என்று குறிக்கப்பட்டவனா?'

டென்சில் யோசித்தார்.

டயறிக்குள் மீண்டும் படம் செருகி, டயறியை தன் காற்சட்டைப் பையில் வைத்துக்கொண்டார்.

அறைவிட்டு வெளியே செல்ல நினைத்தவரை தடுப்பதுபோல பிணமாகக் கிடந்த திருமதி ஹரிகரனின் தலைப்புறத்தில் இருந்து ஏதோ மின்னிக் கொண்டிருந்தது.

'சிறு துரும்பும் உதவும் - மின்னும். அது இந்த வழக்கில் ஏன் உதவக்கூடாது. பார்த்துவிடலாம்.'

மின்னிய பொருள் நோக்கி டி.ஐ.ஜி.டென்சில் கால் எடுத்து வைத்தார்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர்



பெயர்: சி. புகேந்திரன்
வயது: 17
முகவரி: 11/1, ரொசாரி றோட், நீர்கொழும்பு.
பொழுதுபோக்கு: நண்பர்கள் தொடர்பு, வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: எம்.எல்.எம். ஹஸன்னூர் கோட்டார்
வயது: 28
முகவரி: 'குமுஸ்து விழா', 15, சென்றல் வீதி, தர்ஹா நகர்.
பொழுதுபோக்கு: ஜோசியம், சிலம்பம் மற்றும் வழமையான பொழுதுபோக்குகள்.



பெயர்: தம்பிராசா சுசாந்தி
வயது: 17
முகவரி: சரஸ்வதி வித்தியாலய வீதி, தம்பிலுவில்-01.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், ரி.வி. பார்த்தல்.



பெயர்: பாத்திமா கஸ்லா
வயது: 19
முகவரி: 51/4, பிரின்ஸஸ் கேட், கொழும்பு-12.
பொ.போக்கு: நடிகர்கள், கிரிக்கெட் வீரர்களின் புகைப்படம் சேகரித்தல், பேனா நட்பு, படம் பார்த்தல், கைப்பணிப் பொருட்கள் செய்தல்.



பெயர்: எஸ்.எம். டெனி
முகவரி: LEON HARD STR-11
8006, ZURICH,
SWITZERLAND.
பொ.போ: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.



பெயர்: ஐ.ஏ. முனாப்
முகவரி: SAUDI OGER (LTD)
P.O.BOX-8293,
ROOM NO: F 30,
RIYADH 11482, K.S.A.
பொ.போ: வானொலி, பத்திரிகை, நாவல்.

பெயர்: ஆர். ஜெகன்
முகவரி: 103, WEST LODGE AVE, APT 115
TORONTO-M 6 K 2 S T 7
ONTARIO, CANADA.
பொ.போக்கு: வழமையான பொழுதுபோக்கு.

பெயர்: ஏ.வி.ஏ அஸீஸ்.
வயது: 20
முகவரி: 959, கடற்கரை வீதி, புதிய காத்தான்குடி-03.
பொழுதுபோக்கு: கவிதை எழுதுதல், பத்திரிகை வாசித்தல்.

பெயர்: கே. கிருஷ்ணமூர்த்தி
வயது: 18
முகவரி: 119 1/8, குமார வீதி, கொழும்பு-11.
பொ.போ: பத்திரிகை, கதைப்புத்தகம் வாசித்தல், கரம், கிரிக்கெட்.

பெயர்: எம். ஆதம்பாவா
வயது: 19
முகவரி: குருந்துவத்தை வீதி, பதுளை.
பொ.போ: வானொலி கேட்டல், பத்திரிகை, தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர்: ஜி. நாதன் குமார்
வயது: 26
முகவரி: மாதம்பை சில்வ டவுன், மாதம்பை
பொ.போ: பேனா நட்பு, வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: வை. ஜெம்ஸாட்
வயது: 15
முகவரி: மத்திய கல்லூரி, கெகுணகொல்ல, குருநாகல்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.

அரங்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# சோகச் சுவடுகள்

அமீர்டீன் கே. முகம்மட் - திருகோணமலை

டிங்......டிங்.......டிங்....., படுக்கையில் புரண்டுகொண்டிருந்த நான் தபால்காரனின் சைக்கிள் மணியோசை கேட்டு வெளியே ஓடினேன். "ஸார் உங்களுக்கு ரெலிகிராம்" கூறியபடியே கையிலிருந்த தந்தியை நீட்டினான். ரெலிகிராம் என்றதும் மனதுக்குள் ஒருவகை அதிர்ச்சி! சமாளித்துக்கொண்டே பிரித்துப் படித்தேன். "தேர்தலுக்கு இன்னும் இரண்டு வாரம் உண்டு. உடன் புறப்பட்டு வரவும் - சமீம்." மனம் சம்மதித்தாலும்



**"காதலியை நினைத்திருந்தால் கல்லறையில் சுகமிருக்கும். பாதியிலே கதை முடிந்தால்......"**

சம்மதிக்காவிட்டாலும் என் பள்ளித்தோழனின் அன்புக் கட்டளையை தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்தில் மீண்டும் எனது ஊர் மண்ணை எனது கால்கள் மி(ம்)தித்தன. புறக்கோட்டையிலிருந்து புறப்பட்ட 'இன்ரசிற்றி' கிண்ணியாத் துறையடியை அடைந்த போது பிற்பகல் 3 மணிக்கான படகுப் பாதை புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தது.

கிண்ணியாவின் மறுகரையை அடைந்த போது எனது வருகையை வரவேற்பது திக்குகள் தோறும் சமீமின் கட்சியை ஆதரிக்கும் நிறக்கொடிகளும், சருகைகளும் கையசைத்துக் கொண்டிருந்தன.

எப்படியோ எனது வருகையை அறிந்து சமீம் அனுப்பிவைத்திருந்த வெள்ளை நிற கார் காத்துக்கொண்டிருந்தது. துறையடிவீதி சலாம் மாஸ்டரின் வீட்டைத் தாண்டி ஜபார் சந்தியால் திரும்பி அண்ணல் வீதியியைக் கடந்து கொண்டிருக்கையில் யாரோ கையில் சிறு குழந்தையுடன் இடைமறித்து, "அட நிஸொஸ் மச்சானா! இப்பதான் வர்ரீங்க..." "ஓ... மன்சூர் மச்சானா இப்பதான் வாரன்.... இது யாரு கையில...." "என்ர பேரன்!" "....உங்களுக்கு பேரன்கூட இருக்குதா.....?" "இருக்காதா பின்ன? பதினெட்டு வயசிலேயே கலியாணம் செய்தவராச்சே..." கூறிக்கொண்டே புன்னை குழி மணலையும் தாண்டி ஹிஜ்ரா வீதியிலிருக்கும் சமீமின் வீட்டை அடைந்த போது மாலை 5.30 மணி.

"சமீம்... தேர்தல் பிரசாரங்கள் எப்புடிப் போவுது? மத்தக் கட்சிகள்ட நிலைப்பாடு எப்படி? எதிரியின் பலஹீனம் தான் நமக்குப் பலம். அதால அவங்கட கட்சிக்கு ஆதரவு இருக்கிற பக்கத்தில்தான் நாங்க கூடுதலான பிரச்சார நடவடிக்கையில் ஈடுபடணும். நம்மல எதித்து கேக்கிற 'சியாத்' குழுவுக்கு கூடுதலான ஆதரவு இருக்கிற இடம் எதுண்ணு சொல்லுங்க. இரவைக்கே அங்க போய் வேலை செய்வோம். இன்னும் ரெண்டு கிழமதான் இருக்கு."

"இல்ல மிஸ்டர் நிஸொஸ்! பெரியாத்து முனை, ஆலங்கேணி, சமாவச்சதீவு, ஊத்தடி.... இங்க எல்லாம் அவன்ர குடும்பம் இருக்கு. என்டாலும் நம்மட ஆக்கள் அடிக்கடி கூட்டம் போட்டு ஓரளவு வாக்குகளைத் திருப்பிட்டாங்க. ஆனா இந்த கட்டையாறு பகுதிதான் கொஞ்சம் கஷ்டமா இருக்கு. ஏனென்டா சியாத்துட 'வைப்'ட முழுக் குடும்பமும் அங்கதானே இருக்கு."

'கட்டையாறு' என்றதும் எனது ஞாபக வாசனை என்னை வதைக்க ஆரம்பித்தது. மனதுக்குள் தோன்றிய பூகம்பத்தை வெளிக்காட்டாமல், "சரி கட்டையாறுதானே.... நம்ம நாளைக்கே ஒரு மாபெரும் பிரச்சாரக் கூட்டத்த அங்க போடுவம்" என்று சமீமின் பேச்சுக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு அருகிலிருந்த தேனீரைக் கையிலெடுத்தேன்.

மனக் கட்டுப்பாட்டையும் உடைத்துக் கொண்டு என்னுடைய சிந்தனைக் குருவி உன்னுடைய வீடுநோக்கி சிறகடிக்கத் தொடங்கியது.

கட்டிலில் சாய்ந்த என்னை ஏனோ நித்திராதேவி அணைத்துக்கொள்ள மறுத்தாள்.

"நிஹாரா.... என் இளமைக்குத் தீ மூட்டி உணர்வுகளில் ஊஞ்சலாடியவளே! அந்த வகுப்பறை நாட்கள் உனக்கு ஞாபகமிருக்கிறதா? நான் ஒரு இடம்பெயர்ந்த ஆசிரியனாகத்தான் (தற்காலிக இடமாற்றத்தில்) உனது பாடசாலைக்கு வந்தேன்.

என்னுடைய இளமைக்கும் துடிப்பான பருவத்துக்கும் முறுக்கேற்றியவள் நீதான்.... நீயேதான்!

ஆரம்பத்தில் உன் காதலை நான் நிராகரித்தேன். எனக்கு மட்டும் தெரியும் படியாக நீ வகுப்பறையில் அழுதாய். உன் தோழிகள் காரணம் கேட்டார்கள். கற்பனையில் சில காரணங்களை சிருஷ்டித்து அவர்களை எல்லாம் ஏமாற்றினாய். 'டியூசன் கிளாஸ்' முடிந்ததும் அடிக்கடி தனியாகச் சந்திக்கத் தொடங்கினாய். ஆரம்பத்தில் தயங்கினாலும் நீயாகவே ஆரம்பித்தாய்.



"ஸார் என்ன காரணத்துக்காக என்ன வெறுக்கிறீங்க? எனக்கிட்ட அழகில்லையா, குணமில்லையா....? பணமில்லையா? இலக்கியத்தப் புரிஞ்சிகொள்ர இரசனைதான் இல்லையா? " கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாய்!..

"எல்லாமே இருக்கு நிஹாரா ஆனா...." "என்ன ஆனா.....? தயங்காம சொல்லுங்க" கெஞ்சினாய்.

"நீ எனக்கு மாணவி இல்லயா! அதனால தான் வெறுக்கிறன். இப்படியாவது சொல்லி உன்னைச் சமாளிக்க நினைத்தேன். ஆனால் நீயோ....."

"இல்லை நீங்கள் எதையோ மறைச்சு மழுப்பிறீங்க."

உன்னை எந்த வகையிலும் சமாளிக்க முடியாததை உணர்ந்த நான். உள்ளக் கதவுகளை மெல்லத் திறந்து சில உண்மைகளை வெளியிட முன்வந்தேன்.

"நிஹாரா! உங்களுக்கு ஏதாச்சும் என்னைப் பத்தி தெரியுமா? இல்லை தெரியாது. அப்ப ஏன் என்ன விரும்புறீங்க?"

"உங்கட குணம், நீங்க பழகும் பண்பு, உங்கட இலக்கிய இரசனை எல்லாமே என்ன ரொம்பவும் கவர்ந்திடுச்சி. அதனால தான் விரும்புறன்."

"வெரி சொறி நிஹாரா. எண்ட வாழ்க்கையின் ஒருபக்கம் தான் நீங்க நினைக்கிறமாதிரி வெளிச்சமா இருக்கு. மறுபக்கம் ரொம்ப இருட்டு." கையிலிருந்த கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்தபடி கேட்டாய்,

"எதுவா இருந்தாலும் சொல்லுங்க சார்!"

"எனக்கு வாப்பா இல்லை.. மூன்று சகோதரிகள். உம்மாவுக்கும் வயசாகிட்டுப் போவுது. கடைசித் தம்பிக்கு பத்து வயது. எங்களுக்குண்ணு சொல்லிக் கொள்ள சொந்த பந்தமோ சொத்து சுகமோ கிடையாது. இருந்த ஒரே ஒரு வீடும் போன வருஷம் ஏற்பட்ட கலவரத்தில . எரிந்துபோனதால் நாங்க இங்க வாடகை வீட்டுல குடியிருக்கோம். இந்த சகோதரிகளுக்கும் தம்பிக்கும் உம்மாவுக்கும் இருக்கிற ஒரேயொரு உயிர்நாடி நான் மட்டும்தான். அதனால் 'காதல்' என்ற வார்த்தையக் கூட உச்சரிக்க தகுதியில்லாதவனாக நான் இருக்கேன். எனவே உங்க தகுதிக்கும் வசதிக்கும் பொருந்துறமாதிரி பார்த்து முடிவு பண்ணுங்க."

கூறிக்கொண்டே உன் முகத்தை நிமிர்ந்து பார்த்தேன். இமைத்திரையுடைத்து வெளியேறிய நீர்த் திவலைகள் என்னிடம் ஆறுதல் தேடுவதுபோல் அசைந்தன. நீ பேச ஆரம்பித்தாய்-

"இதுக்கு தானே நீங்க கவலைப்படுறீங்க? நோ புறப்ளம்! உங்க பிரச்சனை எல்லாம் முடியிற வரைக்கும் நான் காத்துக் கிட்டிருப்பேன்"

"இது நடைமுறைக்கு சாத்தியப்படுமா?"

"நிச்சயமா சாத்தியப்படும் ஸார்!" உன் வார்த்தைகளால் நான் நம்பிக்கையின் மிக ஆழத்துக்கு சென்று திரும்பினேன்.

அன்று முதல் காதலுக்கு நானும், எனக்கு காதலும் அடிமையானோம்.

காலச் சக்கரத்தின் சுழற்சியில் ஆறுமாதங்கள் உருண்டோடின. நிலமைகள் ஓரளவுக்கு வழமைக்குத் திரும்பியதால் மீண்டும் என் சொந்தப் பாடசாலைக்கு (கொழும்பு) இடமாற்றம் பெற்றுச் சென்றேன்.

"நீங்க எங்க போனாலும் உங்க நினைவுகள் இங்கதான் குடியிருக்கும்."

நீ கடைசியாக கூறிய வார்த்தைகளைத் துடுப்பாக்கி காதல் படகை செலுத்திக் கொண்டிருந்த ஒரு பொழுதில் நீ வரைந்திருந்த கடிதத்தின் இறுதி வாசகங்களால் நான் காதலின் தேசத்திலிருந்தே துரத்தியடிக்கப்பட்டேன். ஆம் "வீட்டுல எனக்கு கலியாணம் பேசிட்டாங்க அவர் ஒரு இஞ்சினியர். தயவு செய்து என்னை மறந்திடுங்க!"

உன்னுடைய இந்த காகிதப் புயலால் என் காதல் படகு நடுக்கடலில் மூழ்கும் என்று நான் கற்பனையில் கூட எண்ணிப் பார்த்ததில்லை. அன்றிலிருந்துதான் உன் ஊரையே நான் வெறுக்கத் தொடங்கினேன். நம் காதல் விவகாரம் உனக்கும் எனக்கும் மட்டும் தெரிந்த உண்மை என்ற மட்டில் எனக்கு கொஞ்சம் திருப்திதான். என்றாலும் இதயத்தில் நீ அன்று மூட்டிய தீ... இன்றுவரை என் இதழ்களில் சிகரெட்டாய்... உந்தன் இதழ்கள் பட்ட கன்னத்தில் இன்று தாடிக்காடு...... போதும் நிஹாரா போதும்.....

**"காதலியை நினைத்திருந்தால்**
**கல்லறையில் சுகமிருக்கும்**
**பாதியிலே கதை முடிந்தால்**
**பரம்பரைக்கே வதை கொடுக்கும்"** -

யாரோ எழுதிய கவிதை வரிகள் என் இதய ரணங்களுக்கு மருத்துவம் பார்த்துக் கொண்டிருந்தன!

"மிஸ்டர் நிஸொஸ் ரீ குடிங்க!" விழித்துப் பார்க்கிறேன். கையில் ரீயுடன் சமீம் நின்று கொண்டிருந்தான்! ஓ... நேரம் 6.30 ஆகிட்டுதுல்ல! கூறிக்கொண்டே ரீயை அவசரமாக அருந்திவிட்டு உடனே குளித்து பிரச்சார வேலைகளில் மும்முரமாயிருந்தேன்.

உனது வீட்டைத் தாண்டி மீண்டும் ஹிஜ்ரா வீதிநோக்கி விரைந்துகொண்டிருந்தேன்! சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் என் இதயத்தில் நீ வளர்த்துச் சென்ற கனவுகள் சோகச் சுவடுகளாய் நிழலாடிக் கொண்டே இருந்தன.

**ஞாபகத்தைப் போக்க வழி**
**நானிலத்தில் இல்லை யடி.**
**காதலித்த தோல்வியைப் போல்**
**இதயத்திற்கு இல்லை 'அடி'.**

# மொட்டைக் கடிதம்

-முகில் வண்ணன்-

பாலன் வெளிநாட்டில் இருந்து வந்து சிலநாட்கள்தான். அதற்கிடையில் அவனது விலாசத்திற்கு ஒரு உள்ளூர்க் கடிதம் வந்து இருந்தது.

நாட்டை விட்டுச் சென்று ஐந்து வருடங்கள். நண்பர்கள் என்று சொல்லிக் கொள்ள யாரும் இல்லை. ஏற்கனவே இருந்த நண்பர்களும் ஊரைவிட்டு நாட்டுக்கு நாடு திக்கொன்றாய் சென்று சேர்ந்துவிட்டார்கள். அப்படியிருக்க யார் போட்டிருக்க முடியும்?

சற்றுக் குழம்பிப்போன பாலன், கடித உறையையே பார்த்துக்கொண்டிருந்தான். கையெழுத்து யாருடையது என்று புரியவில்லை.


ஒரு குழந்தைக்குத் தாயான மனைவியை விட்டுப் போனவன் அந்தப் பிரிவின் கஷ்டத்தை உணர்ந்திருந்தும், மனைவியின் கடிதம் துன்பம் தந்தபோதும், வீட்டில் பணக் கஷ்டமும், பணமுள்ள மற்றவர்கள் காட்டிய அகம்பாவமும் அலட்சியமும், நாலு காசு கையில் சேர்க்காமல் வீட்டுக்கு வருவதில்லை என்று திடமாக இருக்க வைத்தது. ஓரளவு சம்பாதித்துக்கொண்டு இப்போதுதான் வர முடிந்தது. ஆறுவயது மகன் இப்போது தன்னுடன் ஒட்டாமல் ஒதுங்கி நிற்கிறான். அப்பா என்று சொன்னாலும் ஆறு வயது மகனுக்கு ஏற்றுக்கொள்ளக் கஷ்டமாக இருந்தது. அம்மாவுக்குக் கிட்டப் போகவும் விடுகிறான் இல்லை.

கடிதத்தில் விலாசம் எழுதி இருந்தது சந்தேகத்துக்குரியதாக இருக்கவே அறைக்குள் சென்று கடிதத்தைப் பிரித்தான்.

அவன் நினைத்தது சரி. அது ஒரு மொட்டைக்கடிதம். எழுத்துக்கள் தாறுமாறாக இருந்தன. இறுதியில் 'நலன் விரும்பி' என்று இருந்தது. எந்த நலத்தை விரும்புகிறான். யாருடைய நலத்தை விரும்புகிறான் என்று பார்க்க விரும்பிக் கடிதத்தில் கண்களை மேயவிட்டான்.

பாலன் அவர்களுக்கு!

*நீங்கள் ஐந்து வருடங்கள் ஊரைவிட்டுச் சென்று உழைத்து வந்து இருக்கிறீர்கள். ஆனால் உங்கள் மனைவி கணவன் இல்லாமல் இருப்பது கஷ்டம் என்று உணரத் தவறிவிட்டீர்கள். எதுக்கும் நாங்கள் சொல்லக்கூடாது. உதவிக்கு வந்த நண்பனே அதற்கும் உதவி இருக்கிறான். இரண்டு கருவைத்தான் கலைத்து இருக்கிறார்கள். இப்போது நீங்கள் வருவதை அறிந்ததும் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. ஏற்கனவே உற்பத்தி ஆகிவிட்டதற்கு தகப்பனாக ஒப்பமிட வசதியாகிவிட்டது. பணம் வந்தது. மனைவி போகவில்லை. வேறு ஏதோதான்*



"கடிதத்தில் விலாசம் இருந்தது. அது சந்தேகத்துக் குரியதாக இருக்க அறைக்குள் சென்று கடிதத்தைப் பிரித்தான்.."

*போயிருக்கிறது. பரவாயில்லை. உங்களுக்கு மனைவி பத்திரமாகக் கிடைத்து இருக்கிறாள். அனுபவியுங்கள்.*

*ஆள் யாரென்று அறிய ஆவலாய் இருக்கும். அதை அறிந்து என்ன செய்யப் போகிறீர்கள், வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதீர்கள். ஒருமாத லீவு வீணாகிவிடும். ஜமாயுங்கள்.*

இப்படிக்கு,
-நலன் விரும்பி-

அவனுக்கு மனைவியின்மீது சந்தேகம் ஏற்படவில்லை. ஆனால் இதை எழுதியது யார் என்று அறிய வேண்டும்? அவனது பழைய எதிரிகள்மீது ஒருமுறை மனதைச் சுழல விட்டான். 'இவன் செய்திருக்க வேண்டும்' 'இவன் செய்து இருக்கலாம்' என்று மூன்று பேர்மீது நிலைத்து நின்றது.

திடீரென்று சேட்டைப் போட்டுவிட்டுப் புறப்பட்டு விட்டான். மனைவியிடமும் சொல்லவில்லை. அவள் குசினியில் வேலையாக இருக்கிறாள்.

சுந்தரிடம் சென்றபோது அவன் வீட்டுப் படலையில் ஒருவனுடன் நின்று கதைத்துக் கொண்டிருந்தான்.

"சுந்தர் உனக்கேன் வீண் வேலை. என் மனைவி எக்கேடு கெட்டுப், போனாலும் உனக்கென்ன? அதை நீ எனக்கு மொட்டைக் கடிதம் எழுதி அறிவிச்சுத்தான் நான் நம்ப வேண்டும் என்பதில்லை. என் மனைவியைப் பற்றி எனக்குத் தெரியும்." என்றான் ஆத்திரத்துடன்.

"என்ன மொட்டைக் கடிதமா? நான் எழுதினேனா? எங்கே பார்ப்போம்?" என்றான் சுந்தர்.

"இதோ இருக்கிறது..." என்று எடுத்து நீட்டினான்.

படித்த சுந்தர், "உண்ட மனைவி கெட்டா என்ன? மாமி கெட்டா என்ன? நாட்டுப் பிரச்சினையில் நாங்கள் எவ்வளவோ இழந்து நிற்கிறோம். இது பற்றியா எண்ணிக் கொண்டிருக்கிறோம். நீ வெளிநாட்டில் இருந்த படியால் அந்தப் பாதிப்பு உனக்கு இல்லை. பழைய பகையைப் பாராட்டாமல் போ பாலன்."

"அப்படியானால் நீ எழுதவில்லையா?"

நடந்தான் பாலன். இவனில்லை என்றால் அவனாகத்தான் இருக்க வேண்டும்... என்று இப்படியாக மூன்று பேரிடமும் சென்று சண்டைபிடித்தது மட்டுமின்றி அந்தக் கடிதத்தை அவர்களிடம் கொடுத்து படிக்க வைத்து, அந்தக் கடிதத்தில் இருந்த தனது மனைவியின் அவதூறை அவர்கள் எல்லோரும் அறியச் செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தான். 'மூடனுக்கு மலம் பட்டால் மூன்று இடத்தில்' என்று சொல்வது போல் எங்கும் டம்பம் அடித்து வீடு திரும்பினான் பாலன்.

வீட்டில் அவனது மச்சான் முறையான சொந்தக்காரர் ஒருவர் இவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். மனைவியிடமும் சொல்லாமல் சென்றதால் வெளியில் எங்கும் தூரத்திற்குச் சென்று இருக்க முடியாது என்று அவரும் அரைமணிக்கு மேலாகக் காத்துக்கொண்டிருக்கிறார்.

வியர்த்து விறுவிறுத்து வந்து சேர்ந்தான் பாலன்.

"என்ன மச்சான் ஏதும் அவசர சோலியாக வெளியில போன நீங்களா?" என்றார் அவர்.

"இல்ல மச்சான். இஞ்ச பாருங்க யாரோ ராஸ்கல், ஸ்கவுண்ட்ரல் பிளடிபூல்...எனக்கு மொட்டைக் கடிதம் போட்டு இருக்கிறார்கள் அதுதான்போய் விசாரிச்சுப்போட்டு வாறன்."

"என்னவாம்?"

"என் மனைவியைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாக எழுதி இருக்கிறானுகள். இவனுகளுக்கு இதுதானே பொழுதுபோக்கு."

"இல்லாததும் பொல்லாததும் என்று நீங்களே சொல்லுறீங்க. உங்கள் மனைவிமீது உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது என்றால் நீங்கள் ஏன் போய் விசாரிக்க வேண்டும்? 'ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு' என்று சொல்றது இதுதான். நீங்க இப்ப இது பற்றி விசாரிக்கப் போய் இது பற்றி அறியாதவர்களும் அறிய வைத்திருக்கிறீங்க. உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் எடுத்து கிழித்து எறிந்துவிட்டு வேலையைப் பார்க்க வேண்டியதுதானே! அதை விட்டுத்து...."

தலை குனிந்தான் பாலன்.

'என்ன பிழை செய்துவிட்டேன். உண்மையிலே அவர்கள் இதை எழுதவில்லை என்றால் என் மனைவி பற்றிய அவதூறை அவர்களும் அறியச் செய்துவிட்டேனே என்ன மடத்தனம்!'

நினைக்கவே தலை சுற்றியது அவனுக்கு.

## கூத்தரித்த கடி ஜோக்ஸ்

**ஒருவர்:** நேத்து உங்க காருக்கு எப்பிடி அக்சிடெண்ட் ஆச்சு?
**மற்றவர்:** அதோ அந்த மரம் உங்களுக்குத் தெரியுதா?
**ஒருவர்:** தெரியுது.
**மற்றவர்:** நேத்து அது எனக்குத் தெரியலை.

□□

**ஒருவர்:** டாக்டர் ராத்திரியில தூக்கம் வர மாட்டேங்குது. என்ன செய்ய?
**டாக்டர்:** எங்க ஆஸ்பத்திரிக்கு நைட் வாச்மன் தேவை. அந்த வேலையில சேருங்க.

□□

**பொலிஸ்:** அடிக்கடி திருடிட்டு ஜெயிலுக்கு வந்துடறியே வெட்கமாயில்ல?
**திருடன்:** என்ன சார் செய்வேன்? வீட்டுச் சாப்பாடும் ஒத்துக்கல, ஹோட்டல் சாப்பாடும் ஒத்துக்கல்ல.

□□

**டாக்டர்:** குடிபோதையில் இருக்கும்போது சிகிச்சை அளிக்க முடியாதுங்க.
**நோயாளி:** எனக்குக் குடிப்பழக்கமே கிடையாது டாக்டர்.
**டாக்டர்:** உங்களுக்கு இல்லேன்னா என்ன? எனக்கு குடிப்பழக்கம் இருக்கே.

□□

**அவன்:** மருந்தைக் குலுக்கிச் சாப்பிட மறந்து அப்படியே குடிச்சுட்டேன்.
**இவன்:** அதுக்காக இப்ப குதிக்கப் போறியா?
**அவன்:** இல்லை. ஓட்டோவில கொஞ்ச தூரம் போய் வரப் போறன்.

□□

**டாக்டர்:** பேஷண்ட்கள் மத்தியில் என்னைப் பத்தி என்ன பேசிக்கிறாங்க?
**நர்ஸ்:** டாக்டர் ரொம்ப நல்லவர்தான். ஆனா ஒப்பரேஷன் தியட்டருக்குள்ளே புகுந்திட்டா எமனா மாறிடுவீங்களாம்.

□□

## வாசகர் கவனிக்க

முரசுடன் சகல கடிதத் தொடர்புகளுக்கும்-
தினமுரசு வாரமலர்
த.பெ.இ-1772
கொழும்பு.
என்ற முகவரியினையே குறிப்பிடுங்கள்.
பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் ஆக்கங்கள் ஏற்கப்படமாட்டாது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

**"உங்களை ஒன்று கேட்பேன். தப்பாக நினைக்கக் கூடாது."**

பழகிப்போன படுக்கை; காயப்பட்ட இருதயம்; ஊசலாடும் எண்ணங்கள்; கற்பனைகளில் மட்டும் சுகங்கள்; அவள் நினைவுகளில் மட்டும் இதங்கள். இது இன்று நேற்றல்ல, அவளைக் கண்ட நாள்முதல் எனக்கு வாடிக்கையாகிவிட்ட ஒன்று. அவளின் நினைவுகளின் தாலாட்டில்தான் நான் நித்தமும் உறங்குவது. இல்லையென்றால் நான் உறங்கியே பல நாட்களாகியிருக்கும்.

# கனவுகளில் அவள்....

சதீஸ்

"அவளென்றால் யாரென்று கேட்பீர்கள். நானே கூறிவிடுகிறேன். அவள் தான் என் தேவதை. ஆம், அவள்தான் என் தேவதை. இதயம் 'இருக்கின்றது என்பதனை மட்டும் உணர்ந்த எனக்கு, அது எங்கிருக்கிறது என்று சுட்டிக்காட்டிய அவள்தான் என் தேவதை. அவளைக் கண்டபின்புதான் உணர்ச்சிபூர்வமாய் என் இதயம் துடித்ததை உணர்ந்தேன். அந்த உணர்வைத் வித்திட்ட அவள்தான் என் தேவதை.

அவளென் இமைகளுக்குள் எழுந்தருளி [illegible] என் உயிருக்குள் [illegible] எனக்குள்தான் எத்தனை எத்தனை இன்ப ஊற்றுக்கள் பொங்கி எழுகின்றன. அத்தனையும் அவளொருத்தியால் விளைந்தவையல்லவா? என் மூச்சோடும் என் பேச்சோடும் என்றுமே இன்பமாய் கொஞ்சிக் குலவும் அவளல்லவா என் உள்ளங் கொண்ட காரிகை.

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
சென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
குன்றாத காதலினால் மறவேனே அவள்மதியை
என்றாவது ஒருநாள் எனையணைக்க வருவாளே."

என்றபடி தான் நானும் காத்திருக்கிறேன். கனவுகளில் தான் அவள் மடியில் நான்...

□□□

வெயிலின் அகோரத்தில் சிறைப்பட்டு நான் நின்று கொண்டிருந்தேன். திடீரென தென்றல் தழுவியது போன்ற ஓர் உணர்ச்சி. வெப்பம் நீக்கி நட்பம் மேனியை அரவணைத்தது. என்னவென்று திரும்பிப் பார்த்தேன். செதுக்கிய சிலைபோல என்னருகில் அவள். ஆம், அவளேதான்.

சிறகடித்துப் பறக்க முயன்ற என் மனதை சிரமப்பட்டு அடக்கிக்கொண்டேன். அவள் விழிகள் மொழிபேசத் துடித்தன. ஆகா! அவள் விழிகளுக்கு மட்டுமா இத்தனை கவர்ச்சி? மெய் மறந்து நான் நிற்க மெல்லென அவள் வாய் மலர்கிறது.

"ஹலோ, உங்க கூட நான் கொஞ்சம் பேசவேண்டும்."

-அவள்.

நூறுகிலோ சர்க்கரையை கரைத்து என் காதில் ஊற்றியது போன்றிருந்தது. நான் பேசாதிருக்க அவளே தொடர்கிறாள்.

"உங்களை ஒன்று கேட்பேன். தப்பா நினைக்கக்கூடாது; நீங்க என்னை



காதலிக்கிறீங்களா?"

எனக்கு என்னவோ போன்றிருந்தது.

"ஏன்? அப்படித் தெரியவில்லையா?"

கேட்டுவிட்டேன். "அதுக்கில்லை; உங்க மனசை அறியாமலேயே எனக்குள்ளே நான் ஆசையை வளர்த்துக்கிட்டேன். இப்ப வெல்லாம் எனக்கு உங்கள அடிக்கடி பார்க்க வேணும்; உங்ககூட நிறைய பேச வேணும் போலெல்லாம் இருக்கு. உங்ககூட சந்தோஷமா வாழறமாதிரி எனக்குள்ளே கற்பனை யெல்லாம் பண்ணிக்கிறேன். ஏனோ தெரியல,

நீங்க இல்லாத ஒரு வாழ்க்கையை என்னால நினைத்துக்கூட பார்க்கமுடியவில்லை. என் மனசில இருக்கிறதை உங்ககிட்ட சொல்லவேணும்; உங்க அன்பு உள்ளத்தில எனக்கொரு இடம் தேட வேணும், என்று தான் நான் உங்களத் தேடி வந்தேன்!

தவிப்பும் ஏக்கமும் கலந்த குரலில் கூறி முடிக்கின்றாள்.

என் இதயம் நிமிடத்துக்கு நூற்றி நாற்பது தடவை வீதம் துடிக்கிறது. உடம்பு படபடக்கிறது. நா தளதளக்கிறது.

"எனக்கும் என்ன சொல்வதென்றே தெரியவில்லை. நான் என்னவெல்லாம் உங்களிடம் சொல்ல வேணுமெண்டு நினைத்தேனோ அத்தனையையும் நீங்களே சொல்லிட்டீங்க.

"காதல் பரிசு படத்தில கமலஹாசன் வெள்ளை டிரஸ் போட்டுகிட்டு, வெள்ளை குதிரையில பாட்டுப் பாடிக்கிட்டு வாறமாதிரியே நானும் வர்றமாதிரி எனக்குள்ள ஒரு உணர்வு. ஐ.லவ்.யூ சோமச்."

ஆனந்தத்தில் குதித்தபடி கூறி முடித்தேன். அவள் காந்தக் கைகள் என் கைகளுக்குள் அடைக்கலமானபோது; என் கையில் நுளம்பு ஒன்று கடித்தது. அதை அடித்துவிட்டு திரும்பியபோது அந்தோ! அவளைக் காணவில்லை. தேடிப்பார்த்தேன். அவளைத் தெரியவில்லை. ஆனால் அது கனவென்று மட்டும் புரிந்தது.

மீண்டும், பழகிப்போன படுக்கை; காயப்பட்ட இருதயம்; ஊசலாடும் எண்ணங்கள்......

●


ஒரு நாள் -
நோய்வாய்ப்பட்டு
மரணப்படுக்கையில்
கிடந்தேன்.

(குட்டிக்கதை)

சொர்க்கலோகம் போக
வாழ்த்தினர்.
பெட்டி மூடி
தூக்கப்பட்டது.

# முடிவு

சிலாபம் பொ.புஷ்பராஜு



டாக்டர் வந்தார்.
ஊசிப்போட்டார்-மறுநாள்
மரணித்து விட்டேன்.
பிணப் பெட்டியில்
பிணமாக துர்நாற்றத்துடன்
துயில் கொள்கையில்
இயற்கைக்கு மாறாக
முனுசாமியாகிய-எனது
பெயர் 'மையம்'
ஆகியது.
என்னிடம் இப்போது
'ஐடென்டிட்டி கார்ட்'
இல்லை.
'பேர்த் செட்டிபிக்கேட்'
இல்லை.-ஆனால்
'டெத் சேர்ட்டிபிக்கேட்' மட்டும்
உண்டு.
இயற்கைக்கு மாறாக
துயில் கொள்கையில்
என்னை பத்து மாதம்
சுமந்தவள்-ஓடி ஓடி
வந்தாள்.
மார்பில் அடித்துக்
கொண்டாள்.
'ஐயோ மகனே!
போய் விட்டாயே'-இன்னும்
சிலதுகள்
கூலிக்கு மார் தட்டிக்
கொண்டனர்.-நான்
அமைதியாக அவதானித்துக்
கொண்டிருந்தேன்.-பலர்
என்னை பாராட்டிப் புகழ்ந்தனர்.
நான் என்ன
கவிஞர் கண்ணதாசனா?
இல்லை கம்பதாசனா?-பலர்
மலர் வளையம் வைத்தனர்...என்
உடல் நாற்றம் பலரின்
மனதைப் புரட்டியது.
நவீன 'சென்ட்'
தெளித்தனர்-எனதுகள்
'இன்சூரன்ஸ்' பொலிசியை(த்)
தேடினர்.
பிணத்திற்குப் பணம்
தரப் போகும் கூட்டத்தைப்
பார்த்து அமைதியாக
சிரித்தேன். கிரியைகள் தொடர்ந்தன.
எனக்கு
வாய்க்கு அரிசி
போட்டார்கள்.
நெய் பந்தம்
பிடித்தனர்.
சங்கு ஊதினர்.

'ஐயோ மகனே,
மாமா, மருமகன்
அண்ணன், தம்பி,
மச்சான், மாப்பிள்ளை'
பல்வேறு உறவு
சொற்கள் என்
காதில் விழுந்தன.
ஊர்வலம்
புறப்படுகிறது. முச்சந்தியில்
கொள்ளி, முட்டி
உடைக்கப்படுகிறது.
'ஐயோ' பல குரல்கள்
ஒன்று சேர்ந்தன.
யாருக்காக?
எனக்காகவா?
இல்லை.
பெருமைக்காக 'பலர்'
என்னை இறுதி
யாத்திரைக்கு அனுப்ப
வந்துள்ளனர்-வழி
தடுமாறி விடுவேன்
என்ற
எண்ணத்தில்!-திடீரென
விழித்துக்கொண்டேன்
ஒரு பொழுது...!
'உடன் பிறப்புக்களே!
உங்களுக்கு முன்
மறு உலகத்தில்-நான்
பயணம் சென்று
உங்களுக்கு
'ஃபெஸ்ட் கிளாஸ்' சீட்
புக் பண்ணிவைக்கிறேன்.
ஆ....ஆ...' மீண்டும்
பெட்டியில் என்னை(த்)
தள்ளி பெரிய ஆணிகள்
அறையப்படுகின்றன.
'எதற்காக? மீண்டும்
உங்களுடன் வருவேன்
என்றா?
ஆம் எனது எண்ணம்-இனி
சரி. முடிவு
முடிவுதான்.
'துரோகிகளே! தூர விலகுங்கள்.
எனக்கு இனி
உறவு வேண்டாம்.
பணம் வேண்டாம்.
மாலை வேண்டாம்.
சென்ட் வேண்டாம்.
புகழும் வேண்டாம்.'
இப்போது தீயில் வெந்த என்னை
சாம்பலாக்கி
விட்டார்கள்.'

■

# கல்யாணமே ஒரு PENனோடு தான்!

ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி

**"எவ்வளவோ சொல்ல வேண்டும் போல் மனதுக்குள் பொங்கியது. ஆனால்-வார்த்தைகளால் அவற்றை உருமாற்ற முடியவில்லை."**

"நான் சொன்னது உன் காதுல விழுதா இல்லியா?" அம்மாவின் குரல் உச்சஸ்தாயியில் ஒலித்தது. சத்தியமாய் அந்த நிமிஷம்வரை அம்மா எனக்கு ஏதோ சொல்லுகிறார் என்பது உறைக்கவேயில்லை. காரணம், "பூவே செம்பூவே உன் வாசம் வரும்..." என்று கே.ஜே. ஜேசுதாசின் இனிய குரலில் ஒலித்த வானொலி பாடலில் புலன்களை இலயிக்க விட்டிருந்தது தான்.





ஒருவாறு சமாளித்து மீண்டேன். 'எ... என்னம்மா சொன்னீங்க?" அம்மா என்னை உறுத்துப் பார்த்து, தொடர்ந்தார். "நல்லதொரு இடத்தில் இருந்து சம்மந்தம் பேசி வந்திருக்கு."

அம்மாவை இடைமறித்தேன்.

"யாருக்கு? அண்ணாவுக்குத்தானே? அண்ணாவக் கட்டிக்கப் போற அந்தப் பொண்ணுக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள மறக்காம தெரிவிச்சிடணும்."

எரிச்சலும் கோபமுமாய் அம்மாவின் வார்த்தைகள் அடுத்து வந்தன.

"சும்மாயிரு. உன்னோடு வாய்க்கு உன்னக் கட்டிக்கப்போறவன் தான் பாவம். அண்ணா என்ன? அவன் ஆண்பிள்ளை. அவனுக்கு அப்படியொன்றும் அவசரமில்ல. நீதான் பிரச்சனை. உன்னச் சீக்கிரமா வீட்டவிட்டு அனுப்பிட்டா எங்க பாரம் குறைஞ்சிடும். கடமையும் தீர்ந்த நிம்மதி. இப்ப வந்திருக்கிற வரன் நல்ல இடம். அழகான, படிச்ச நல்லா சம்பாதிக்கிற பையன். குடும்பத்திலையும் பிக்கல் பிடுங்கல் இல்ல. எங்களுக்கெல்லாம் நல்ல விருப்பம். நீ என்ன சொல்றே?"

என் மௌனம் அம்மாவைப் பாதித்திருக்க வேண்டும். "என்ன பேசாம இருக்கறே?"

வினா தொடுத்தார். "எனக்கொண்ணும் இப்போ அவசரமில்ல. இன்னும் ஐந்து வருஷங்கள் முடியட்டும். பிறகு சரி சொல்றேன்."

"இதென்ன புதுக்கதை? ஐந்து வருஷ கணக்கு? என்னதான் சொல்றே?" நான் பேசவில்லை.

எவ்வளவோ சொல்ல வேண்டும்போல் மனதுக்குள் பொங்கியது. ஆனால் வார்த்தை களால் அவற்றை உருமாற்ற முடியவில்லை. நான் சொல்ல நினைப்பதை இந்த அம்மாவால் புரிந்துகொள்ள முடியுமா? என்னவோ நான் அவர்களின் கழுத்தில் தொங்கிக்கொண்டிருப்பதாகவும்- இல்லை என்னை அவர்கள் முதுகில் சுமந்துகொண்டிருப்பதான கற்பனையில் 'பாரம் குறைக்க' எவனாவது ஒருத்தன் கையில் பிடிச்சுக்கொடுப்பதில் துடிக்கிறார்கள்! எனக்குள் இனம் புரியாத எரிச்சல் எட்டிப்பார்த்தது. இருபத்தியொரு வயதுக்குள் என்னைப் பிடித்து கல்யாண சிறைக்குள் (என்னைப் பெறுத்தவரை) தள்ளிவிட நினைக்கும் இவர்களை... சிந்தனையுள் ஆழ்ந்து போனேன்.

"எங்கே என் கண்ணாடி?" என 7.30 பஸ்ஸை பிடிக்கவிருக்கும் அப்பா 7.29ஆன நிமிஷத்தில் கூப்பாடு போடுவதும்-பதறியபடி கை வேலைகளை போட்டுவிட்டு அம்மா, நான், தங்கை யாராவது ஒருவர் தலைதெறிக்க தேடுவதும்-"இந்த ட்ரவுஸர் ஷேர்ட்ஸ் எல்லாம், ஒழுங்கா அயன் போட்டு வைச்சிடுங்க. அவசரமான பிரென்ட் ஒருத்தன பார்த்துட்டு வந்துடறேன்." என பரபரக்கும் அண்ணன்-தன் வேலைகளை எங்கள் தலைகளில் சுமத்துவதும்-வார இறுதியில் 'அங்கள்' அந்த வாரம் முழுக்க உடுத்தியவைகளை 'ஆண்டி' குவித்து வைத்து கழுவி மாய்வதையும்-இதுபோன்ற சின்னச் சின்ன விஷயங்களைக் கூட தன் கையால் செய்யாது பெண்கள்மீது சுமத்திவிட்டு 'வேறு வேலைகளை' கவனிக்கப் போகும் ரக ஆண்கள்தாம் எங்கு பார்த்தாலும் என் கண்ணில் தட்டுப்படுகிறார்கள்.

பெண்கள்-அதுவும் குடும்பப் பெண்கள் இவ்வாறான கடமைகளைக் கவனிக்க வேண்டியது கடமை என்றாலும் எல்லாமே அவள்தான் செய்ய வேண்டும். 'ஒப்பீஸ்' போவது, வருவதோடு என் கடமை தீர்ந்தது என கையைக் கட்டிக்கொண்டு ஆனந்தமாய் அமர்ந்து டி.வி.பார்க்கும் நபர்கள் அதிகரித்த இந்தக் கால கட்டத்தில் இப்படியான திருமண பந்தத்தில் சிக்குவது மடமை. சிறை- ஆமாம் சிறைதான். யோசித்துக்கொண்டிருந்தேன் நான்.

நான் யோசித்தவற்றை வார்த்தைகளில் உதிர்த்திருந்தால் அம்மா என்னை திட்டியிருப்பாள். படிக்க வைத்தது தப்பு என்பாள். ஒன்றிரண்டு வித்தியாச ரகமான, பெண் உணர்வுகளை மதிக்கின்ற ஆண் பெருமகன்கள் இருக்கலாம். இல்லையென்பதற்கில்லை. ஆனால், அப்படியானவர்களை எப்படித் தேடுவது? எங்கே பிடிப்பது? சாத்தியமில்லை.

என்றாலும் நம் சமூக அமைப்புப்படி திருமணம் பெண் மீது கட்டாய விதி, தனியே, தனித்து வாழ்வதென்பது அத்தனை சுலபமல்ல. எத்தனையோ இடர்கள் முரண்பாடுகளைச் சமாளிக்க வேண்டி வரும். அதற்கான தைரியம், துணிவு, மனப் பக்குவம் அனேக பெண்களிடம் இல்லை. உருவாகவும் விடுவதில்லை.

என்னதான் பெண்ணுரிமை பெண் விடுதலை என்று சொல்லிக்கொண்டாலும் எல்லாம் அவ்வளவுதான். மாறாக வேலைக்கு போகும் பெண்கள் பெறும் சுதந்திரத்தைவிட இடையூறுகளே அதிகம். சுமைகளும் அதிகம். அம்மா என்னையே பார்த்துக்கொண்டிருப்பதை உணர்ந்து உதடுகளைத் திறந்தேன்.

"திருமணம் வேணாம்னு சொல்லவரலை நான். இப்போதைக்கு வேண்டாம்னு சொன்னேன். ஏன்னு கேப்பீங்க. நான் சொல்லும் பதில் புரியுமோ தெரியலை. எண்டாலும் சொல்றேன். இன்னும் கொஞ்ச காலம் நான் ப்ரீயா வாழ விரும்புறேன். நான் நினைச்ச நேரம் எழும்பி, நினைச்ச நேரம் தூங்கி, இஷ்டப்படி சாப்பிட்டு, டி.வி.பார்த்து, கதையெழுதி, புத்தகம் வாசிச்சு...என் மனசுப்படி,விருப்பபடி வாழ்ந்து வரும் அவகாசத்தை இன்னும் நாலைஞ்சு வருஷங்களுக்காவது தாங்கம்மா. பிறகு, நீங்க தரும் எந்த தண்டனையையும்; இல்ல சிறைவாசத்தையும் ஏத்துக்க நான் ரெடி. ப்ளீஸ் அம்மா. விளங்கிடுவீங்களா இதை? என் சுதந்திரத்தை நீடிச்சு கொடுங்க."

அம்மா மௌனமாய் என்னைப் பார்த்தாள். நான் ஒரு புதிராய்- புரியாமல் இருந்திருக்கக்கூடும்.

"ஆ... இன்னொண்ணு சொல்ல மறந்துட்டேன். நீங்க தரப்போற அந்த அவகாசத்துல நிச்சயமா நான் யாரையும் விரும்பமாட்டேன். இதுவரையும் நான் காதலிக்கல்ல. இனியும் மாட்டேன். இந்தச் சந்தேகமும் உங்களுக்கு வரக்கூடாது! அதான் சொல்லிட்டேன்."

என் வார்த்தைகளை முடித்துவிட்டு எழுந்தேன். அம்மா அப்படியே உட்கார்ந்திருந்தாள். ஏன்?

●

உண்மைச் சம்பவம்

# ஆள் மாறாட்டம்

-லேகா-

**இது—கற்பனையல்ல— உங்கள் வாழ்க்கையிலும் இப்படி ஒரு அனுபவம் ஏற்பட்டதுண்டா........?**

ஒரே சாயலில் ஏழுபேர் இருப்பார்கள் என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். அது முற்றிலும் உண்மைதான் என்பதை, அண்மையில் நடந்த ஒரு சம்பவம் புடம் போட்டுக்காட்டி விட்டது.

அன்றொரு மாலைப் பொழுது.

நானும் எனது நண்பியும் ஒரு திருமண வரவேற்பில் கலந்துகொள்ளவென வத்தளை நோக்கிப் பயணமானோம்.

பஸ்ஸிலோ மூச்சுக்கூட விட முடியாதளவு ஜன நெரிசல். இருள் கவ்வத் தொடங்கி விட்டதால் நாமும் மூச்சைப் பிடித்துக் கொண்டு பயணமானோம். அதுவும் நின்ற நிலையிலிருந்தபடியே!

பேலியகொட சந்தியில் பஸ் தரித்த போது, பக்கத்தில் நின்றிருந்த ஒருவர் என்னைத் தட்டி, யாரோ கூப்பிடுவதாகச் சொன்னார். ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபோது ஒருவர், என்னை நோக்கி, "எறங்கலியா..?" என்றார்.

நான் விழித்தேன். அந்த மனிதர் கரிய நிறம்-சேர்ட்டுக்கு மேல் சுவெட்டர் போட்டிருந்தார். வாயில் வெற்றிலைச் சிவப்பு! மலையகத்தைச் சேர்ந்தவர் என்பது அவரது நெற்றியிலேயே எழுதி ஒட்டியிருந்தது.

அவரது உருவத்தைப் பார்த்ததும் என் நெஞ்சு படபடவென அடித்தது. நண்பியை நோக்கினேன். அவள் சிரித்தாள். ஏற்கனவே எனக்குப் பயந்தாங்கொள்ளி என்று பெயர். நான் நடுங்கிக்கொண்டிருக்க அவள் சிரித்தது எனக்குள் ஆத்திரத்தை மூட்டியது. என் பார்வையை வேறு பக்கம் திருப்பினேன். பஸ்ஸும் நகர ஆரம்பித்தது.

அடுத்த பஸ் தரிப்பிடம் வருவதற்குள் என்னை நானே ஆசுவாசப்படுத்திக் கொண்டேன்.

பஸ் நின்றது. பயணிகள் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்த அந்தச் சலசலப்பில், என் காதருகே, "ஏன் எறங்கலை..." என்ற கர்ணகடூரமான குரல் கேட்டு, திடுக்கிட்டு நிமிர்ந்த நான், திகைத்தேன். மீண்டும் அதே உருவம். அதுவும் என் பக்கத்திலேயே!

கொஞ்சம் அசந்தால், என் கையைப் பிடித்து இழுத்துச் சென்றுவிடுவார் போல் இருந்தது. என் தொண்டைக் குழிக்குள் ஏதோ அடைத்தது. நண்பியும் கலவரத்துடன் என்னை நோக்கினாள். நேருக்கு நேர் அவரை விழித்துப் பார்த்தேன். என் கண்கள் கலங்கின.



அவர் என்னை உற்று நோக்கினார். என்ன தோன்றியதோ, விறுவிறு என இறங்கிச் சென்றார். நடுங்கிக்கொண்டிருந்த என்னை நோக்கி அருகிலிருந்தவர், "ஏதோ ஆள் மாறாட்டம் போலிருக்கு... கவலையை விடுங்கள்..." என்றார் ஆங்கிலத்தில். எனக்குப் போன உயிர் திரும்பி வந்தது.

அந்த மனிதரின் அக்கா...தங்கை, மகள், மருமகள் அல்லது மனைவி என்று என் சாடையில் யாரேனும் உறவினர் இருந்திருக்க வேண்டும். அதுதான் அவரும் சற்றுத் தடுமாறி விட்டார் போலும்!

எப்படியோ, என்னை நிலைதடுமாற வைத்த இந்தச் சம்பவத்தை என்னால் மறக்கவே முடியவில்லை!

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்ட

# இலக்கிய நயம்



## அதுதான் முடியவில்லை

### தருவது - ரசிகன்



தாரிணிதேவி மெல்லக் கை நீட்டி தன் அருகில் இருந்த வீர நந்தாவின் தோளைத் தொட்டாள்.

அவன் உணர்ச்சியே இல்லாத கற்சிலைபோன்று அமர்ந்திருந்தான்.

எதிரே நீலமாய் பரந்து நிலத்தை ஆக்கிரமித்து விரிந்திருந்தது கடல்.

அந்தி நேர சூரியனின் பொற் கரங்கள் வர்ணஜாலம் வீசி விளையாடிக் கொண்டிருந்தன.

"கோபமாக்கும்?"

தாரிணிதேவிதான் கேட்டாள். இன்னமும் நெருங்கி தன் தோள் அவன் தோளில் தொட்டுக்கொள்ளும் வண்ணம் அமர்ந்தாள்.

இப்போதும் வீர நந்தா கற்சிலை போலவே இருந்தான்.

தாரிணிதேவி தன் தோள் விலக்கி இடைவெளி வாங்கி சற்றுப் பலம் சேர்த்து அவன் தோளில் தன் தோளால் மோதினாள்.

ம்ஹூம்...அவன் அசையவே இல்லை.

முயற்சியில் தோற்றுப் போனாலும் ஒரு முறுவலோடு இதழ் திறந்து அவன் பலம் பாராட்டினாள்:

"இது மலை! மலையை அசைப்பது என்றால் மனிதரால் முடிகிற காரியமில்லைத்தான்."

சொல்லிவிட்டு தன் முகம் பக்கவாட்டில் திருப்பி வீர நந்தாவைப் பார்த்தாள்.

கடலின் மடியில் அமர்வதுபோல தாழ்ந்து வந்து, சட்டென்று மனம் மாறியதுபோல எழுந்து உயர்ந்து வான்நோக்கி செல்லும் பறவை ஒன்றின்மீது விழிகள் பதியவைத்து இரசித்துக்கொண்டிருந்தான் நந்தன்.

அவள் சொன்னதை செவியில் வாங்கியதற்கான ஒரு சலனம்கூட முகத்தில் தெரியவில்லை.

தாரிணிக்கு அவன் அலட்சியம் எரிச்சல் தந்தது.

"பழகப் பழகப் பாலும் புளிக்கும். ஆசை அறுபது நாள். மோகம் முப்பது நாள். ஆக மொத்தம் 90 நாள். பழமொழியும் சரி. கணக்கும் சரி."

வேண்டுமென்றே- அவனுக்கு கோபம் ஊட்டவென்றே கூறினாள்.

'என்னில் உனக்கு பிரியமே இல்லை' என்று ஒருவர் சொல்லிக் கவலைப்பட மற்றவருக்கு உடனே வேகம் வரும். தன் பிரியம் சொல்லி கவலைபோக்கும் வேகம் வரும். காதலர் இடையே நடக்கும் ஊடல் நாடகத்தில் அடிக்கடி அரங்கேறும் ஒரு சுவையான காட்சி.

இப்போது வீரநந்தா வாய் திறந்தான்.

"பிழையை செய்துவிட்டுப் பழியை என்மீது போடுகிறாய்."

"யார் பிழை செய்தது? சொன்னால் தானே தெரியும். இப்படி வாயை மூடிக்கொண்டு இருந்தால் எப்படித் தெரியுமாம்?"

"தெரிந்தும் தெரியாதது போல் நடிப்பது. அறிந்தும் அறியாததுபோலக் கேட்பது. நல்ல தந்திரம்."

"இருக்கும். இருக்கும். நாங்கள் தந்திரமும் மந்திரமும் செய்துதான் இவரை மயக்கினோம் ஆக்கும்?"

"தாரிணி நீ விசயத்தை விட்டு விலகிப்போய் பேசுகிறாய். வீண் வாதம் புரிகிறாய். வேண்டாம்!"

"அதுதான் கேட்கிறேன் என்ன பிழை செய்தேன் என்று?"

"உனக்குத் தெரியாது?"

"தெரியாது!"

அடம்பிடித்தாள். எந்த வடம்போட்டு இழுத்தாலும் அசையமாட்டாள். நந்தா அவள் குணம் அறிவான். எனவே இப்போது ஒரு படி இறங்கிவந்தான்.

"மூன்று வாரம் முகம் காட்டவே மறுத்தாய். ஒரு மடல்கூட வரைய நினைத்தாய் இல்லை. அத்தனை அலட்சியம். எக்கேடு கெட்டும் போகட்டும் இவன் என்று நினைத்திருப்பாய்."

நந்தா பேசிக் கொண்டிருக்க அவனைப் பார்த்து முறைத்தாள் தாரிணி. விழிகள் கலங்கித் தெரிந்தன.

"பேசி முடித்துவிட்டீர்களா? அல்லது வார்த்தையென்னும் வாள் எடுத்து தொடர்ந்து வீசி என் உள்ளத்தை அறுத்துப் போடப் போகிறீர்களா?"

விழிகளில் திரண்டு துளியாய் உருண்டு கன்னத்தில் ஒரு கோடாய் இறங்கி அவள் மடியில் விழுந்தது கண்ணீர்.

நந்தா அவள் கண்ணீர் கண்டு பதறிப் போனான்.

"தாரிணி இது என்ன இது? உன் விழிகள் குளங்களாகலாமா? நான் அப்படி என்ன சொல்லிவிட்டேன். வேண்டுமென்றே உன்னை வருத்தவா சொன்னேன்? உன் மீது கொண்ட விருப்பத்தால், ஆழம் காணமுடியாத அளவுக்கு என் நெஞ்சில் வேர்விட்டுள்ள காதலால், மூன்றுவாரம் உன் உருவம் காணாமல், வெண்ணெய் போல என் உயிர் உருகிய சோகத்தால் அப்படிப் பேசியிருப்பேன்..பிழையிருப்பின் மன்னித்துவிடு."

"பிழைதான்."

"ஆம்- நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாதுதான்."

"நான் உங்கள் மீது சொல்லவில்லை. என்மீதுதான் தவறு. மூன்றுவாரம் உங்கள் முகம் காணாமல் இருந்தது பிழைதான். ஆனால் என் நிலமை அப்படி. உங்கள் திருமுகம் காணாது நான் மட்டும் என்ன திருப்தியாகவா இருந்தேன்?"

"எப்படி இருந்தாய்?"

"இந்தக் கேலிதானே வேண்டாம் என்பது."

வீர நந்தா முறுவலித்தான். அவள் கரத்தோடு தன் கரம் கோர்த்துக்கொண்டான்.

"கேலியல்ல தாரிணி. அறியும் ஆவல். உலைக்களத்து இரும்பாக பிரிவென்னும் வேதனையில் என் உள்ளம் பட்டபாடு நீயும் பட்டாயா என்று அறியும் ஆவல்."

"உலைக்களத்து இரும்புகூட அடிபட்டு, தணல்பட்டு உறுதியாகிவிடும். ஆனால் அனலில் இட்ட மெழுகு என்னாகும்? உருகி உருகியே உருத்தெரியாமல் போகுமன்றோ. அப்படித்தான் என் நிலையும் அந்த மூன்று வாரமும் இருந்தது. நம்பமாட்டீர்கள் நீங்கள்; நான் பட்ட துயர் சொன்னால்!"

"ஒரு மடல் கூடவா வரைய முடியவில்லை. கட்டுக்காவல் மீறி புத்தியோடு நடந்து ஒரு ஓலை அனுப்பக்கூட இந்த அழகுப் பேழையால் முடியவில்லையா?"

"பலமுறை முயன்றேன்."

"பொய்! நினைத்தால் எழுதியிருக்கலாம். மடல் என் கரம் சேர வைத்திருக்கலாம். எதிர்பார்த்து இருப்பேன் என்று தெரிந்தும் ஏமாற்றிவிட்டாய்."

"மடல் வரைவது என்றால் வரமுடியாது என்றுதான் வரையவேண்டும். ஏமாற்றமாய் இருக்குமே என்று நினைத்துவிட்டேன்."

"தினமும், அனுதினமும் உன்னை நான் நினைத்திருக்கும்போது நீ மட்டும் மறந்திருக்கிறாய் என்ற நினைப்புத்தானடி அதிக வேதனை. உலையில் இட்ட இரும்பு உருத்தெரியாமல் போவதில்லை. ஆனால் உருமாறிப்போகலாம் அல்லவா? என் உள்ளமும் ஏக்கத்திலும் சோகத்திலும் உருமாறிப் போனது மெய்."

தாரணி அவன் \தோளில் சரிந்தாள். தன் இதழ்களால் அவன் தோளில் வருடி, கிளி மூக்கால் தோளில் தொட்டு இரு புறமும் அசைத்தாள். பின் மெல்ல இதழ் திறந்து பற்கள் பதித்து நந்தாவின் தோளில் கடித்தாள். கடித்துவிட்டு விலகி,

"இரும்புக்கு வலிக்குமா? வலிக்காது. வலிக்காது. என் பல்லுத்தான் உடையும்."

அவள் கேலி செய்ய, நந்தா முறைப்பது போல அவளைப் பார்த்துக்கொண்டு, கரம் நீட்டி அடிவயிற்றில் கிள்ளினான்.

வலித்தது. எனினும் இனித்தது. உடலில் கிள்ள உள்ளே சிலிர்த்து, அட... இது எப்படியே...என்று வியக்கவும் வைத்தது.

வயிற்றில் கிள்ளியவன் இப்போது தொப்புள் சுழியில் ஆட்காட்டி விரல் வைத்து ஆராய்ச்சி நடத்தினான். தொலைத்துவிட்ட பொருளை தேடுவது போல் தீவிர ஆராய்ச்சி. அதே சமயம் அவனது உதடுகளோ அவளது இடது காதுமடல்மீது ஊர்ந்து கூச்சத்தில் நெளியவைத்தன.

நரம்புகள் தொட்டு, இதமாய் வருடி உணர்வுகள் மீட்டி......

அவன் செயல் தடுக்காமல் இமைக் கதவுகள் சாத்தியிருந்த தாரிணி மனதில் வியந்தாள்.

'நான் என்ன வெட்கம் இல்லாதவளா? தடுக்காமல் இருக்கிறேனே. மறுக்காமல் இசைந்து போகிறேன் அல்லவா? இது எப்படி? ஏன் இப்படி?

தாரிணி அடிவயிற்றில் பதிந்திருந்த அவன் கரத்தை எடுத்து தன் தோளில் வைத்துக்கொண்டாள்.

தோளில் வைத்த கரம் மெல்ல கீழே இறங்கி விஷமம் செய்யமாட்டாதோ என்று மனதில் நினைக்க, அந்த நினைப்பு புரிந்தது போல, அவள் கழுத்தில் கிடந்த முத்து மணிமாலையை வருடியபடி நகர்ந்த கரம் அடுத்து செய்த விஷமத்தில், தன்னை மறந்து தாரிணி வாய்விட்டு நகைத்து விட்டாள்.

நந்தா நகைக்கவில்லை. காரியமே கண்ணாக இருந்தான். எங்கே தந்தி மீட்ட நாதம் எழும் என்று தெரிந்த பித்தன்போல

'ஓ...நான் மனதால் விரும்பியதை காதலர் நிறைவேற்றும்போது அவர்மீது கோபிக்க மனம் வருமோ? தடுக்கத்தான் என் கரம் துணியுமோ?' என்றும் நினைத்துக்கொண்டாள். வெட்கம் விலகிப் போனதற்கு தனக்குள் சமாதானமும் செய்து கொண்டாள்.

இத்தகைய நிலைமைத்தானே திருவள்ளுவரும் குறளில் சொன்னார்.

**"நாணென ஒன்றோ அறியலம் காமத்தால் பேணியார் பெட்ப செயின்"**

குறள்-1257
அதிகாரம்-126

## குறுக்கெழுத்துப் போட்டி இல-55

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | |
| | ■ | 3 | | | | ■ |
| 4 | | | ■ | 5 | | 6 |
| | ■ | | ■ | | | |
| | 7 | | | | ■ | |
| ■ | | | ■ | ■ | 8 | |
| 9 | | ■ | 10 | | | |

### இடமிருந்து வலம்

1. கொலைக் குற்றவாளிகளுக்கு இது கடுமையாக இருக்கும்.
2. ஈரம்பட்டால் இதன் உபயோகம் இல்லை.
3. இது கிடைக்க வேண்டுமென்று சிலர் பலிப்பூசையும் நடத்தியதுண்டு.
4. கண்ணகிக்கு வில்லி.
5. மூளையைப் பயன்படுத்திச் சாதிக்க இது தேவை.
7. இவனது நம்பிக்கையும் மண் மீதுதான்.
9. புத்தரோடு தொடர்புடையது.
10. தற்காலத்தில் "இவரின் மதிப்புக் குறைந்துவிட்டது.

### மேலிருந்து கீழ்

1. பலர் கூடியும் நிறைவேற்றலாம்.
2. பொங்கலுக்கு இதன் சுவை சிறப்பு.
3. இதற்கென்றே பல நூல்களும் உள்ளன.
5. வாரத்தில் ஒரு நாள்.
6. குடும்ப உறவுகளுக்குள் இவரும் அடக்கம்.
7. நம் நாட்டிலும் விரயமாகி வருவது.
8. அரசியலிலும் இது நடக்கும். (தலைகீழாக உள்ளது)

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 02.07.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-55**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல. 1772**
**கொழும்பு.**

*சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.*

### குறுக்கெழுத்துப் போட்டி இல-53க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தி | 2 மி | ங் | 3 க | ல | ம் | ■ |
| ரு | டி | ■ | ட் | ■ | 4 ம | 5 து |
| ப் | ■ | 6 அ | ட | க் | க | ம் |
| 7 ப | ப் | ப | ட | ம் | ■ | பு |
| தி | ■ | ரா | ம் | ■ | 8 சி | ■ |
| ■ | 9 ப | த | ■ | 10 ம | ர | 11 பு |
| 12 அ | ரு | ம் | பு | ■ | சு | றா |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.53இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. ஏ.சற்குணம் கொழும்பு-05.
2. ஏ.நிலாம்தீன் புத்தளம்.
3. வி.கைலாசநாதன் மட்டக்களப்பு.
4. எம்.சுஜாதா மண்டூர்.
5. ஆ.யாதவன் திருகோணமலை.
6. எஸ்.எம்.பாத்திமா பாணந்துறை.
7. கே.கஜேந்திரன் ஹட்டன்.
8. செல்வி.எஸ்.ஜீவமனோ திருகோணமலை.
9. ரி.ஜோதி குருநாகல்.
10. மு.மேகலா அவிசாவளை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## மகாபாரதம் தொடர்ச்சி

தீ மூட்டிக்கொல்ல போட்ட திட்டமும் வெற்றிபெறவில்லை. வலிமை பொருந்திய துருபத மன்னனுடன் அவர்கள் உறவு கொண்டுவிட நேர்ந்தது. இப்பொழுது வீர சத்திரியர்களைப்போல் எதிர்கொண்டு வெற்றிபெறுவோம். யுத்தத்தில் தோல்வி பெற்றாலும் அது கோழைத்தனமாகாது.

**சகுனி:** உங்களையெல்லாம் பரிசோதிக்க நான் விரும்பவில்லை...யார் அறிவார்...?

**கர்ண:** மாமா! தாங்கள் கூறிய கருத்துக்களைப் போல் வேறு எவராவது என் வீரம் பற்றி இழிவுபடுத்தியிருந்தால், அந்தக் கதிரவன்மேல் ஆணையிடுகிறேன். அவனுடைய நாவினை எனது அஸ்திரங்களால் அறுத்திருப்பேன்!

**சகுனி:** பெரியோருக்கு கனம் பண்ணப் பழகிக்கொள் கர்ணா! காந்தார மன்னனான என்னை ஒரு கோழை என்று கணக்கிடாதே! என்னிடம் தெய்வீகம் பொதிந்த ஆயுதங்கள் கிடையாது. ஆனால் யுத்த தர்மம் நன்கு தெரியும் எனக்கு.

**துரியோ:** மாமா எனது நண்பன் கர்ணன் சார்பில் நான் மன்னிப்புக் கோருகிறேன்.

**சகுனி:** அப்போ அவனை அமர்ந்து நான் சொல்வதைக் கேட்கச் சொல்.

**துரியோ:** என்னுடைய வருங்காலம் பற்றிய நிகழ்வுகளானமையினால் எனக்காக அமர்ந்துகொள்.

**கர்ண:** உனக்காக என் ,வாழ்வையே அர்ப்பணிக்கச் சித்தமாயுள்ளேன். மன்னிப்புக் கோருகிறேன் மாமா! இன்றையச் சூழ்நிலையில் நாங்கள் என்ன செய்யவேண்டும்?

**சகுனி:** நிலமை மிக மோசமானது. துரௌபதியை வைத்தே அவர்களிடத்தில் பிளவினை ஏற்படுத்த வேண்டும்.

**துரியோ:** இதனைப் பலமுறை முயன்றோம். அவர்கள் ஐந்து உடலானாலும் ஒருயிர் போன்றவர்கள். ஓர் அழகான பெண்ணால் அவர்களின் ஒற்றுமையைச் சிதைக்க முடியாது மாமா!

**சகுனி:** அப்போ துருபதனை ஒரு துரும்பாகப் பாவிப்போம். நமது திறைசேரியை தாராளமாகப் பயன்படுத்துவோம்.

**துச்சா:** மாமாவுக்கு வயதாகிவிட்டது. மாமா! துருபதன் தனது மருமகனைப் பகைத்துக் கொண்டு எம்முடன் சேருவானா?

**கர்ண:** பாஞ்சால நாட்டதிபரின் நட்பை நாடினால் நாம் துரோணாச்சாரியாரை இழக்க வேண்டிவரும். துரோணரைக் கொல்லவே யாகம் செய்து ஒரு மகனைப் பெற்றுள்ள துருபதன், துரோணர் சேரும் முகாமில் தானும் சேருவாரா? துரோணரின் நட்புத்தான் நமக்குப் பிரதானம். எவ்வாறானாலும் யுத்தம் தவிர்க்க முடியாதது மாமா!

**சகுனி:** ஆகவே துரியோதனா! உனக்கு ஒரேயொரு வழிதானுண்டு. விடாப் பிடியாக- பிடிவாதமாகவே இரு...!

**பின்னணிப் பாடல்:**

*அறவழி யெதையுமே நாடாதொருவன்*
*புறவழியோடி பொய்மையை அணைப்பான்*
*அறிவொழி யிழந்தே அல்லலை இணைத்தே*
*அமைதியையிழந்து அழிந்தொழிந்திடுவான்.*

(இன்னும் வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

# மகாபாரதம்

அங்கம் 35

இவ்வாரம் (26.06.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின்குரல்:** பாஞ்சால நாட்டில்- திரௌபதியின் சுயம்வர மண்டபத்தில் பல மன்னர்கள், அரசகுமாரர்கள் மத்தியில் கர்ணன் மானபங்கப்படுத்தப் பட்டான். யாகவில்லைத் தூக்கத்தானும் முடியாமல் துரியோதனனும் அவமானத்தை அணைத்தான். இதே சமயத்தில் வில்லுக்கு விஜயனான அர்ச்சுனன் வில்லில் நாண் பூட்டிக் கணை தொடுத்து இலக்கினை அடிக்க ஆயத்தமாகியிருக்கும் சமயத்தில் கதையினைக் கூறுவதை நிறுத்தியமைக்காக என்னைக் குறை கூறுவீர்கள். இக்காவியத்தின் கடந்த காலமும் நிகழ்காலமும் சங்கமமாகும் இக்கட்டம் மிக முக்கியமானது. மீண்டும் விட்ட இடத்தைத் தொட்டுக் காட்டி கதையினைத் தொடர்கிறேன்.

கடந்தவார நிகழ்வுகள் ஒன்றன்பின் ஒன்றாக தோன்றுகின்றன.

- [illegible]
- [illegible]
- [illegible]

-காட்சி தொடர்கிறது-

அர்ச்சுனன் [illegible] உயர்ந்த [illegible] தொட்டியில் தெரியும் மீன் பிம்பத்தைப் பார்த்து மேலே சுழலும் இலக்குக்கு பாணத்தை விடுகிறான். அம்பு மீனின் கண்ணைத் துளைக்கிறது. மக்கள் வாழ்த்தொலி எங்கும் பரவுகிறது. அர்ச்சுனன் எதிரேயுள்ள அம்புகளைப் பொறுக்கிக்கொண்டு வில்லுடன் துருபத மன்னனிடம் சென்று மரியாதை செய்கிறான்.

**ஜராசந்தன்:** பாஞ்சால நாட்டதிபரே! சுயம்வரத்துக்கான இலக்கினை ஒரு பிராமணன் அடைய வழி விட்டுதன் மூலம் இங்கு குழுமியிருக்கும் மன்னர்களை அவமானப்படுத்தி விட்டீர்!

**துருபதன்:** இங்குள்ள அரசர்களும் அரசகுமாரர்களும் இலக்கினை எட்ட முடியாமல் தாங்களாகவே அவமானத்தைத் தேடிக்கொண்டனர். மகத நாட்டு மாமன்னரே!

**ஒரு இளவரசர்:** எங்களை ஏளனப்படுத்துவதற்காக எங்களை இங்கு வரவழைத்தீர்கள். எங்களைப் பங்கப்படுத்திவிட்டீர்கள்!

**துரு:** மன்னர் அவை சுயம்வரத்தில் பங்கேற்க அரச வம்சத்திலிருந்து மட்டுமே உரிமையுண்டு.

**கிருஷ்ணன்:** அவ்வாறு யார் சொன்னார்கள் மகத மன்னரே?

**ஜரா:** ஓர் இடையனிடம் உரையாடுவது எனக்கு இழுக்கு!

**பலராமன்:** உமது வார்த்தைகளால் துவாரகபுரி மன்னனை தூஷிக்கிறீர். அன்றொருநாள் மதுராவில் உமது படையையும் உம்மையும் எனது தம்பியும் நானும் ஓடஓட விரட்டியடித்ததை மறந்துவிட்டீரா மகதத்தின் மன்னரே?

**கிருஷ்:** அண்ணா! அவர் ஒருவகையில் நமது தாத்தா! ஆகவே மதிப்பளிப்பது நம் கடமை. தவிர சினம் கொள்வதற்கு முன் நம்மைச் சீண்டியவர் நமது கோபத்துக்கு பாத்திரதாரியா என்பதை சீர்தூக்கிப் பார்க்கவேண்டாமா? வாழ்த்தோ சாபமோ கொடுப்பதற்கு முன்னர் முக்கிய கவனம் தேவை அண்ணா.

**சிசுபாலன்:** இத்தகைய மரியாதையற்ற நடவடிக்கையை நான் என்றுமே கண்டதில்லை.

**சகுனி:** இங்கு உறவு முறை கூறி உறவாடுவதல்ல பிரச்சனை. ஒரு பிராமணனுக்கு சுயம்வரத்தில் பங்கேற்க அனுமதித்தமையால் எமக்கெல்லாம் ஏற்பட்ட அவமானம்தான் பிரச்சனை. இதற்காக சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட்டேயாக வேண்டும்.

**கிருஷ்:** எதற்காக? சுயம்வரத்தில் ஒரு பிராமணன் கலந்துகொள்ள பாஞ்சால மன்னர் அனுமதித்தது தவறா? சத்திரிய அரச பாரம்பரிய வழக்கினை வகுத்தவனும் ஒரு பிராமணன் என்பதை மறந்துவிட்டீர்களோ?

**துரியோ:** வாசுதேவ கிருஷ்ணா! எமக்கு நீர் புத்தி புகட்ட வேண்டியதில்லை.

**கிருஷ்:** எனக்கு அதுவும் நன்றாகத் தெரியும் துரியோதனா.

**பீமன்:** அண்ணா! அவனுக்கு அடிபோட்டு அடக்கவா?

**யுதிஷ்:** பலராமரைப்போல் திடீர் கோபம் வேண்டாம். தம்பி! அடக்கம்தான் அருமையான ஆயுதம்.

யுதிஷ்டிரர் கிருஷ்ணனைப் பார்க்க அவர் கொடுத்த சைகையின்படி நகுலனையும் சகாதேவனையும் வெளியேறுமாறு யுதிஷ்டிரர் பணிக்கிறார்.

**யுதிஷ்:** பீமா! தம்பி அர்ச்சுனனைக் கவனித்துக்கொள்.

**ஜரா:** பாஞ்சால மன்னரே! பிரச்சனை தீர ஒரேவழிதான்! உமது மகள் எங்களில் ஒருவருக்கு மாலையிட வேண்டும். இல்லையேல் அவளை அவள் தோன்றிய ஓமகுண்டத்திலேயே தூக்கி எறிவோம்!

**ஏனைய இளவரசர்கள்:** அவளை அக்கினி குண்டத்தில் தூக்கி எறிய வேண்டும்.

திஷ்டத்துய்மன் தங்கையைக் காப்பாற்ற முன்வருகிறான்.

**அர்ச்:** பொறுங்கள். பாஞ்சாலியைப் பாதுகாப்பது இனி என் பொறுப்பு!

**இளவரசர்கள்:** பிடியுங்கள் அவளை தீயில் போடுவோம்!

பீமன் சினமடைந்து ஒரு தூணைப் பெயர்த்துக்கொண்டு அரசர்களைத் தாக்கத் தயாராகிறான். அவர்கள் தொடர்ந்து மோதுகின்றனர்.

**பீமன்:** தைரியமிருந்தால் வாருங்கள். பார்க்கலாம்.

அரசர்கள் பின்வாங்குகின்றனர்.

**அர்ச்:** உன் மாலையைப் பெறுவதற்கான உரிமை எனக்குக் கிடைத்துவிட்டது. இளவரசி எங்கே உன் மாலையை என் கழுத்தில் சூடு.

திரௌபதி மாலையை அணிவிக்கிறாள். கர்ணன் தனது வில்லினை ஏந்துகிறான்.

**சகுனி:** அங்கதேசத்து அதிபனே பார்த்தாயா? கர்ணன் அர்ச்சுனன்மீது பாணம் தொடுப்பதற்கு ஆயத்தமான அதே கணத்தில் அர்ச்சுனனின் அஸ்திரம் கர்ணனின் வில்லைத் தாக்கி இரண்டாக உடைத்துவிடுகிறது.

**கர்ணன்:** பிராமண இளைஞனே! குரு பரசுராமர், துரோணாச்சாரியார், இந்திரன் மற்றும் அர்ச்சுனன் ஆகியோரால் இந்தக் கர்ணனின் வில்லினை இவ்வாறு உடைக்கமுடியும். நீர் உடைத்து விட்டீர். உமக்கு வித்தை கற்றுத்தந்த உமது குருவுக்கு வணக்கம் செலுத்துகிறேன்.

இவ்வாறு கூறிக் கர்ணன் மண்டபத்தை விட்டு வெளியேறுகிறான்.

**கிருஷ்:** அண்ணா! இப்பொழுது என்ன சொல்கிறீர்கள்? இவர்கள் பாண்டவர்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

**பலரா:** அத்தை குந்தியின் மைந்தர்களை மீண்டும் பார்ப்பதில் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. அப்போ அதோ அவன் என் மாணாக்கன் பீமன்தானே!

**கிருஷ்:** அது மட்டுமல்ல அங்கே தோள் கட்டிக்கப்பட்ட நிலையில் நிற்கும் துரியோதனனும் உங்கள் மாணவன் தானே!

**பலரா:** போதும்! வீண் வாதம் எதற்கு?

**கிருஷ்:** சரி அண்ணா..! (சபையோரைப் பார்த்து) துவாரகா நகரின் யாதவர்கள் சார்பாகவும் இங்குள்ள அரச குலத்தவர் சார்பாகவும் சுயம்வரத்தை சிறப்புற நடத்தியமைக்காக பாஞ்சால நாட்டு மாமன்னருக்கு வாழ்த்துக்களைக் கூறுகிறேன். இந்த இளைஞன் திரௌபதியை கைப்பிடிக்க தகுதியுடையவன் என்பதனை நிரூபித்து விட்டான். அவனை திரௌபதியும் ஏற்றுக்கொண்டாள். இதில் ஏனையோர் தலையிட வேண்டிய அவசியமில்லை. உண்மையில் அவர்களே வெட்கித் தலைகுனிய வேண்டியவர்களாவர்.

அர்ச்சுனனும் திரௌபதியும் துருபதனிடம் ஆசி பெறுகின்றனர்.

**துருப:** இறையருள் பெறுவீர்களாக....

**கிருஷ்:** பிராமண இளைஞனே! திரௌபதியை உன் இல்லம் அழைத்துச் செல்வாயாக...

-காட்சி மாற்றம்-

கானகத்தில் பாண்டவர்களுடன் திரௌபதி.

**அர்ச்:** சின்னண்ணா! அம்மாவிடம் சென்று அற்புதமான தானம் பெற்று வந்துள்ளோம் என்று திரௌபதியை அறிமுகப் படுத்துவோமா?

**பீமா:** என்ன பாஞ்சாலியை தானம் என்றா கூறப்போகிறாய்?

**அர்ச்:** அதில் என்ன தப்பு சின்னண்ணா? பாஞ்சாலி நீ என்ன சொல்கிறாய்?

**திரௌ:** தங்கள் சித்தம் எப்படியோ... அப்படியே...!

தாய்–குந்தியிடம் அர்ச்சுனனும் பீமனும் முதலில் சென்று விடுகின்றனர்.

**பீம.அர்ச்:** அம்மா..! இன்று மிகச் சிறந்த தானம் கிடைத்திருக்கிறது.

**குந்தி:** சகோதரர்களாகிய நீங்களே உங்களுக்குள் பகிர்ந்து கொள்ளுங்கள்! (திரும்பிப்பார்த்து) யார் இந்தப் பெண்?

**அர்ச்:** காம்பிலிய நகரின் இளவரசி திரௌபதி.

**பீமன்:** சுயம்வரத்தின்போது அர்ச்சுனனுக்கு திரௌபதி மாலை சூடினாள்.

குந்தியின் பாதங்களில் தொட்டு பாஞ்சாலி ஆசி பெறுகிறாள்.

**குந்தி:** அர்ச்சுனனுடன் ஆனந்தமாக வாழ ஆண்டவன் அருள்பாலிப்பான்.

**அர்ச்:** அம்மா! இவளை எங்களுக்கிடையில் பகிர்ந்து கொள்ளும்படி கட்டளை இட்டுள்ளீர்களே!

**குந்தி:** இவளைப் பகிர்ந்து கொள்ளும்படியா நான் கட்டளையிட்டேன். அர்ச்சுனா! நீ என்ன சொல்கிறாய்? தானம் பெற்றதாகச் சொன்னீர்கள். அதனைத்தான் பகிர்ந்தெடுக்கும்படி சொன்னேன். உன் மனைவியை ஒரு தானம் என்று நீ பொய் சொன்னாய்! அர்ச்சுனா! இவளை எவ்வாறு பகிர்ந்துகொள்ள முடியும்...?

யுதிஷ்டிரன், நகுலன், சகாதேவன் ஆகியோர் வருகின்றனர்.

**யுதிஷ்:** என்ன பிரச்சனை அம்மா...?

**குந்தி:** யுதிஷ்டிரா! உனது சகோதரர்கள் திரௌபதியை ஒரு தானப் பொருளாகக் கருதிவிட்டனர். பாரதப் பரம்பரைக்கு இது அடுக்குமா? நன்நெறிகளின் இருப்பிடமான நீயே கூறு பார்க்கலாம்.

**யுதிஷ்:** அம்மா! பெண்மையே சக்தி! பெண்ணில்லாமல் ஆண் இல்லை. தாய், மனைவி, சகோதரி, மகள் ஆகிய அனைவரும் பெண்ணே என்பதனால் அவளுக்கு மிகவும் உயர்வான இடம் தரப்படவேண்டும். பீமனும் அர்ச்சுனனும் பெண்ணைத் தானப் பொருளாகக் கூறி பெண்மைக்கு இழுக்குத் தேடிவிட்டனர். தாயே சிறந்த குரு என்பதனால், அவருடைய கட்டளைகள் புறக்கணிக்கப் படுவதற்கில்லை.

**பீமன்:** தங்கள் கருத்து என்ன அண்ணா?

**யுதிஷ்:** உண்மையினை அறியாமல் அம்மா தெரிவித்த கருத்துக்களுக்கும் ஏதோ காரணம் இருக்கலாம். இன்று எது நடந்தாலும் அதற்கு பண்டையத் தொடர்பு இல்லாதிருக்க முடியாது. பகிர்ந்து கொள்ளும்படி தாங்களே அறிவுறுத்தினீர்கள்.

**குந்தி:** தானம் என்பதனாலேயே அவ்வாறு சொன்னேன்.

**யுதிஷ்:** அம்மா! தங்கள் வாயிலிருந்து அந்த வார்த்தைகள் வந்தமைக்கு இறைவன் அருளே காரணமாகும். எதிர்காலத்தைப் பற்றி நம்மால் கூறமுடியுமா?

**குந்தி:** இவ்வாறு வேறு எங்காவது சம்பவங்கள் நடந்துள்ளதா?

**யுதிஷ்:** ஆமாம்! கௌதம குல பெண்ணான ஜத்லா என்ற பெண் ஏழு முனிவர்களுக்கு மனைவியாக இருந்தாள். இரணியாக்கதன் [illegible] அரசனின் சகோதரி பிசிதை [illegible] சகோதரர்களை மணந்து வாழ்ந்துள்ளாள்.

**நகுல:** அண்ணா! திருமணம் என்பதற்கும் எதிர்த்து கொள்ளல் என்ற பதத்துக்கும் வித்தியாசமே இல்லையா?

**யுதிஷ்:** [illegible] இத்தகைய சிக்கலிலிருந்து விடுபட [illegible] மார்க்கம் ஏதும் [illegible]

[illegible] வருகின்றனர்.

**கிருஷ்:** [illegible] கிருஷ்ணன் தங்களை வணங்குகிறேன்.

**குந்தி:** இறையருள் பெறுவாயாக...! [illegible] அனைவரும் நலந்தானே?

**கிருஷ்:** தங்கள் ஆசியால் அங்கு எல்லாம் நலமே! ஆனால் இங்குதான் ஏதோ நலமில்லை போலிருக்கிறது.

**குந்தி:** உண்மைதான் மகனே! நெறிமுறை பற்றிய ஒரு பெரும் சங்கடம் இங்கு ஏற்பட்டுள்ளது. எப்போதும்போல் மிகச் சிறந்த தானம் பெற்று வந்தோம் அம்மா என்று கூறினார்கள். நானும் வழக்கம்போல் பகிர்ந்துண்ணுங்கள் என்று கூறிவிட்டேன். திரௌபதி பகிர்ந்துண்ணும் பொருளாகுமா?

**கிருஷ்:** ஏன் திரௌபதியிடமே கேட்டிருக்கலாமே?

**குந்தி:** அவளால் என்ன கூறமுடியும்?

**கிருஷ்:** அவளுடைய முற்பிறவியில் மகாதேவனிடம் விசித்திரமான வரம் ஒன்றைக் கோரினாள். ஒரு சிறுகுடத்தினுள் ஏழு கடலையும் புகுத்த வேண்டும் என்பதே அவளின் கோரிக்கை. அவரால் முடியவில்லை. மற்றுமொரு கோரிக்கையின் விளைவால் வந்த வினைதான் இது.

**குந்தி:** அது என்ன கோரிக்கை...?

**கிருஷ்:** நானே கூறுகிறேனே! உண்மை, உறுதியான உடலமைப்பு, வில்வீரம், காலத்தால் அழியாத பேரழகு. மற்றும் பொறை போன்ற அம்சங்களனைத்தையும் கொண்ட ஒரு மணாளன் தனக்குத் தரவேண்டும் என்பதே மகேஸ்வரனிடம் திரௌபதி விடுத்த மறு கோரிக்கை. இத்தகைய அனைத்து சிறந்த அம்சங்களையும் ஒருங்கே கொண்ட ஒருவன் கிடைப்பது அரிது என்று இறைவன் கூறிவிட்டார். இதனால் இன்று திரௌபதி எடுத்துள்ள இப்பிறப்பில் யுதிஷ்டிரனை முதலாவது அம்சத்துக்கு இலக்காகவும் இரண்டாவது உறுதியான உடலுக்கு பீமனையும், சிறந்த வில்லாளனாக அர்ச்சுனனையும் அழகுக்கு இலக்கணமாக நகுலனையும் பொறுமையின் இலட்சணமாக சகாதேவனையும் அவள் தன் கணவர்களாக வரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானாள். நண்பர்களே! ஏன் திரௌபதியை முறைத்துப் பார்க்கிறீர்கள். இது இறைவன் அவளுக்கு அருளிய வரம். உங்கள் தாயாகிய குருவிடம் பொய் கூறினீர்கள். இதற்கு அவர் பாத்திரவாளியல்ல. அவருடைய வாயால் வந்த வார்த்தைகளுக்கு மறுப்புத் தெரிவிக்காமல் இன்று முதல் அன்னாரின் கட்டளைப் படி நடக்க வேண்டியது உங்கள் பெரும் கடமையாகும்.

இந்நடவடிக்கைகளை திஷ்டதுய்மன் மறைந்திருந்து பார்த்துவிட்டு வெளியேறுகிறான்.

<u>பின்னணிப் பாடல்:</u>

*பாஞ்சால நாட்டின் பேரெழிலரசி*
*பெற்றனள் ஒருவரம் பரமனை வேண்டி.*
*தர்மத்திருவுரு தளர்விலாப் புயபலம்*
*நிகரிலா வில்லின் வீரனுமாம் பெரும்*
*பேரழகனுமாய் பொறையின் சின்னமாய்*
*பொருந்திய ஒருவனை அடைந்திட நினைத்தே*
*அருந்தவமியற்றியே அவனருளீட்ட*
*தெரிந்தே ஐவரை அடைந்திடு வென்றனன்.*

பாஞ்சால நாட்டு அரண்மனை– திஷ்டதுய்மன் தந்தை துருபதனை காண்கிறான்.

**துருப:** என்ன? உண்மையாகவா? பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் அழியவில்லையா? பிராமண வேடத்தில் வந்திருந்தது பாண்டவர்கள்தானா? அர்ச்சுனனை மனதில் நினைத்தே அந்தப் பெறியினை இலக்காக அமைத்தேன். என் எண்ணம் வீண் போகவில்லை. மகனே! மகிழ்ச்சியுடன் இன்றி சோகமாக இருக்கிறாயே?

**திஷ்ட:** அப்பா! மகாராணி குந்தியார் பாண்டவர்கள் ஐவருக்கும் திரௌபதியை முடித்து வைக்கத் திட்டமிடுகிறாள்.

**துருப:** என்ன? எனது மகள் பிரிக்கப்படத்தக்க பொருளல்ல என்பதை மகாராணி குந்தி அறியமாட்டாரா? அவ்வாறானால் திரௌபதி அர்ச்சுனனை ஏற்கலாகாது என்று கட்டளையிடப் போகிறேன்.

**திஷ்ட:** அப்பா! கிருஷ்ணர் அங்கு வந்தார். திரௌபதி முற்பிறப்பில் மகேஸ்வரனிடம் கோரிய வரத்தினால் ஏற்பட்ட பயன் இது என்றும் இதனை அவன் நிறைவேற்றியே ஆகவேண்டும் என்றும் கூறினார் அப்பா.

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரனிடம் அமைச்சர் விதுரர் வருகிறார்.

**விதுர:** வணக்கம் மகாராஜா!

**திருத:** விதுரரே வாரும்! மிக்க மகிழ்ச்சியுடன் காணப்படுகிறீரே!

**விதுர:** கம்பிலிய நகரிலிருந்து நல்ல செய்தி கிடைத்திருக்கிறது.

**திரு :** துரியோதனன் சுயம்வரத்தில் திரௌபதியின் கை பிடித்துவிட்டானா?

**விதுர:** இல்லை. துரியோதனன் வெற்றி பெறவில்லை.

**திருத:** அப்போ! துச்சாதனன் வென்றானா? அவனும் துரியோதனனைப் போன்ற தீரன் அல்லவா?

**விதுர:** சுயம்வரப் போட்டியில் உங்கள் அருமைத் தம்பி பாண்டு மன்னரின் மகன் அர்ச்சுனன் வென்று திரௌபதியைக் கரம் பிடித்தான்.

**திருத:** அப்படியா... விதுரா அவர்கள் ஐந்து பேருமா?

**விதுர:** மகிழ்ச்சியான சிறப்புச் செய்தி அவர்கள் சாகவில்லை- உயிருடன் இருக்கிறார்கள் என்பதுதான்!

**திருத:** உண்மையில் மிக்க மகிழ்ச்சியான தகவல்தான். இப்போ நான் என் மூதாதையர்களின் சாபத்துக்கு ஆளாக வேண்டியதில்லை!

**விதுர:** அரக்கு மாளிகை விபத்தில் தங்களுக்கு எதுவித பங்கும் இல்லை என்பதனால் மூதாதையர்களின் முனிவுக்கு தாங்கள் பாத்திரவாளியாக முடியாது. இது நாட்டு மக்களுக்கும் தெரியும். விட்ட தவறுகளை நிவர்த்தி செய்ய அவர்களை திரௌபதியுடன் அழைத்து மரியாதை செய்யவேண்டும். உடனே கம்பிலிய நாட்டுக்குத் தூதனை அனுப்புங்கள். அவர்களை மகிழ்வுடன் அழைத்து ஆசி கூறத் துடிப்பதாக அத்தூதன் அவர்களிடம் தகவல் கூறட்டும்.

**திருத:** அரக்கு மாளிகை சூழ்ச்சியில் எனக்குப் பங்கேதுமில்லை என்று அவர்கள் நம்பவேண்டுமே விதுரா!

**விதுர:** யுதிஷ்டிரன் நம்புவான். அவன் நம்பினால் ஏனைய நால்வரும் தாயும் ஒப்புக்கொள்வார்கள்.

**திருத:** இன்னும் ஏன் இங்கு நிற்கிறாய் விதுரா? உடனே தகவல் அனுப்பும். குந்தியையும் புத்திரர்களையும் மருமகளையும் பார்க்க பெரும் ஆவலாக இருப்பதாக அவர்களுக்குச் செய்தி அனுப்பு. தம்பி பாண்டு மாண்டபின்னர் ஏற்பட்ட துயரத்துக்குப் பின்னர் இன்றுதான் உண்மையில் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

-காட்சி மாற்றம்-

பீஷ்மரின் மாளிகை– அஸ்திரங்களுக்கு அவர் மெருகூட்டுகின்றார்.

**விதுர:** வணக்கம் பெரியப்பா!

**பீஷ்ம:** வாழ்க விதுரா! எங்கிருந்து வருகிறீர்?

**விதுர:** மகாராஜாவிடமிருந்து..! அதுசரி என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?

**பீஷ்ம:** வில்லாளன் எப்போதும் அவனுடைய அம்புகளில் கவனமாக இருக்க வேண்டுமல்லவா?

**விதுர:** சோகத்தில் காணப்படுகிறீர்களே பெரியப்பா!

**பீஷ்ம:** எமது சமுதாயத்தின் நலன்களைக் காக்கும் தூண்கள் எம் கண்முன்னே கழன்று போய்விட்டன. நாம் பார்த்துக் கொண்டேதான் இருந்தோம். அஸ்தினாபுரத்தின் கிரீடம் ஓர் எரிமலையில் நுழைவாயிலில் வைக்கப்பட்டுள்ளது. எரிமலை எப்போது வெடிக்குமோ தெரியாது. காப்பாற்ற முடியாவிட்டால் எல்லாமே அழிந்துபோகும். சமுதாயத்தின் சகல நலன்களும் அருகிப்போய்விட்டதாகவே தென்படுகிறது. எல்லாம் அழிந்துபோன பின்பே புதிய சமுதாயம் உதயமாகும். எனது தந்தையார் எனக்குத்தந்த வரம் இன்று எனக்கொரு சாபம் போன்றே தென்படுகிறது. எனது சிறியதாயாருடன் நானும் கானகம் ஏகியிருக்க வேண்டியவன். அவர் பிரச்சனைகளையும் சகல துன்ப துயரங்களையும் என் தோளில் சுமத்தி விட்டுப் போய்விட்டார்.

**விதுர:** ஆனால் பெரியப்பா...!

**பீஷ்ம:** கம்பிலியாவுக்குச் சென்று பாண்டவர்களை அழைத்துவரும்படி மன்னர் உன்னிடம் கோரியுள்ளார் என்று அறிகிறேன். அதனால்தான் எனது அம்பையும் அம்புறா துணியையும் எடுத்து தூசுதட்ட வேண்டியேற்பட்டது.

**பீஷ்ம:** ஒரு நாட்டுக்கு இருவர் முடிக்குரியவர்களாக முடியுமா விதுரா?

**விதுர:** நான் இதனையிட்டு யோசிக்காமலில்லை பெரியப்பா! மகாராஜாவின் விருப்பம் எவ்வாறாக இருந்தபோதிலும் யுதிஷ்டிரன்மீது மக்கள் வைத்துள்ள அபிமானத்தை அவரால் கட்டுப்படுத்த முடியாது.

**பீஷ்ம:** சிறு பிள்ளைத்தனமாகப் பேசாதே! திருதராட்டிரன் தன் மகன்மீது வைத்துள்ள பாசம் அவருடைய நோக்கை மறைத்துவிட்டது. என்னைவிட அவர் சகுனியையே நம்புவார்.

**விதுர:** அப்போ பாண்டவர்கள் இங்கு வராமல் தடுக்கட்டுமா...?

**பீஷ்ம:** நடைபெறப்போகும் சம்பவங்களை நீயோ நானோ தடுக்க முடியாது விதுரரே!

**விதுர:** துரதிஷ்டவசமாக அதுதான் உண்மை!

**பீஷ்ம:** அது தவறான அதிஷ்டமல்ல. எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் சம்பவங்கள் கடந்த காலத்தின் விளைவுகளாலானவை. இன்று நடப்பவை அதிஷ்டவசமானதல்ல. எமது கடந்த காலத்தின் பலனே! நான் அஸ்தினாபுரியின் இறந்தகாலம்! கம்பிலியா போய் பாண்டு புத்திரர்களை அழைத்துவா. அஸ்தினாபுரியின் அரசியல் சூழ்நிலை சாதகமானதாக இல்லை என்பதை யுதிஷ்டிரனுக்கு நன்கு விளக்கிக்கூறிவிடு.

-காட்சி மாற்றம்-

துரியோதனன் அரண்மனை. அவனுடன் கர்ணன், துச்சாதனன் மகிழ்ச்சியாக இருக்கும்போது சகுனி அமைதியிழந்தவனாகப் பிரவேசிக்கிறான்.

**துரியோ:** எனது கதாயுதத்தை எடுத்து சுழற்றினேன். அவன் ஓட்டம் பிடித்தான். என்னவானானோ தெரியவில்லை.

எல்லோரும் சிரிக்கின்றனர்.

**துரியோ:** அவனிடம் கூறினேன். அவன் கேட்கவே இல்லையே!

**சகுனி:** மருமகனே துரியோதனா! உன்னைப் போல் ஒரு முட்டாள் பிறந்திருக்க மாட்டான். அழவேண்டிய வேளையில் சிரித்து மகிழ்கிறாய். அவர்கள் அங்க தேசத்தை அபகரிக்கப் போவதில்லை. துச்சாதனன் ஒரு இளவரசன் மட்டுமே! அவர்களுக்கு எந்த நஷ்டமும் ஏற்படப் போவதில்லை! ஆனால் உன்னுடைய ராஜ்யம் பறிபோகப் போகிறதே!

**கர்ண:** யார் மாமா அவர்கள்..?

**சகுனி:** உயிருடன்தானிருக்கிறார்கள். நலமாக இருக்கும் அவர்களை- அர்ச்சுனன் சுயம்வரத்தில் வென்ற திரௌபதியுடன் அழைத்துவர உன் அப்பா ஆள் அனுப்பிவிட்டார்.

**கர்ண:** என்ன அர்ச்சுனனா....?

**சகுனி:** ஆமாம் அங்கதேச அதிபதியே! அன்று நேரடியாக அவர்களுடன் மோதுவதற்கு முற்பட்டாயே அவர்கள் தான்!

**துரியோ:** சரி மாமா! அவர்கள் உயிருடன் மீண்டால் என்ன? நான்தான் பட்டத்துக் குரியவனாயிற்றே! என்னை என்ன செய்துவிடப் போகிறார்கள்?

**சகுனி:** விளையாட இது நேரமல்ல. உனது தந்தையின் தடுமாற்றத்தை நீ அறியமாட்டாய்.

**கர்ண:** அப்போ என்ன செய்யவேண்டும்?

**சகுனி:** திருதராட்டினர் பாண்டவர்களையும் பாஞ்சாலியையும் அழைத்துவர விதுரரை அனுப்பிவிட்டார். வந்ததும் மன்னரும், உனது அம்மா-எனது அன்பான சகோதரியும் அவர்களை அன்பாக வரவேற்று அஸ்தினாபுரியின் கிரீடத்தை அவர்களிடம் தூக்கிக்கொடுக்கப் போகிறார்கள்.

**துரியோ:** நான் உயிருடன் இருக்கும்போது அவ்வாறு நடக்கவிடமாட்டேன்.

**கர்ண:** உங்கள் உள்ளத்தில் என்ன உண்டு என்பதை நான் அறிவேன். வீர சத்திரியர்கள் போல் படையுடன் சென்று அவர்களை எதிர்கொண்டு வெற்றி யீட்டுவோம்.

**சகுனி:** ஆமாம் திரௌபதியின் சுயம்வரத்தில் அவன் உன் வில்லை உடைக்க நீ அவனை வாழ்த்தி விட்டு வந்ததை நான் அறிய மாட்டேனா?

**கர்ண:** ஒரு பிராமணன்தானே என்ற அறியாமையில் ஆயத்தமின்றி இருந்துவிட்டேன். துரியோதனா! நீங்களெல்லாம் இங்கேயே இருங்கள்! நான் மட்டும் போய் அவர்களைத் தடுக்கிறேன்.

**சகுனி:** பொறுமையாக இரு கர்ணா!

**துரியோ:** எனது தோல்வியைச் சுட்டிக் காட்டுவதற்கு முன்னர் நீங்கள் கண்ட தோல்விகளையிட்டு சற்று யோசியுங்கள் மாமா. பாண்டவர்களின் பால்ய பிராயத்திலிருந்து அவர்களுக்கு முடிவு கட்ட முனைந்தீர்கள். பீமனுக்கு நஞ்சூட்டினீர்கள். அவன் முன்பைவிட அதிபராக்கிரமசாலியாக மீண்டான். யுதிஷ்டிரனை பட்டத்துக்குரிய இளவரசனாக்க வொட்டாமல் தடுக்க முயன்று தோல்வி கண்டீர்கள். அரக்குமாளிகையில்

(18ம் பக்கம் பார்க்க)



www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்



4 3 6 3 3 3 1

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு






Kala



JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு


4 3 3 6 8 6

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# உல்லாசமாய் ஒரு உணவகம்



# கண்ணுறங்கப் போகுதய்யா செல்லக் குரங்காரே!





## தினமுரசு வாரமலர்




# செஞ்சரி/போட்ட இரட்டையர்



இரட்டையர்களுதான். ஆனால் ஒட்டிப்பிறந்தவர்களல்ல. ... பிறந்தவர்கள். இப்போது இருவருக்கும் வயது 100. இருவரும் சிறுவர் ... பாடல்களைப் பாடுவதில் பிரசித்தி பெற்றவர்கள்.

# சுழன்றாடும் மங்கை!



பனிச் சறுக்கு
விளையாட்டு
பார்ப்போருக்கு
பரவசமளிப்பதாக
இருக்கும். ஆனால்
இந்த விளையாட்டில்
பயிற்சிபெற்று
பாராட்டுகளைப்
பெறுவதோ
பரிசுகளைப்
பெறுவதோ அத்தனை
சுலபமானதல்ல. இங்கு
நாட்டாஷாமிஷ்குட்டியோ
நொக் ஆர்ரர்
டிமிற்றியேவ் இருவரும்
பனிச்சறுக்கு
நடனமாடும்போது
பிடிக்கப்பட்ட படம்.
பாவையவள்
சறுக்கிவிட்டாள் என்று
நினைத்து விடாதீர்கள்.
சறுக்குவது போல் ஒரு
சாகசம்தான் இது.
சிறுவயதில் இருந்தே
ஒரு ரப்பர் மாதிரியாக
உடலைத் தயார்படுத்தும்
பயிற்சி உலகம் வியக்க
சாகசம் செய்ய
வைக்கிறது.
மனித உடல் அற்புதம்.
முயன்றால் முடியாதது
எதுவுமில்லை.

# வதை பல செய்யும் வலிய யுத்தம்!

வதை பல செய்யும்
உலக யுத்தம்
வெங்கொடுமை சாக்காட்டில்
உண்பதற்கு எதுவுமில்லை.
மனிதாபிமானம் மரித்துப்போக
விறகாய் காய்ந்து
சருகாய் உதிரும்
மனித உயிர்கள்.

ஆயுதங்கள் நடத்துகின்ற
அக்கிரம விழாவுக்கு
வெளியே தெரியும்
இந்த-
மனித விலா எலும்புகள்
தோரணங்களாகலாம்.

யுத்தத்திற்கு
வெட்கமில்லை.
நிர்வாணமாய்-தன்
அசிங்க உடல் காட்டும்.

வெட்கமில்லா
யுத்தத்தின் விஷக்கரங்கள்
அனைத்தும் பறித்து
மனிதனை தூக்கி
வீதியில் எறியும்!

எலும்பாய்
சதையாய்
காவு கேட்கும்
யுத்தம்
இறுதியில
மனிதனையும்
தின்னும்.



யுத்தம் தவிர்
ஆதிக்க சித்தம்
அறு!

மனித இரத்தமும்
பிணவாடையும்
நாகரிகத்தின்
முகச் சுளிப்பை
பெறுவது நிஜம்!